பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 14 செவ்வாய்க்கிழமை (29.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 033

# விசாரணைக்குக் கூட்டிச்செல்லப்பட்ட அகதிகளில் 738 பேர் விடுவிக்கப்படுவர்

## சட்டமா அதிபர் மொகான் பீரீஸ் தெரிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 29

வன்னி இறுதிப் போரின் பின்னர், நிவாரணக் கிராமம் என்று அழைக்கப்படும், வவு னியா அகதி முகாம்களில் தங்கியிருந்த வேளை, விசாரணைக்கெனப் படையினரால் கூட்டிச்செல்லப்பட்டவர்களில் 738 பேர் இன்னும் சில நாள்களில் விடுவிக்கப்படுவர். சட்டமா அதிபர் மொகான் பீரீஸ் இத்தவலைத் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட உள்ளவர்கள் எவ்வித குற்றச்செயல்களிலும் சம்பந்தப்படாதவர்கள் என்றும், இதற்கு முன்னரும் இந்த வகையில் நூறு பேர் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் சொன்னார்.

நிவாரணக் கிராமங்களில் இருந்த போது விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டவர்களில் 700 பேரும் குற்றப் புலனாய்வுத்துறையினால் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களில் 38 பேரும் இவ்வாரம் விடுவிக்கப்பட உள்ளதாக சட்ட மா அதிபர் கூறினார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைத்து விசாரணை செய்யப் பட்டு வருபவர்களில் 55 பேர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுவிக்கப்பட்டவர்கள் எவ்விதமான குற்றச்செயல்களிலும் சம்பந்தப்படாதவர்கள் என்பது நிரூபணமாகியிருப்பதாகவும் ஏற்கனவே 100 பேர் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் சட்டமா அதிபர் கூறினார்.

தடுத்து வைத்து விசாரணை செய்பவர்களைத் துரிதமாக விடுவிப்பதோடு ஒரு மாதத்தில் குறைந்தது 100 பேரையா வது

(20ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் முடிந்து 4 நாள்களில் முகாம்களுக்கு மூடுவிழா; 2 மாதங்களில் மீள்குடியேற்றம் முடிந்துவிடும்

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்று நான்கு நாள்களில் வடக்கில் உள்ள அகதி முகாம்கள் அனைத்தும் மூடப்படும் என்றும் அகதிகள் அனைவரும் இரண்டு மாதங்களில் முற்றாக மீள்குடியமர்த்தப்பட்டு விடுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதின் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் இருந்து பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டு மக்கள் அனைவருக்கும் முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவரின் செயற்பாட்டால் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் அதிக நன்மையடைந்தனர்.



ஒரு காலத்தில் புலி

(20ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போனவர்களை மீட்டுத் தருவதாக ஏமாற்றுவோர் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

## தகவல் தருமாறு பலாலி படைத்தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாண, டிசெ. 29

காணாமற்போனவர்கள் இராணுவத்தினரிடம் உள்ளனர் என்றும் அவர்களை விடுவித்து ஒப்படைக்கலாம் என்றும் கூறி பொதுமக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் கும்பல் குறித்து எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு பணம் பறிக்கும் கும்பல் குறித்து உடனடியாக தகவல் தருமாறு படையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக படைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்களைப் பயமுறுத்தி ஒருசிலர் கப்பம்பெறுவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

(20ஆம் பக்கம் பார்க்க)

# இனிமேல் இந்தியா செல்வதற்கு சிவாஜிலிங்கத்துக்குத் தடை!

கொழும்பு, டிசெ. 29

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இனிமேல் இந்தியாவுக்கு செல்ல முடியாதவாறு அவரது விசா அனுமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என 'த டைம்ஸ் ஒப் இந்தியா' இணையத்தளம் தெரிவித்துள்ளது.

சிவாஜிலிங்கம் அண்மையில் டுபாயில் இருந்து சென்னை வந்த வேளையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து இந்தியக் குடிவரவுத்துறை அதிகாரிகளால் நாடு கடத்தப்பட்டார்.

இந்த நிலையில் அவர் இந்திய மத்திய அரசின் சிறப்புக் கட்டளையின் அடிப்படையிலேயே நாடுகடத்தப்பட்டார் எனவும் அவருக்கான விசா அனுமதி தடைவிதிக்கப்பட்டுள்ளது எனவும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் அவர் வாடிக்கையாக சென்னைக்குச் சென்று வந்துக்கொண் டிருந்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக் குற்றச்சாட்டை ஆராயும் குழுவின் கால எல்லை நீடிப்பு

## மேலும் 4 மாதங்கள் வழங்கினார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.29

விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் சரணடைய வந்தவேளை சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று குற்றம்சாட்டப்படுவது குறித்து ஆராயுமாறு, யுத்தக் குற்ற அறிக்கை தொடர்பாக விசாரித்துவரும் குழுவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பாக அமெரிக்கா சமர்பித்த அறிக்கையை ஆராயும் இலங்கைக் குழுவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் நான்கு மாத காலம் வழங்கியுள்ளார்.

முன்னர் இக்குழுவிற்கான கால எல்லையை டிசெம்பர் 31 ஆக ஜனாதிபதி அறிவித்ததிருந்தார்.

எனினும் தற்போது அந்தக் குழுவிற்கு ஜனாதிபதி மேலும் நான்கு மாத கால அவகாசத்தை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

# மன்னாரைச் சேர்ந்த குடும்பஸ்தர் கொழும்பில் ஞாயிறன்று கைது

கொழும்பு, டிசெ. 29

கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சந்தேகத்தின் பேரில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஒரு குழந்தையின் தந்தையுமான வசந்தராசா வசந்தரூபன் என்றழைக்கப்படும் நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

மேலும் வசந்தரூபனை 4ஆம் மாடியில் வைத்து விசாரணை செய்து வருகின்றனர் என புலனாய்வுப் பிரிவினர் கடிதம் மூலம் வசந்தரூபனின் மனைவிக்கு தெரியப்படுத் தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை குறித்த விடுதிக்கு வந்த இராணுவப்புலனாய்வுப் பிரிவினர் அவரைச் சோதனைக்குட்படுத்தியதுடன், அச்சுறுத்திவிட்டுச் சென்றனர் எனவும் மறுநாள் வந்து கைது செய்தனர் எனவும் கூறப்படுகிறது.

# மழை தொடருமாம்

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் பல பாகங்களிலும் தொடர்ந்தும் ஓரிரு நாள்களுக்கு மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனக் கால நிலை விசேட நிபுணர் சமிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

பிற்பகலிலும், மாலையிலும் தற்காலிகமாகக் கடுங்காற்று வீசுவதோடு இடி - மின்னல் தாக்கமும் காணப்படுவதால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, கிழக்கு, தெற்கு கடற் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் 30 தொடக்கம் 40 வரையான கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதோடு கடல் கொந்தளிப்பும் ஏற்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையினால் நிறைந்துவழியும் பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரத்தின் சில வான் கதவுகள் திறந்து விடப்பட்டமையால் சுங்காவில் தொடக்கம் சோமாவதி வரையான பாதைகள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. (அ-சி)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் 'நிக்கொட்' நிறுவனத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட மருந்துக்களஞ்சியம், வைத்தியர் விடுதி ஆகியவற்றின் திறப்புவிழா நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து மருந்துக்களஞ்சியக் கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், பின்னர் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்வதையும் முதல் இரு படங்களில் காணலாம். ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்:- சுந்தா, கர்ணன்)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் நேற்று களஞ்சிய, விடுதிக்கட்டடங்கள் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் "நிக்கொட்" திட்டத்தின் கீழ் 55 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது மருத்துவக் களஞ்சியம், வைத்திய நிபுணர்களுக்கான விடுதி என்பன சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோரால் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டன.

இத் திறப்பு விழாவுக்கு வருகை தந்த அமைச்சர், ஆளுநர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஏ.இ. ஞானசோதி, "நிக்கொட்" திட்டப்பணிப்பாளர் ஆர்.சிவரூபன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன் ஆகியோரை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஆறுமுகம் கேதீஸ்வரன், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர். எஸ். ஜெயராஜா ஆகியோர் மாலைசூட்டி, திலகமிட்டு, வெற்றிலை கொடுத்து வரவேற்றனர்.

தொடர்ந்து வைத்தியசாலை பிரதான வாசலில் இருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக கட்டடங்கள் அமைந்த இடத்திற்குப் பிரமுகர்கள் மேளதாளங்களுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். வீதியில் உள்ள வர்த்தகர்கள் பூரண கும்பம் வைத்து மலர்மாலைகளை அவர்களுக்கு அணிவித்தனர்.

தொடர்ந்து பொது மருந்துக் களஞ்சியத்தையும் அதன் பெயர்ப்பலகையையும் அமைச்சரும், ஆளுநரும் திறந்துவைத்தனர். பின்னர் வைத்திய நிபுணர்களுக்கான விடுதியை ஆளுநர் திறந்துவைத்தார்.

இறுதியாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர், ஆளுநர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

(ஒ-236)

## மந்திகையில் திருவாசக முற்றோதல்

வடமராட்சி,டிசெ29

புலோலி வட.கிழக்கு மந்திகை அருள் முருகன்கோவிலில் எதிர்வரும் 3 ஆம் திகதி திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

இந்த திருவாசக முற்றோதல் நிகழ்வில் பக்தர்களை கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகம் கேட்டுள்ளது. (ஒ-23[illegible])

# கிளிநொச்சியை மீளக்கட்டி எழுப்புவதற்கு புதிய பிரஜைகள் சமூக அமைப்பு உதயம்

கிளிநொச்சி,டிசெ.29.

கடந்தகால யுத்த அழிவு, இடம்பெயர்வு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் இழப்புக்களில் இருந்து மீள எழும் கிளிநொச்சி மக்களின் வாழ்வுக்காகவும், கிளிநொச்சியை மீளக்கட்டி எழுப்புவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்குடன் "கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கான பிரஜைகள் சமூகம்" என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் வாழும் மக்களுடனும், புலத்தில் வாழும் தமிழ் மக்களின் உதவியுடனும் இவ்வமைப்பு ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களையும் இணைத்து தனது பணியை ஆரம்பிக்கவுள்ளது.

கிளிநொச்சியின் மீள் எழுச்சியில் மக்களின் சொத்துக்கள் சூறையாடப் படுவதை உடன் நிறுத்துதல், எல்லா மக்களையும் வேகமாகக் குடியமர்த்துதல், சிறைகளில் வாடும் உறவுகளை விரைவாக விடுவித்தல் ஆகிய நோக்கங்களுடன் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிரதேசசபையை நகர சபையாக்குதல், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தை உடன் செயற்பட வைத்தல், திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய கல்வி நிறுவனத்தின் கிளைகளை நிறுவிக் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

மீளக்குடியேறும் மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுத்தல்.

இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய பணிகளை இந்த அமைப்பு முன்னெடுக்கவுள்ளது.

கடந்த 13ஆம் திகதி முதல் இந்த அமைப்பு செயற்படத் தொடங்கிவிட்டது.

இதன் தலைவராக முன்னாள் கிளி. முல்லை. பிராந்திய ஆணையாளர் சு.தர்மரத்தினமும் உபதலைவராக கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் வண.பிதா பெனற்றும் செயலாளராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் செயலாளரும், அதிபருமாகிய சி.சிறீதரனும், உப செயலாளராக அ.வே. இராமலிங்கிதனும், பொருளாளராகக் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் நா.வை. குகராஜனும் தெரிவாகியுள்ளனர்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் பொன். நித்தியானந்தம் உட்பட 10 பேர் இயக்குநர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பின் சுதந்திரமான தனித்துவமான அமைப்பாளர்களாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசா, கொழும்பு றோயல் கல்லூரி யின் பிரதி அதிபர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோரும் தெரிவாகி செயற்படுகின்றனர்.

(ஒ-01)

## நீதிபதிக்கு பிரிவுபசாரவிழா

யாழ்ப்பாணம்,டிெ.29

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் அ. பிறேமசங்கருக்கு சாவகச்சேரி நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களால் நேற்று பிரிவுபசாரவிழா நடத்தப்பட்டது.

மாவட்ட நீதிமன்ற பதிவாளர் கே. சிவராம் தலைமையில் நீதிமன்றக் கட்டடத்தில் பிரிவுபசாரவிழா இடம்பெற்றது.

(ஒ-207)

# பாதுகாப்பு நடவடிக்கைகளை தளர்த்த நேற்று படை அதிகாரியுடன் பேச்சு

### அமைச்சர், ஆளுநரின் வடமராட்சி விஜயத்தின் போது

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். குடாநாட்டில் யுத்தம் காரணமாக பாதுகாப்புக் கருதி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை பொது மக்களின் பாவனைக்கு வசதியாக படிப்படியாக தளர்த்தும் நடவடிக்கைகளை உரிய தரப்பினருடன் கலந்துரையாடி சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகிறார்.

வடமராட்சிப் பிரதேசத்திற்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடமகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியும் மேற்படி விடயம் தொடர்பில் வரணி வடக்கு கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயகாவுடன் கலந்துரையாடினர்.

யாழ். குடாநாட்டில் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படாதிருக்கும் பிரதேசங்கள், பொதுமக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் தடைகள் மற்றும் வீதிச் சோதனைகள், காவலரண்கள் என்பன அண்மைய காலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி மேற்கொண்டு வ்ரும் நட்வடிக்கைகளையடுத்து அகற்றப்பட்டு வருவதுடன் வடமராட்சி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டு பொதுமக்களுக்கு ஏற்றவகையில் இலகு படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடமராட்சிப் பிரதேச கட்டளை அதிகாரியுடன் அமைச்சர் [illegible]றும் ஆளுநர் சந்திரசிறி நேற்றுக் கலந்துரையாடியதையடுத்து வடமராட்சிப் பகுதியில் இன்னும் சில தினங்களில் மேலும் சில தடைகள் கட்டம் கட்டமாக அகற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

# அமைச்சர் முரளிதரனுடன் இணைந்தே செயற்படுகிறாராம் பிள்ளையான்

கொழும்பு டிசெ.29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக தானும் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் இணைந்து பணியாற்றி வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வெற்றி பெறவேண்டும் என்பதே இருவரதும் ஒரே நோக்கமாகும் எனத் தெரிவித்த முதலமைச்சர் இருவருக்கும் இடையில் பிணக்குகள் நிலவுவதாக வெளிவந்துள்ள செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இருவரும் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் ஜனாதிபதித்தேர்தலில் ஒரே நோக்கத்துக்காக பாடுபடுவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது எனத்தெரிவித்த முதலமைச்சர் சந்திரகாந்தன் கடந்தகாலங்களில் சில கருத்து முரண்பாடுகள் நிலவியபோதிலும் தற்பாது இணைந்தே செயற்படுவதாகக் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் மக்களின் ஏகோபித்த ஆதரவை ஜனாதிபதி மகிந்தராஜபஷவுக்குப் பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாகவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மொறட்டுவ மரத்தளபாடங்கள் மலிவு விற்பனையும் கண்காட்சியும்

புத்தாண்டு, தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க 29.12.2009 முதல் 30.01.2010 வரை இவ்விற்பனையும் கண்காட்சியும் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். அலுமாரி, சோக்கேஸ், கதிரைகள், கட்டில்கள், சாப்பாட்டு மேசை மற்றும் வீட்டுத்தளபாடங்கள்



இடம்:- முதலாம் குறுக்குத்தெரு (இலங்கை வங்கி மேற்தரக்கிளைக்கு அருகாமையில் வேம்படிச் சந்தி)

சாவகச்சேரி.......! கொமர்ஷல் வங்கி அருகாமையில்

மிகவும் தரமான

வீட்டுத்தளபாடங்களை மலிவு விலையில் பெற

இன்றே நாடுங்கள்

மரத்தளபாட உற்பத்தியாளர் சங்கம், மொறட்டுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அமைச்சர் சந்திரசேகரனின் கயிறு

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் விடுத்திருக்கும் ஓர் அறிக்கை நகைப்புக்கிடமானதாக அமைந்திருக்கின்றது.

தமிழர் தரப்புகளிடையே ஓர் அவசர கலந்துரையாடலுக்கான முயற்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் முன்னெடுக்க வேண்டும் என்ற சாரப்பட ஒரு கோரிக்கையை முன்வைத்து, அத்தரப்போடு சேர்ந்து செயற்பட அழைப்பு விடுப்பவர் போல அந்த அறிக்கையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் சந்திரசேகரன்.

*''தற்போதைய உடனடிப் பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்தாமல், வடக்கு - கிழக்கு, மலையக, முஸ்லிம் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வு பற்றித் தொலைநோக்கோடு, எமது கோரிக்கைகளைத் தெளிவாக முன்வைக்கவேண்டிய அவசியமும் இக்கால கட்டத்தின் அவசரத் தேவையாகும். இதற்கான அவசர பேச்சுவார்த்தைக்கான அடித்தளத்தை அமைக்க சம்பந்தன் முன்வந்தால் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்பு என்ற ரீதியில் நாமும் அவருடன் கைகோர்க்க வேண்டியது எமது கடமையாகின்றது.''* - என்று குறிப்பிட்டிருக்கின்றார் சந்திரசேகரன்.

*''........., அவசரமாகத் தமிழ்த் தலைமைகள் ஓரிடத்தில் அமர்ந்து பேசவேண்டியது காலத்தின் கட்டாயமும் வரலாற்றின் நிர்ப்பந்தமுமாகும். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனதில் கொண்டு, தமது அரசியல் கடமையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இதற்கான முழு ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் செய்வதற்கு மலையக மக்கள் முன்னணி தயாராக இருக்கின்றது.*

*''அனைத்துச் சிறுபான்மை அமைப்புகளும் அணி வகுத்து ஒரு சக்தியாக மாறினால் எதிர்கால சரித்திரத்தை நாமே உருவாக்குவோம். இந்தக் காலகட்டத்தில் நாம் தவறு விட்டால் எமது தலைவிதியை யாரோ எழுதி விட்டுப் போய்விடுவார்கள்.''* - என்றும் மிகுந்த கவலையோடு(?) குறிப்பிட்டிருக்கின்றார் அமைச்சர் சந்திரசேகரன்.

அனைத்துச் சிறுபான்மை இனங்களும் ஓர் அணியில் ஐக்கியமாகிச் செயற்படுவது பற்றிய அமைச்சர் சந்திரசேகரனின் அறைகூவல் கேட்க - வாசிக்க - இனிமையாகத்தன் இருக்கின்றது.

ஆனால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிப்பீடத்தில் இருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே ஆதரிப்பது என்ற தமதும் தமது கட்சியினதும் இறுதியான - உறுதியான - முடிவைக் கடந்த 19 ஆம் திகதி எடுப்பதற்கு முன்னர், இத்தகைய அழைப்பை அவர் விடுத்திருந்தால் அதன் அர்த்தமும் தாற்பரியமும் வேறாக இருந்திருக்கும்.

. அதைவிடுத்து, தாம் ஒருபக்கம் அணிசேர்வதை உறுதிப்படுத்தி, இறுதி செய்துவிட்டு, பின்னர் எல்லாத் தமிழர் தரப்புகளையும் ஓர் அணிக்குள் கொண்டுவருவது பற்றி அவர் பிரபலாபித்தால் அதன் அர்த்தம் என்ன? தாம் சேர்ந்திருக்கும் அணிக்கு ஆள் பிடிக்கும் வேலையை அவர் முன்னெடுக்கின்றார் என்பதுதானே அர்த்தம்...........? அதற்கு ஏன் சிறுபான்மைத் தரப்புகளின் ஐக்கியம் என்று பொய் முலாம் பூச முற்பட வேண்டும்? தாம் இப்போது உறுதிப்படுத்தியிருக்கும் அணியின் வழிகாட்டிகள், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உங்கள் வழியில் எங்களுடன் இழுத்து வந்து சேருங்கள்!' - என்று இட்ட கட்டளையையா இப்படி 'சிறுபான்மைத் தரப்புகளை இணைக்கும் முயற்சி' என்ற பெயரில் ஒப்பேற்றி நிறைவுசெய்ய முயல்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்.

*''வாக்களிப்பதிலிருந்து விலகிக்கொள்வதோ, விரும்பியபடி எவர் எவருக்கும் வாக்களிப்பதோ அல்லது வெல்ல முடியாத வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதோ நமது வாக்குப் பலத்தை விரயமாக்குவதாக அமையுமே தவிர, தமிழ் மக்களுக்கு எந்தப் பிரதிபலனையும் ஏற்படுத்தப் போவதில்லை.''* - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அப்படியானால் இத் தேர்தலில்வெல்லப்போகின்றவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என்று கணிப்பிட்டுத்தான் -அதற்காகத்தான் - அவர் பக்கம் தமது நிலையை அவர் உறுதிப்படுத்தினாரா? அப்படியானால் தங்களின் கட்சியின் எதிர்பார்ப்புகள் தொடர்பாக இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுடனும் பேசுகின்றோம் என இதுவரை பத்திரிகை அறிக்கைகளை விட்டு, பேரம் பேசுபவர் போல காலத்தை இழுத்தடித்து அவர் நடத்தியது வெறும் பம்மாத்து நாடகம்தான் என்பதை அவரே ஒப்புக்கொள்கின்றாரா?

'வெல்லமுடியாத வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது' குறித்துச் சிந்திக்காமல் -

'சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றால் மட்டுமே வெல்லமுடியும் என்ற நிலைப்பாட்டைப் பிரதான வேட்பாளர்களுக்கு ஏற்படுத்தி, வெற்றி - தோல்வியை நிர்ணயிப்பவர்களாக சிறுபான்மைத் தரப்பினரை மாற்றிக்கொண்டு' அதனடிப்படையில் விடயத்தை அணுகுவது பற்றிச் சிந்திப்பதே உண்மையான தலைமைத்துவத்துவமும் வழிகாட்டலுமாகும்.

அந்த வலிமையைப் பெறும் வாய்ப்பை ஏற்கனவே அணி சேர்ந்து, சீரழிப்பதில் பங்குகொண்டு உறுதிப்படுத்திய பின்னர், தமது வழிக்கு வருமாறு தமிழ்க் கூட்டமைப்புக்கு 'ஐக்கிய முயற்சியின்' பெயரால் அவர் அழைப்பு விடுப்பது, 'வால் அறுந்த நரி ஒன்று ஏனைய நரிகளைப் பார்த்து நரிகள் வாலை வெட்டினால்தான் அழகாக இருக்கும்! என்று கூறுவது' போலல்லவா உள்ளது........?

# இந்திய மீனவரின் அத்துமீறல்கள்; தமிழக முதலமைச்சருக்கு மகஜர்

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.29.

இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி வருவதைக் கண்டித்து அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரும் மகஜர் ஒன்றை தமிழ் நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதிக்கு அனுப்பிவைக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் தெரிவித்தவை வருமாறு,

கடந்த 23 வருடங்களுக்கு மேலாக எமது கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதற்குப் பல்வேறு தடைகளை, கட்டுப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

ஆனால், தற்போது அந்த நிலைமைகள் நீங்கி சுதந்திரமாகக் கடற்றொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு வன்னிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்த நிலையில் மீளவும் கடற்றொழில் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலைமையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை இந்திய கடற்றொழிலாளர்கள் 300 இழுவைப் படகுகள் மூலம் யாழ். குடா கடல்நீரேரியில் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளத்தை அள்ளிச் சென்றுவிட்டனர்.

இதனால் எமது கடற்றொழிலாளர்களின் வலைகள் உள்ளிட்ட பல லட்சம் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் அழித்து நாசம் செய்யப்பட்டிருக்கின்றன. அழிக்கப்பட்ட அந்தக் கடற்றொழில் உபகரணங்கள் மீளவும் பயன்படுத்த முடியாதுள்ளன.

அதுமட்டுமன்றி, இழுவைப் படகுகள் பயன்படுத்துவதால் கடல் வளம் முழுமையாக இழக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டி - கண்டித்து, நிறுத்தக் கோரியே அவசரமாக மகஜர் ஒன்றை முதலமைச்சர் கருணாநிதிக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம்.

அதேவேளை இலங்கைக் கடற்படையினருக்கும் இவ்விடயம் குறித்து விளக்கி, அத்துமீறி நுழையும் இந்திய மீனவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்கவுள்ளோம் - என்றார். (ஒ-14)

# இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகிய பின்னரே பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடம் மக்கள் பாவனைக்கு

வடமராட்சி,டிசெ.29.

பருத்தித்துறை நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் நவீன சந்தையின் இரண்டாம் கட்டம் பூர்த்தியடைந்த பின்னரே, நவீன சந்தை மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

நவீன சந்தைக் கட்டடத்தின் தளப் பகுதி பல மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 'நெக்டெக்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் மிகக் குறுகிய காலத்தில் இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாடிக் கட்டடப் பணிகள் விரைவில் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாணச் செயலாளர் திருமதி விஜயலக்சுமி, யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கட்டி முடிக்கப்பட்ட பருத்தித்துறை நவீன சந்தையின் முதலாம் கட்ட, கட்டடத்தை நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் அ.அ.நடராசா, பருத்தித்துறை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஐ. ரங்கேஸ்வரன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

இரண்டாம் கட்ட கட்டடப் பணிகளைப் பூர்த்தி செய்யாமல், முதலாம் கட்ட (தளம்) கட்டடத்தைத் திறந்து வைத்தால் இரண்டாம் கட்டக் கட்டடப் பணிகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் ஏற்படலாம் என்ற கருத்து உட்பட, ஏனைய காரணங்களையும் முன்வைத்து இரண்டாம் கட்டப் பணி, அதாவது நவீனசந்தை முழுமையாக்கப்பட்ட பின்னரே நவீன சந்தையைத் திறப்பது என அங்கு வைத்து இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, சந்தையைச் சுற்றியுள்ள வீதிகள் 'நெற்டெக்' , வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றால் திருத்தியமைக்கப்பட்டுள்ளதையடுத்து, பஸ் நிலையத்தை சந்தைக்கு முன்பாக கிழக்குப் பகுதியில் உடனடியாக ஆரம்பிக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டது.

நவீன சந்தைக் கட்டடப் பணிகள் ஆரம்பமானதைத் தொடர்ந்து கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பருத்தித்துறை பஸ் நிலையம் சிவன்கோவில் சதுக்கத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

நவீன சந்தைக்கு முன்பாக பஸ் நிலையம் ஆரம்பிக்கும் போது இட வசதியை முன்னிட்டு, முதலில் புறப்படும் வரிசைக்கிரமப்படி புறப்படும் ஐந்து பஸ் வண்டிகளை அப்பகுதியில் நிறுத்தி வைக்கலாம். ஐந்து பஸ் வண்டிகள் தரித்து நிற்க, அவை ஒவ்வொன்றாகப் புறப்பட்டதும் அடுத்தடுத்த பஸ் வண்டிகள் அங்கு வந்து தரித்து நிற்கும் வகையில் பஸ்நிலையம் செயற்பட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மினிபஸ் வண்டிகள் சந்தைச் சதுக்கத்தில் தரித்துச் செல்வது தொடர்பான இடத்தைத் தெரிவு செய்வதோ அல்லது அதற்கு அனுமதிப்பதோ பருத்தித்துறை நகர சபைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (50-236)

# வலி.தென்மேற்கு பண்பாட்டு மலருக்கு ஆக்கங்கள்கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், டிசெ, 29.

வலி. தென் மேற்குப் பண்பாட்டு மலருக்கான ஆக்கங்கள், பிரதேச வாழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

வலி. தென் மேற்கு பிரதேச கலாசார பேரவை அடுத்த ஆண்டு பண்பாட்டு மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

எனவே, இதற்கான ஆக்கங்கள் பிரதேசத்தின் பாரம்பரியங்களினை பிரதிபலிக்கின்ற வகையில் வரலாறு, வாழ்வியல், கலை, கலாசாரம் மற்றும் ஏனைய பண்பாட்டுத் தகவல்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆக்கங்களை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கும்படி கலாசார பேரவைத் தலைவரும் பிரதேச செயலாளருமான ம.ஜெகூ அறிவித்துள்ளார். (ஒ-16)

# 25 வருடங்களுக்கு முன் இயங்கிய இடத்தில் மீண்டும் பருத்தித்துறை நகரசபை அலுவலகம்

## புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு இயங்கும்

வடமராட்சி, டிசெ.29

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் இயங்கிய இடத்தில் புதிய கட்டடம் அமைத்து இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பழைய நகரசபை அலுவலகம் பருத்தித்துறை - வல்வெட்டித்துறை (கீரிமலை) வீதியில், கல்லூரி வீதி முடிவில் ஹாட்லிக்கல்லூரிக்கு பின்புறமாக கடற்கரையோடு அண்டியதாக முன்னர் அமைந்திருந்தது.

யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து 1985 ஆண்டுக்குப் பின்னர் நகரசபை அங்கு செயற்படமுடியாமல் தும்பளைக்கு இடம்பெயர்ந்தது. பின்னர் நகர சபைக் கட்டடம் தரைமட்டமாகிவிட்டது. தும்பளைக்கு இடம்பெயர்ந்த நகரசபை அலுவலகம் வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து தற்போது ஆத்தியடியில் உள்ள தனியார் வாடகை வீடு ஒன்றில் செயற்பட்டு வருகிறது.

இதேவேளை, நகரசபை அலுவலகம் முன்னர் இருந்த இடத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் கட்டளைத் தளபதி மகேஸ் சேன நாயக்க சகிதம் நேற்று நேரடியாகச் சென்று நிலைமையை அவதானித்தனர்.

அதைத் தொடர்ந்து நகர சபைக்குச் சொந்தமான காணியை நில அளவையாளர் மூலம் அளந்து, எல்லை களை வகுக்கும் பணியை மேற்கொள்ளுமாறு பணித்தார். எல்லை அளவுகள் வகுத்தவுடன், படையினர் அவ்விடத்தில் இருந்து பின்னோக்கிச் சென்று விடுவார்கள் என்று 52 ஆவது படையணியின் தளபதி தெரிவித்தார்.

இந்த நேரடி விஜயத்தின் பின்னர் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சமூகசேவைகள் அமைச்சர் சம்பந்தப்பட்டோருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நகரசபைக் காணியைப் பார்வையிடச் சென்றபோது பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.அ.நடராசா, யாழ்.பிராந்திய உள்ளூராச்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் உட்பட வட மாகாண சபை உயர் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

பருத்தித்துறை நகர சபைக்குச் சொந்தமான காணிக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அதேகாணியில் முன்னர் இருந்தது போல் நகரசபை அலுவலகக் கட்டடம் புதிதாக நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-236)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 15 | 30.12.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.இ.03.56 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | மு.ப 10.54 வரை |
| சுபநேரம்: | 04.59-06.29 வரை |
| ராகுகாலம்: | 12.29-01.59 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டயக் கணக்காளர் புலமைப் பரிசில் பரீட்சை

பட்டயக் கணக்காளர் நிறுவனமான, ACCA வழங்கும் புலமைப்பரிசில் பரீட்சை நாளை புதன்கிழமை யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

பரீட்சை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை இடம்பெறும். (ஒ-01)

# மரண அறிவித்தல்கள்

## நாகரெத்தினம் பரம்சோதிநாதன் (மார்க்கண்டு)



வேலணை மேற்கு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மன்னார் பெரியகடையை வசிப்பிடமாகக் கொண்டவரும், மன்னார் ஜோதி விலாஸ் உரிமையாளரும் பிரபல வர்த்தகருமான நாகரெத்தினம் பரம்சோதிநாதன் (மார்க்கண்டு) நேற்று (27.12.2009) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம்-வள்ளியம்மை தம்பதியரின் இரண்டாவது புதல்வரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- கனகாம்பிகை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தனபாக்கியலட்சுமி சந்திராவின் அன்புக் கணவரும், நிர்மலா, மனோகரன், கஜேந்திரன், வசீகரன், ஜோதிமாலா, ஜோதிபாலன், கஜமுகன் (ஜோதி புக் சென்ரர், மன்னார்), றெஜி, காலஞ்சென்ற நியூட்டன் மற்றும் காஞ்சனா, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், வாமதேவன், வசந்தி, வனிதா, பத்மலோஜினி,அனுசா, சுபாஜினி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்திரசேகரம்பிள்ளை, புஸ்பகாந்தி, யோகேஸ்வரி (ராதா), ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவயோகம் (கிளி), மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னலெட்சுமி, சோமசேகரம் பரமேஸ்வரி, செல்வநாயகம், காலஞ்சென்ற புனிதவதி மற்றும் சிற்றம்பலம், கற்பகம், இரத்தின சிங்கம் கமலாதேவி, மார்க்கண்டு யோகம்மா, சுந்திரமூர்த்தி கலைவாணி, கனகராசா காலம்சென்ற மகாலெட்சுமி ஆகியோரின் சம்பந்தியும், சியாமினி, சுஜந்தன், சிந்துாஸ்கார், மிகானா, நிதுலன், நவீன், வினிஸ், லவனி, அர்சயன், நேயா, நிருபா, ஆரூஸ், ஆதேஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(30.12.2009) புதன்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

பெரியகடை, மன்னார்.
தொ.இல: 023 222 2304
(91483)

## திருமதி மார்க்கண்டு சிவயோகம்



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் 3ஆம் கட்டை, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிவயோகம் நேற்று (28.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், சிவநேசத்தின் (ஆசிரியை, கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்) அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - ஆச்சிக்கண்ணு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நித்தியசிவத்தின் அன்புச் சகோதரியும், அம்பிகைபாலனின் (J/121, கிராம சேவையாளர் - உபதலைவர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்) அன்பு மாமியாரும், நிரோஜன், நிர்மலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிரஞ்சனன், கமலாசினி, ரவீந்திரன், காலஞ்சென்ற கௌரி பாலன், ஆனந்தகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், மணிமேகலாதேவியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
கு. அம்பிகைபாலன்,
(கிராம சேவையாளர் - J/121,
மருமகன்)

03 ஆம் கட்டை,
கே.கே.எஸ். றோட்,
கொக்குவில்.
(சி/563561)

## செல்வன் சுதன் சாயித்தியன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சுதன் சாயித்தியன் நேற்று (28.12.2009) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுதன் - குமுதினி தம்பதியினரின் அன்பு மகனும், கஜலக்ஷியின் அன்புச் சகோதரனும், அமரர் சண்முகசுந்தரம் மற்றும் நிர்மலாதேவி, நகுலேஸ்வரன், குலஞானவதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அடக்கம் செய்வதற்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ச. சுதன், (தந்தை)
தொ. பே : 0774277120.

சந்தை ஒழுங்கை,
மானிப்பாய்.
(91951)

## ஒளி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.29

தீவக கல்வி வலயத்தின் அலுவலகத்தில் ஒளிவிழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (1-267)

* * *

கொழும்புத்துறை சூசையப்பர் ஆலய வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் இன்று மாலை 4 மணியளவில் அருட்தந்தை அ.யாவிஸ் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளன. (1-23)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.29

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர் களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- க.பிரபாகரன்,
52/2, வைமன் றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2157
(சி/563563)

## தவறிவிட்டது

இல.5, 7ஆம் வீதி, மஸ்கெலியா என்னும் முகவரியுடைய முத்துக்குமாரசாமி பிறேம்குமார் என்பவரது தே.அ.அட்டை (802291388v), வாகன சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன அடங்கிய போர்ஸ் அளவெட்டிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
முத்துக்குமாரசாமி, 'சுமங்கலி', கற்புலம் லேன், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். தொ.பே: 0773453611
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

107, குட்செட் வீதி, வவுனியாவைச் சேர்ந்த செல்லையா பிரங்கிளின் உமாகாந்தன் என்பவருடைய அ.அட்டை (770891124v), சாரதி அனுமதிபத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புக்கு: 0773276370 (சன்மானம் வழங்கப்படும்)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்
டிசெ.29

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புகுழு மற்றும் விவசாயக்குழு ஆகியவற்றின் கூட்டங்கள் தவிர்க முடியாத காரணங்கனால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயளர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.


NEW ADMISSION FOR 2010

Certificate மற்றும் Diploma சான்றிதழ்களுக்கான கணனிக் கற்கை நெறிகளில் பயில்வதற்கு புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விவரங்களுக்கு:

TEC Sri Lanka

(இலங்கையில் மிகப்பெரிய கணனி வலையமைப்பைக் கொண்டதும் சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றதும் அரச அங்கீகாரம் கொண்டதுமான கல்வி நிறுவனம்)
(மானிப்பாய் வீதி, கோப்பாய்ச் சந்தி, கோப்பாய்)

Contact Tel: 0712782178
0770417744
(91931)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
திரு.ஆறுமுகம் விவேகானந்தனின் தாயார்
திருமதி ஆறுமுகம் காசியம்மா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/உயரப்புலம்
மெ.மி.த.க.வி,
ஆனைக்கோட்டை.
(91959) ஆசிரியர் கழகம்


யாழ்- நகரில் மீண்டும்

கொழும்பு மற்றும் திருகோணமலை நகரின் மிகப்பிரபல்யமான POSH, RAMAZ அழகுக்கலை நிறுவனத்தினர் வருகை

இவர்களினால்,
01) முகப்பராமரிப்பு
* Facials
* சிகிச்சைகள்
02) கேசப்பராமரிப்பு
* Hair Cuts
* Rebonding
* Waxing
* Hair Colouring

பயிற்சிக் கட்டணம் 2,000/-

போன்ற பயிற்சிகள் இவர்களால் வழங்கப்படுகின்றன.

குறிப்பு :- அழகுக்கலைநிலைய பராமரிப்புப் பற்றியும் விளக்கமளிக் கப்படும்.
இடம் :- கலைத்தூது மண்டபம், திருமறைக் கலாமன்றம், 128, டேவிற் றோட், யாழ்ப்பாணம்.
காலம் :- 02.01.2010 நேரம்:- 9.00 - 5.30

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
J.P.J. ஆனந்தரமணன் :- 0773053242

"RAMAZ"
28 1/1, சரணங்கர வீதி,
களுபோவில, தெகிவளை. (91951)

"POSH"
7/1, அருணகிரி வீதி, திருகோணமலை.
தொ. பே: 0262224524.



யாழ்.மக்களுக்கு ஓர் நற்செய்தி
நம்பிக்கை நாணயம்
யப்பான் றேடர்ஸ்
உறுதி உத்தரவாதம்





புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
கொழும்பு விலையில் யப்பான் தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

மின்சார மோட்டார் சைக்கிள்கள்
★எரிபொருள் தேவையில்லை
★சாரதி அனுமதிப்பத்திரம் தேவையில்லை
★2 வருட உத்தரவாதம்

இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே..

யாழ்.மாவட்ட ஏக முகவர்
Japan Traders
(விவேகானந்தா அச்சகம்)
இல. 10- 14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0770868079


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 14 ★ 01 ★ 1938
உதிர்வு 29 ★ 11 ★ 2009
அமரர் ஏரம்பு முருகேசு



மலர்வு 14 ★ 01 ★ 1940
உதிர்வு 13 ★ 01 ★ 2001
திருமதி முருகேசு மனோன்மணி



மலர்வு 11 ★ 09 ★ 1975
உதிர்வு 21 ★ 08 ★ 2000
அமரர் முருகேசு சுதர்சன்

பெற்றநாள் முதல் பாசம் காட்டி நம்மை வாழ்வாங்கு வாழ
வைத்து இன்பம் [illegible]ர்ந்து பெருமை அடைந்த எம் அப்பாவே!
சொந்தங்களோ[illegible], வந்தோரையும்
அரவணைத்து வாழ்ந்த அருமை அப்பாவே !
நாள்கள் 31 சென்றாலும் ஆறவில்லை
உங்கள் பிரிவின் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
[illegible]



இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
மடத்தடி,
சாவகச்சேரி.
(91949)
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கம நெகும' திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு திருநெல்வேலி விவசாயத்திணைக்களத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விவசாயதிணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார் உரையாற்றுவதையும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் பயனாளி ஒருவருக்கு நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகளில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

# கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரம் பேர் அடுத்தவாரம் குடியமர்த்தப்படுவர்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சி மாவட்டத் தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஐயாயிரம் பேர் அடுத்த வாரம் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

பரந்தன், உமையாள்புரம், குமரபுரம் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 19 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 8 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தற்போது மீள்குடியேற்றப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபஷவின் பணிப்புரைகளுக்கமைய, வடக்கின் மீள் குடியேற்றம், அபிவிருத்தி, பாதுகாப்பு என்பவற்றிற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபஷவின் அறிவுறுத்தல்களுக்கமைய கிளிநொச்சியில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதாக அரச அதிபர் குறிப்பிட்டார். இந்த மாவட்டத்தின் பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி (பளை) ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். தற்போது ஏ-9 பாதையின் மேற்குப் பகுதியில் குடியேற்றம் இடம்பெறுவதாகக் கூறிய அரச அதிபர் திருமதி கேதீஸ்வரன், அடுத்த வாரம் முதல் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஐயாயிரம் பேர் மீள் குடியமர்த்தப்பட உள்ளதாகவும், இன்னும், ஓரிரு தினங்களில் மீள்குடியேற்றத்துக்கான திகதி நிர்ணயிக்கப்படுமென்றும் கூறினார். மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களையும் எதிர் வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக முற்றாக மீள்குடியேற்ற எதிர்பார்ப்பதாகவும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மக்கள் மீள்குடியே றிய பகுதிகளில் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவென விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனத்தின் வசதி கருதி பிரதேசங்களில் உள்ள குளங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். இது இவ்வாறிருக்க கிளிநொச்சி பகுதியில் தற்போது இயல்பு வாழ்க்கை திரும்பியிருப்பதாக பொதுமக்கள் சிலர் கருத்துத் தெரி வித்தனர். கிளிநொச்சியில் பணியாற்றும் அரச ஊழியர்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்குமிடையில் தினமும் மூன்று பஸ் சேவைகள் இடம் பெற்று வருகின்றன. (50)

### நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.29.

யாழ்ப்பாண கல்விவலய, நாடகமும் அரங்கியலும் பாடவிதானத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் தரவட்ட கருத்தமர்வு நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணிவரை யாழ். கல்வித் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் தோற்றியவர்களுக்கு, நடைபெற இருக்கின்ற செயல்முறை பரீட்சை தொடர்பான விடயம் மேற்படி கருத்தமர்வில் கலந்துரையாடப்படவுள்ளது. கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் இக்கருத்தமர்வுக்கு வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். யாழ். கல்வி வலயத்தில் நாடகப் பாடத்தைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் அழைக்கப்பட்டுள்ளதோடு, ஆர்வமுடைய ஏனைய வலய ஆசிரியர்களும் கலந்துகொள்ளலாமென, யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. வேதநாயகம் அறிவித்துள்ளார். (50-224)

# யாழ். மாவட்டத்தில் நிலவும் சமுர்த்தி அலுவலர்களுக்கான 300 வெற்றிடங்களுக்கு விரைவில் நியமனங்கள்

## சமுர்த்தி அதிகாரசபைப் பணிப்பாளர் தகவல்

வலி.வடக்கு, டிசெ.29

யாழ்.மாவட்டத்தில் நிலவிவரும் சமுர்த்தி அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி அலுவலர் பதவிக்கு சுமார் முந்நூறு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

மேற்கண்டவாறு சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் எஸ். திலகஸ்ரீ குறிப்பிட்டார்.

யாழ்.குடாநாட்டு சமுர்த்தி அலுவலர்களுக்கும் கொழும்பில் இருந்து வருகை தந்த சமுர்த்தி அபிவிருத்திச்சபை உயர் அதிகாரிகளுக்கும் இடையேயான சந்திப்பு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றியபோதே சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபைப் பணிப்பாளர் இத்தகவலைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சமுர்த்தி அதிகார சபையினால் 4 ஆயிரம் ஓட்டோக்கள் இலங்கையில் உள்ள சமுர்த்தி வங்கிகளுக்கு வழங்கப்படவுள்ளன. இத்துடன் அனைத்து சமுர்த்தி வங்கிகளும் வலைப்பின்னல் அமைப்பின் கீழ் கொண்டுவரப்படுவதுடன் ஏனைய வங்கிகள் போன்று சமுர்த்தி வங்கிகளும் தரமுயர்த்தப்பட வுள்ளன.

சமுர்த்தி செயற்பாட்டின் கீழ் தென்னிலங்கையில் செயற்படுத்தப்படுவது போன்ற அனைத்து நடவடிக்கைகளும் யாழ். குடாநாட்டிலும் அடுத்த மாதம் முதல் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஊழியர்களுக்கான பதவி உயர்வுகள் கீழ் மட்டத்தில் இருந்து உயர்மட்டம் வரை உரிய முறையில் வழங்கப்படும். தகுதி திறமையைக் கருத்தில் கொண்டே இவை செயற்படுத்தப்படவுள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் அனைவருக்கும் கணனிப்பயிற்சி உட்பட ஏனைய தேவையான பயிற்சிகள் வழங்கப்படும்.

சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக இருந்து பின்னர் சமுர்த்தி அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு அவர்களுடைய சேவைக் காலத்துடன் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாகக் கடமையாற்றிய சேவைக் காலமும் சேர்த்துக் கொள்ளப்படும்.

யாழ். குடாநாட்டில் உள்ள மகா சங்கங்கள் பலவும் போதிய கட்டட வசதிகள் இன்றி இயங்குகின்றன. இக்குறைபாட்டைப் போக்கும்முகமாக மகாசங்கம் இயங்குவதற்கான கட்டட வசதிகளும் செய்யப்படும் - எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் சமுர்த்தி அதிகார சபை ஸ்தாபனப் பணிப்பாளர் ஹெட்டி ஆராய்ச்சி, கணக்காய்வு கண்காணிப்புப் பணிப்பாளர் பண்டார ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (04-86)

### வடமராட்சி வலய அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.29

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான 2010 ஆம் கல்வி ஆண்டுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வலயக் கலவிப்பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (ஒ-190)

# முழங்காவில் பெருமாள் ஆலயத்தை புனரமைக்க உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.29

கடந்த யுத்த நிலைமையில் சிதைவடைந்த முழங்காவில் கிருஸ்ணா நகர் கிருஸ்ண பெருமாள் ஆலயத்தைப் புனரமைப்பதற்கு உதவுமாறு ஆலய நிர்வாக சபை கேட்டுள்ளது.

இதற்கான நிதியினை அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் தமது பணத்தை இலங்கை வங்கி கிளிநொச்சிக்கிளையில் 27349 என்ற கணக்கிலக்கத்துக்கு வைப்புச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் ஐம்பொன்னாலான ஆலய உற்சாடனமூர்த்தியின் உருவச் சிலை கடந்த இடப்பெயர்வின் போது பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா இராமநாதன் நலன்புரி நிலையத் தில் மக்களின் வழிபாட்டிற்கு என வைக்கப்பட்டது.

பின்னர் யாழ். ஊர்காவற்றுறை புளியங்கூடலுக்குக் கொண்டு செல்லப்பட்டு மீளவும் முழங்காவில் கிருஸ்ணா நகரில் மக்களின் வழிபாட்டுக்கென வைக்கப்பட்டுள்ளது எனவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (50-14)

### திருவெம்பாவைச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.29

அச்செழு மதுரை மீனாட்சிஅம்மன் ஆலயத்தில் திருவெம்பாவைக்கால சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடை பெறவுள்ளது. சிவலிங்க யோக கேந்திரா நடத்தும் இச்சொற்பொழிவு இதன் தலைவர் நா.நவராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் 'திருவாசகம் எனும் தேன்' என்ற தலைப்பில் கவிமாமணி அன்னதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.(50-16)

# வன்னியிலிருந்து கடல்வழியாக வந்தவர்களின் படகுகள், இயந்திரங்கள் படையினரால் கையளிப்பு

பருத்தித்துறை,டிசெ.29.

வன்னியிலிருந்து கடல் வழியாக பருத்தித்துறைக்கு இடம்பெயர்ந்து ஏற்கனவே வந்துசேர்ந்த வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர்களின் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் உரிமையாளர்களிடம் படைத்தரப்பினரால் கையளிக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறை முனைப்பகுதியில் வைத்து 20 கடற்றொழிலாளர்களின் இத்தகைய கடற்கலங்கள் கையளிக்கப்பட்டன. ஏனையோரின் கடற்கலங்கள் ஜனவரி மாத முற்பகுதியில் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

வடமராட்சி கிழக்கில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வன்னியில் மாத்தளன், அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதிகளுக்குச் சென்றவர்களே அங்கும் யுத்தம் நிலைமை ஏற்பட்டதை அடுத்து கடல்வழியாகப் படகுகளில் பருத்தித்துறை முனைப்பகுதியை வந்தடைந்தார்கள். அப்போது அவர்களின் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் படையினரால் பொறுப்பேற்கப்பட்டன. தற்போது இடம்பெயர்ந்து வந்த மக்கள் நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறியதை அடுத்து அவர்களின் படகுகளும், வெளியிணைப்பு இயந்திரங்களும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (50-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சூழலைப் பாதுகாக்க வேண்டுமா? நேச்சுரல் தயாரிப்புகளைப் பயன்படுத்துங்கள்

அனைவரும் அழகாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றோம். எமது அழகு எதில் தங்கி இருக்கின்றது என்று நாம் முக்கியமாக அறிந்து கொள்ளவேண்டும்.

எமது அழகை மிகவும் முக்கியமாக வெளிக்காட்டுவது எமது சருமம்தான். எமது உடலில் உள்ள மிகவும் பெரிய உறுப்பு சருமம் (தோல்). இது எமது உள்ளுறுப்புக்களை காக்கும் கவசமாக விளங்குகின்றது. எமது உடலை சீதோசன நிலைகளிலிருந்தும், நச்சுக் கிருமிகள் புகாவண்ணமும் பாதுகாப்பது சருமம் தான். இவ்வாறு சருமத்தை பற்றி இன்னும் நிறைய சொல்ல முடியும். இவ்வளவு முக்கியமான எமது சருமத்தை நாம் எவ்வளவு கவனமாகப் பராமரிக்க வேண்டும்.

இதற்காகவே நேச்சுரல் சீக்கிரட் நிறுவனம் எமது சருமத்தை பராமரித்து பாதுகாப்பதற்காக முழு இயற்கையான மூலிகைகளை கொண்டு பல விதமான தயாரிப்புக்களைச் சந்தைப்படுத்தியுள்ளனர். இந்த வரிசையில் சருமத்திற்கு தேவையான போசாக்கையும், புதுபொலிவையும், சருமம் வறட்சி அடையாமல் பாதுகாப்பதற்காகவும் மூன்று வகையான மொய்சைரைசிங் லோசன்களை உங்களுக்காக அறிமுகப்படுத்தி சந்தைப்படுத்தியுள்ளனர்.

அனேகமானவர்களின் சருமத்தை எடுத்துக் கொண்டால் மிகவும் வரட்சியாகத்தான் இருக்கும். இதற்குக் காரணம் தமது சருமத்தை கவனிக்காமை, முகத்தில் உள்ள சருமத்தை மாத்திரம் தான் பராமரிப்பது. எமது அழகு முகத்தில் உள்ள சருமத்தில் மாத்திரம் இல்லை உடல் முழுவதும் உள்ளது.

அது மாத்திரம் அல்லாமல் தமது சருமத்திற்கு சோப் பாவிக்கின்றார்கள். பொடி லோசன் ஒன்று பாவிப்பது இல்லை. ஒவ்வொருவரும் தமது சருமத்திற்கு தேவையான பேசாக்கைக் கொடுக்கவேண்டும். அதற்காக மொய்சைரைசிங் ஒன்றை தினமும் பாவிக்க பழகிக் கொள்ள வேண்டும்.

இதற்காகவே நேச்சிரல் சீக்கிரட் நிறுவனம் அறிமுகம் செய்துள்ள மொய்சைரைசிங் மூன்று வகை

* பப்பாசி மொய்சைரைசிங் லோசன்
* அலோவேரா (கற்றாளை) மொய்சைரைசிங் லோசன்
* கரட் மொய்சைரைசிங் லோசன்

சந்தையில் பலவிதமான மொய்சைரைசிங் லோசன் வகைகள் இருந்தபோதிலும் முதல் இடத்தில் இருப்பது நேச்சுரல் சீக்கிரட் மொய்சைரைசிங் லோசன் இதை தமது சருமத்திற்கு ஏற்ற வகையில் தெரிவு செய்து பயன்படுத்த முடியும்.

* நேச்சுரல் சீக்கிரட் பப்பாசி மொய்சைரைசிங் லோசன் இயற்கையான பப்பாசி பழச்சாற்றை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதை பயன்படுத்துவதால் சருமத்தில் ஏற்பட்டுள்ள கரும் புள்ளிகள் சருமத்தில் ஏற்படும் நிறமாற்றத்தை தடுக்கும்.
* நேச்சுரல் சீக்கிரட் அலோவேரா மொய்சைரைசிங் லோசன் இயற்கையான கற்றாளைச் சாற்றை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.
* நேச்சுரல் சீக்கிரட் கரட் மொய்சைரைசிங் லோசன் முழு கரட் சாற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இது அதிகமான வரண்ட சருமத்திற்கு உகந்தது.




இந்த மொய்சைரைசிங் லோசன் மூன்றில் சேர்க்கப்பட்ட சேர்மானங்கள் மூன்றைத் தவிர (வேஜின் கொகனட் ஒயில், சுத்தமான நெய், ஆமன் ஒயில், புளியம் விதை சாறு) என்பன அடக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் எமது சருமத்துக்கு தேவையான போசாக்கையும் சத்தையும் கொடுக்கின்றன.

நேச்சுரல் சீக்கிரட் தயாரிப்பில் உள்ள இந்த மொய்சைரைசிங் 100 % இயற்கையான சுத்தமான மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதால் இவை சருமத்தினுள் ஊடுருவிச் சென்று சருமத்துக்கு தேவையான போசாக்கையும் எமக்கு தேவையான மிக விரைவான பயனையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

நேச்சுரல் சீக்கிரட் மொய்சைரைசிங் லோசன் எந்த நேரத்திலும் பயன் படுத்தலாம். சருமத்தை சுத்தம் செய்த பின்னர் சருமத்திற்கு மாத்திரம் இன்றி முகத்திற்கும் பூசலாம். இதை குறைந்த விலையில் மி.லீ.225, மி.லீ.100, மி.லீ.50 போன்ற அளவுகளில் பெற்றுக்கொள்ள முடியும். நேச்சுரல் சீக்கிரட் மொய்சைரைசிங் லோசன் பயன்படுத்தி என்றும் இளமையான அழகான சருமத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

# பாலர் கல்வி மற்றும் பராமரிப்பில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் 'சில்றன்ஸ் வேல்ட்'

CHILDREN'S WORLD பாலர் பாடசாலை மற்றும் பாலர் பகல் பராமரிப்பு இல.16 இரண்டாம் ஒழுங்கை பலாலி வீதி, யாழ்ப்பாணம் (அப்பலோ வைத்தியசாலை எதிரில்) என்னும் முகவரியில் இயங்குகிறது.

பாலர் கல்வி மற்றும் பராமரிப்பில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஓர் புதிய அத்தியாயம்.

இலங்கை அரசின் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் சிறுவர் செயலகத்தின் தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச கொள்கைகளை உள்ளடக்கிய சர்வதேச தரம் வாய்ந்த பாலர் பாடசாலையாக Childrens World காணப்படுகின்றது.

## பாலர் கல்வி

02½ வயது முதல் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி கிடைக்கச் செய்வது பெற்றோரின் கடமை. பெற்றோர் தமது கடமையைச் செய்வதற்குச் சிறந்த வாய்ப்பு வசதி தேவை. அத்தகைய வாய்ப்பு வசதிகளை வழங்குவதாக Childrens World அமைகிறது. ஒவ்வொரு பிள்ளைக்குமான இடவசதி, ஆசிரியர்களின் எண்ணிக்கை, கற்றல் உபகரணங்கள், உள்ளக வெளியக விளையாட்டு வசதிகள் என்பன போதிய அளவு காணப்படுகின்றன. நன்கு பயிற்றப்பட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரி யர்கள் மூலம் தாய்மொழி தமிழுக்குக் கூடிய முக்கியத்துவத்துடன் ஆங்கில மொழியூடாக கற்பித் தல் நடைபெறுகிறது. ஆங்கில மொழியை விருப்புடன் பயில்வதற்கு ஏற்ற சிறந்த மொழிச் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## குழந்தைகள் பராமரிப்பு

குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் வளர்ப்பு தொடர்பாக உள்ள கவலையை நீக்குவதாக அமைகிறது. பிள்ளைகளின் ஆரம்ப வயதுப் பருவத்தில் அன்பு, பாதுகாப்பு, பராமரிப்பு போன்ற தேவைகளைப் பெற்றோர் ஈடுசெய்ய வேண்டும். இவற்றை ஈடுசெய்யத் தவறும்போது பிள்ளை விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகிறது. பிள்ளைகளின் தேவைகளை ஈடுசெய்யும் வகையில் தாய் அன்பைப் போன்ற பராமரிப்புச் சேவையை வழங்குகின்றது. பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்கள் மற்றும் உயர்தரமான பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கி காலை 7.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை சேவையை வழங்குகின்றது. இங்கு இரண்டு வயது முதல் அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

மேலதிக கட்டணமற்ற சேவைகளாக

* மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கல்விச் சுற்றுலா
* மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனை
* நாள்தோறும் தூய பசும்பால் மற்றும் போசாக்கு உணவு.
* விளையாட்டுப் போட்டி, ஆங்கில தின விழா, கண்காட்சி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் தினம்.
* சகல குழந்தைகளுக்கும் ஆரம்பப் பருவத்திலேயே கணனியுடன் ஈடுபாட்டை ஏ படுத்தும் வகையில் கணனிப் பயிற்சிகள்.

தேவை ஏற்படும் பட்சத்தில் போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படுகிற ன.

பிள்ளைகளின் சிந்திக்கும் ஆற்றல், மூளை விருத்தி, கற்பனைத்திறன், கணித விருத்தி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் முதன்முதலாக GAMA ABACUS RAINBOW என்னும் கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவது விசேட அம்சமாக அமைகிறது.

அனுமதிகளை ARRUL GLOBAL EXPRESS, No.01 BROWN ROAD, NAVALAR ROAD JUNCTION என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

# பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா? நீங்களும் விரைவில் பட்டதாரியாகலாம்!

இலங்கை இரசாயனவியல் கழகம் கணித, விஞ்ஞான உயர்தர மாணவர்களுக்கு வழங்கும் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா? கவலையே வேண்டாம் நீங்களும் மிகக் குறுகிய இளம் வயதில் இரசாயனவியல் பட்டதாரியாகி உங்களின் எதிர்காலத்தை வளம்படுத்த முடியும்.

மாணவர்களே, பெற்றோர்களே இக்கற்கை நெறிக்கான அடிப்படைத்தகுதி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இரசாயனவியல் உட்பட மூன்று விஞ்ஞானம் அல்லது கணித பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருந்தால் போதுமானது. இந்தச் சித்தியானது ஒரே தடவையில் இருத்தல் வேண்டும் என்பது அவசியமல்ல.

நான்கு வருட கற்கையின் பின்பு இளம் இரசாயனவியல் பட்டதாரியாக வெளியேறும் ஓர் அரிய சந்தர்ப்பம். கொழும்பில் இயங்கிக்கொண்டிருக்கும் இந்த (INSTITUTE OF CHEMISTRY CEYLON) நிறுவனத்தின் செயற்பாடு பல வருடங்களாகவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

நான்கு வருடங்களில் இளம் இரசாயனவியல் பட்டதாரி (B.Sc)ஆகியதும் தொழிலைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்தும் முதுமாணி (M,Sc)கலாநிதி (Ph,D)பட்டப் படிப்புகளைக்கூட வெளிநாடுகளிலோ (கனடா, UK, அவுஸ்திரேலியா...) இலங்கையிலோ தொடரமுடியும்.

இலங்கையில் ஏனைய பிற கற்கை நெறிகளுக்குரிய கட்டணங்களுடன் ஒப்பிடும் போது இந்த இரசாயனவியல் பட்டதாரிக்குரிய கற்கைக் கட்டணம் குறைந்ததாகும். ''பயன்மிக்க கல்விக்கான செலவீடு பிள்ளைகளின் எதிர்கால வளமான வாழ்விற்கான முதலீடு'' என்பதை மறந்துவிட வேண்டாம்.

மாணவர்கள் கற்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் உள்ளது. குளிரூட்டப்பட்ட நவீன விரிவுரை மண்டபங்கள், சிறந்த நூலகம், நவீன உபகரணங்களுடன் கூடிய சிறந்த இரண்டு ஆய்வுகூடங்கள் என்பன இந்த தலைமையகத்தை அலங்கரிக்கின்றன.

வருடாவருடம் சராசரியாக 45 இளம் இரசாயனவியல் பட்டதாரிகள் இங்கிருந்து சிறந்த வேலை உலகிற்குள் வெளியேறுகின்றனர். இக்கல்வியினூடாக வெளிநாடுகளுக்கும் இலகுவாகச் சென்று பலர் சிறந்த வேலை வாய்ப்புக்களைப் பெற்றும், பலர் சிறந்த புலமைப்பரிசில்களினூடாகவும் வெளிநாடுகளுக்குச் சென்றும் தம்மை வளப்படுத்தியுள்ளார்கள்.

இதுவரையில் இந்த நிறுவனத்தில் இருந்து மட்டும் 25இற்கு மேல் கலாநிதி (PHD)கள் இரசாயனவியல் துறையினூடாக வெளியேறி நிறுவனத்திற்கும், தமக்கும் புகழ் சேர்த்துள்ளனர்.

மேலதிக தகவல்களுக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி இரசாயனவியல் ஆசிரியர் அ.லோகநாதனுடன் அல்லது இந்த இரசாயனவியல் நிறுவனத்தின் பதிவாளர் NINS நடராசாவுடன் (0112861653) தொடர்புகொள்ள முடியும்.

# ஹேலீஸ் அக்ரோ யாழில் கிளை அமைத்து விவசாய மற்றும் சேவைகள் விஸ்தரிப்பு




இலங்கையில் 130 ஆண்டுகளாக மக்களின் வாழ்க்கையில் புதுவழிகளில் வளமூட்டி வரும் ஹேலீஸ் நிறுவனம் வடக்கிலும் விவசாய மற்றும் கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு ஆகிய துறைகளில் பன்னெடுங் காலமாகப் பெரும்பணியாற்றி வருகிறது.

வடக்கில் யுத்த காலத்தில் ஹேலீஸ் அக்ரோவின் பணியில் சிறிது தொய்வு ஏற்பட்டது.

இப்போது அங்கே யுத்தம் முடிந்து சமாதானம் சுடர்விடத் தொடங்கியுள்ள நிலையில் ஹேலீஸ் அக்ரோ நிறுவனம் வடக்கில் புதிதாகக் கிளை அமைத்து தனது பணியைத் தீவிரமாக மேற்கொள்ள முனைந்திருக்கிறது.

நேற்று 28ஆம் திகதி திங்கட்கிழமை 74, பலாலிவீதி, கோண்டாவில் ஹேலீஸ் அக்ரோ நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் உபகரணங்களும் இங்கே உள்ளன. ஆலோசனைச் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையத்தில் Biotech பிரிவு ஒன்றும் இருக்கிறது. பயிர்களை நாசமாக்கும் கிருமிகளை அழித்தொழிப்பதற்கும் மற்றும் பல விடயங்களிலும் ஆலோசனை வழங்குவதற்கும் நிபுணர்குழு இங்கு இருக்கிறது.

பயிர்ச் செய்கையில் ஆகக்கூடுதலான விளைவைப் பெறுவதற்கு ஹேலீஸ் அக்ரோ நிலையம் வேண்டிய எல்லா உதவிகளையும்செய்வதோடு விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருள்களை நியாயமான விலை கொடுத்து வாங்கி அவற்றைச் சந்தைப்படுத்தும் பணியையும் மேற்கொள்ளும்.

நேற்று யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் வேர்ல்ட் ஒப் ஹேலீஸ் நிலையமும் (World of Hayleys Centre) திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கே ஹேலீஸின் எல்லா உற்பத்திப் பொருட்களையும் இறக்குமதிப் பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம். தரமான மின்சாரப் உபகரணங்களை, ரவி பிரஷ்கள், கையுறைகள், ரோயோ குஷன்கள், மெத்தைகள் மற்றும் பியூஜி பிலிம் றோல்கள், கமராக்கள் முதலானவற்றைக் கூடப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் நெல், தக்காளி, உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவை இப்போது முழு மூச்சாகச் செய்கை பண்ணப்படுகின்றன.

இவற்றிற்கு நிலத்தைப் பண்படுத்துவதற்கான உபகரணங்கள், நல்ல இன விதைகள், பீடை நாசினிகள், தெளிகருவிகள் எல்லாவற்றையும் ஹேலீஸ் அக்ரோ வழங்குகிறது. தெளி கருவிகளில் Haysprayக்கு பெரும் கிராக்கி.

பத்து தொகுதிகளாக 141 கம்பனிகளைக் கொண்ட ஒரு முழுமம்தான் ஹேலீஸ் நிறுவனம். திறமையான நிர்வாகத்தில் வளர்ந்தோங்கி அது நாட்டுக்கும் அதன் முதுகெலும்பாக விளங்கும் விவசாய பெருங்குடி மக்களுக்கும் அரும்பணியாற்றி வருகிறது. பல விருதுகளையும் வென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''ஹேலிஸ்'' நிறுவனத்தின் காட்சியறை நேற்று ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
ஹேலிஸ் காட்சியறையை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஹேலிஸ் நிறுவன இயக்குநர் ரிஸ்வி ஷகீட் ஆகியோர் நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் ஹேலிஸ் நிறுவன இயக்குநர் ரிஸ்லி சகீர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் விருந்தினர்கள் பொருள்களைப் பார்வையிடுவதை இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள்: சுகந்தன்)

## குருநகர்ப் பகுதியில் மாடிக் குடியிருப்பு ஒன்றை அமைத்துத் தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.29

நெருக்கமாக வாழும் குருநகர்ப் பகுதி மக்களின் வசதி கருதி மாடிக் குடியிருப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இவ்வாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எம்.ஜி.ஆர் கழக மூத்த உறுப்பினர் எஸ்.சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 22ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வு குருநகரில் உள்ள எம்.ஜி.ஆரின் உருவச்சிலை முன்றலில் அண்மையில் இடம்பெற்றது.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் க.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எஸ்.சுந்தரலிங்கம் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மக்கள் நெருக்கமாக வாழும் குருநகர் பிரதேசத்தில் மாடிக் குடியிருப்பு வசதி ஒன்றை ஏற்படுத்தித் தருவதற்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனைவிட இப்பிரதேசத்தின் பிரதானமான கடற்கரை வீதியைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நலிவுற்ற 30 பேருக்கு உடு புடைவைகளை வழங்கினார்.

(50-224)

## குடாநாட்டில் கிராமங்கள்தோறும் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்.குடாநாட்டில் வேகமாகப் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கென சுகாதாரப் பகுதியினர் கிராமங்கள் தோறும் வீடு வீடாகச் சென்று டெங்குநோய் பற்றிய தகவல்களை மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

வீட்டு வளவுகளில் தேங்கிக் கிடக்கும் குப்பை மற்றும் கழிவுகளை அகற்ற உதவுவதுடன் அகற்றப்படாத குப்பைகளை அவர்கள் தீயிட்டு எரித்தும் வருகின்றனர்.

அதனைவிடப் பொது இடங்களில் இருக்கும் கழிவுப் பொருள்கள் மற்றும் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் போன்றவற்றையும் சிரமதானம் மூலம் அகற்றி வருகின்றனர்.

(50-224)

## வெளிமாவட்டம் செல்லும் பயணிகளுக்காக முற்றவெளிப் பகுதியில் குடிதண்ணீர் வசதி

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்.மாநகராட்சி மன்றம் முற்றவெளிப் பகுதியில் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பகுதியிலிருந்து பஸ்களில் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதி கருதியே குடிதண்ணீர் தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கென நான்கு தாங்கிகள் மாநகராட்சி மன்றத்தினால் முற்றவெளிப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன.

(50-224)




## பொக்கணைப் பொதுக் கிணற்றிலிருந்து வலி.தென் மேற்குக்கு நீர் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.29

பொக்கணைக் கிணற்றில் இருந்து வலிகாமம் தென்மேற்குப் பகுதிக்கு குடிதண் ணீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்கும் வகையில் மோட்டர் ஒன்றைப் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் சுன்னாகம் தாங்கிக்குக் குழாய் மூலம் குடிதண்ணீரை நிறைத்து அதன் பின்னர் நிலத்தடிக் குழாய் மூலம் மானிப்பாய் கட்டுடைப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் குடிதண்ணீரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(50-224)

## திருவெம்பாவை பாடல்கள் பாடும் இளைஞர்கள்

நவாலி, டிசெ.29

திருவெம்பாவையொட்டி நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்திலிருந்து அப்பகுதி இளைஞர்கள் அதிகாலை 4.30 மணி முதல் வீதிகள் தோறும் சங்கு சேமக்கலம் என்பவற்றின் ஒலிகள் முழங்க திருவெம்பாவை பாடல்களைப் பாடி மக்களைத் தினமும் துயிலெழுப்பி வருகின்றார்கள்.

(50-100)

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை மறுதினம் பஞ்சரதப் பவனி!

காரைநகர், டிசெ. 29

வரலாற்றுப் பிரசித்திபெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவ பஞ்சரத பவனி நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

திருவாதிரை உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இந்த உற்சவத்தைத் தரிசிப்பதற்காகத் தினமும் பெருந்திரளான பக்தர்கள் ஈழத்துச் சிதம்பரத்தை நோக்கி வந்த வண்ணம் உள்ளனர்.

இம்முறை புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும், கொழும்பு போன்ற பிற மாவட்டங்களில் இருந்தும் பெருமளவானோர் ஆலயத்திற்கு வருகை தந்துள்ளதுடன் அவர்கள் காவடி, அங்கப்பிரதட்சணை போன்ற பல்வேறு நேர்த்திக் கடன்களையும் நிறைவு செய்து வருகின்றனர்.

வியாழக்கிழமை அதிகாலை 5 மணி முதல் மூலமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றுக் காலை 7 மணிக்கு இடம்பெறும் வசந்தமண்டபப் பூசையை அடுத்து மு.ப 9 மணியளவில் நடராஜப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் தேரிற்கு எழுந்தருளிப் பஞ்சரத பவனி இடம்பெறும்.

அன்று இரவு 2 மணி முதல் நடேசர் அபிஷேகமும் மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு நடேசர் ஆருத்திரா தரிசனமும் மாலை 3 மணிக்கு திருவூஞ்சல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

தினமும் யாழ். பஸ்தரிப்பு நிலையத் தில் இருந்து ஆலயம் வரை இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் என்பன நேரடி பஸ் சேவைகளை நடத்தி வருவதுடன் ஆலயச் சூழலில் உள்ள மாணிக்கவாசகர் மடாலயம் ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையம் என்பவற்றில் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

பல நூறுவருடங்களாகப் புரைமைப்புச் செய்யப்படாமல் சேதமடைந்திருந்த சுற்றுவீதி மண்டபங்கள் மிகக் குறுகிய காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அழகிய சிற்ப வேலைப்பாடுகள், நடராஜாவின் 108 தாண்டவங்களுடன் கூடிய பளிங்கு மண்டபமாக ஆலய உள்வீதி பார்ப்பவர்களைப் பிரமிப்பூட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(04-250)

## மணிவாசகர் சபை நடத்திய சைவசமயப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்.டிசெ.29

காரைநகர் மணிவாசகர் சபை காரைநகர் பிரதேச பாடசாலைகளுக்கிடையே நடத்திய சைவசமய பாடப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின.

இந்தப் பரீட்சையில் அதிஉயர் புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்களுக்குப் தங்கப் பதக்கங்களும் தரம் ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் நேற்று திங்கட்கிழமை ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் வழங்கப்பட்டன.

பரிசுபெற்றோர் விவரம் வருமாறு-

செல்வி பா.சிவராசினி (தரம் 3- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), செல்வன் செ.பிரசாந்தன் (தரம்6-யாழ்ற்ரன் கல்லூரி), செல்வி ப. காயத்திரி (தரம் 6-யாழ்ற்ரன் கல்லூரி) யோ.விதுஷா (தரம் 9- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), செல்வி ந.ராகினி (தரம் 11-வியாவில் சைவவித்தியாலயம்) ஆகிய ஐந்து மாணவர்களும் தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

தரம் ரீதியாக முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

தரம்-2: அ.ரவீந்திரன் (சுந்தரமூர்த்தி நயனார் வித்தியாலயம்), வி.அபிராமி (தியாகராசா ம.ம.வி), சி.ஐஸ்வரியா (யாழ்ற்ரன் கல்லூரி), பூ.ஆனந்தராஜ் (தியாகராசா ம.ம.வி), தே.ஜென்சிகா (தியாகராசா ம.ம.வி).

தரம்-3: பா.சிவராஜினி (தியாகராஜா ம.ம.வி) சு.புயலிசை (யாழ்ற்ரன் கல்லூரி), சு.விதுர்சன் (ஊரிஅ.மி. பாடசாலை), ரி.அரவிந்தன் (வலந்தலை வடக்கு அ.மி. பாடசாலை), ச.கலைமாலன் (சுந்தரமூர்த்திநாயனார் வித்தி).

தரம்-4: செ.பிரசாந்தன் (யாழ்ற்ரன் கல்லூரி), தே.டனுசன் (ஊரி அ.மி.பாடசாலை), த.தன்சியா (தியாகராசா ம.ம.வி), அ.சோஜினி (யாழ்ற்ரன் கல்லூரி), செ.கீர்த்தனா (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம்-5: த.குணாதரன் (யாழ்ற்ரன் கல்லூரி), உ.குகதூசன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி), நி.பிரியங்கா (வியாவில் சைவ வித்தியாசாலை), ச.பிரதீபா (மெய்கண்டான் வித்தியாலயம்), ஆ.அருந்தா (தியாகராசா ம.ம.வி).

தரம்-6: ப.காயத்திரி (யாழ்ற்ரன் கல்லூரி), த.திருமகள் (யாழ்ற்ரன் கல்லூரி), செ.தேனுகா (தியாகராசாம.ம.வி), பே.சரண்யா (சுந்தரமூர்த்தி நயனார் வித்தி), கி.சயந்தன் (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம்-7: மோ.பகீரதி (தியாகராசா ம.ம. வி), ந.தீபிகா (சுந்தரமூர்த்தி நயனார் வித்தியாலயம்), ந.குகதாசன் (யாழ்ற்ரன் கல்லூரி), ம.சிவகௌரி (யாழ்ற்ரன் கல்லூரி), கி.சோபனா (தியாகராசா ம.ம.வி).

தரம்-8: நி.பிரசாந் (தியாகராசா ம.ம. வி), கோ.கஸ்தூரி (தியாகராசா ம.ம.வி), பா.கேசாயினி (தியாகராசா ம.ம.வி), க.சாந்தினி (தியாகராசா ம.ம.வி), சி.சர்வனன் (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம்-9: யோ.விதுஷா (தியாகராசா ம.ம.வி), ந.மிதுனா (தியாகராசா ம.ம.வி), உ.பிரியங்கா (தியாகராசா ம.ம.வி), சி.ராகுலன் (தியாகராசா ம.ம.வி), க.பானுஜா (தியாகராசா ம.ம.வி).

தரம்-10: கி.சிவநிறஞ்சனா (தியாகராசா ம.ம.வி), சி.சுவிதா (தியாகராசா ம.ம.வி), கி.நிசாந் (தியாகராசா ம.ம.வி), ந.யருஷா (தியாகராசா ம.ம.வி), பா.பரதன் (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம்-11: ந.ராகினி (வியாவில் சைவ வித்தியாலயம்), கோ.மிறோஜா (தியாகராசா ம.ம.வி), யோ.ஜஸ்மினா (யாழ்ற்ரன் கல்லூரி), ஆ.வேணி (தியாகராசா ம.ம.வி), செ.கேசினி (தியாகராசா ம.ம.வி),

இவர்களுக்கான பதக்கங்களையும் பரிசில்களையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மணிவாசகர் விழாவில் வழங்கிக் கௌரவித்தார்.

(04-250)

## சான்றிதழ் வழங்கல்

வலி.வடக்கு, டிசெ. 29

சாந்திகம் உளவளத்துறை நிலையத்தினால் நடத்தப்பட்ட சமுதாய மட்ட மையக் குழுப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை மு.ப 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் தலைவர் இ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உளமருத்துவ நிபுணர் சா.சிவயோகனும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

(04-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சர்வதேச சோட்டோக்கான் கராத்தே சம்மேளனத்தின் 2ஆவது தேசிய சம்பியன் போட்டிகள் களனி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றன. இதில் மத்திய பிரிவினருக்கான கராத்தே போட்டி ஒன்றுக்கு சோட்டோக்கான் சம்மேளனத்தின் யாழ்.மாவட்ட பயிற்றுவிப்பாளர் சென்சேய் ரஞ்சித் சைலேந்திரகுமார் மத்தியஸ்தம் செய்வதை முதலாவது படத்திலும்-
போட்டியில் பங்குபற்றிய வீரர்கள், வீராங்கனைகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

## மஞ்சி கிண்ணக் கரப்பந்தாட்டத்தில் பங்குகொள்ள விரும்பும் கழகங்களுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.29

மஞ்சி பிஸ்கட் நிறுவனம் தேசிய ரீதியில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டி மாவட்டம், மாகாணம், தேசிய ரீதியாக நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்திற்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அடுத்தமாதம், 16ஆம், 17ஆம், 23ஆம், 29ஆம், 30ஆம், 31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் எஸ்.ஏகாம்பரநாதன், செயலாளர் எஸ்.மனோகரன் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன. (04-23)




## றோட்டறக்ட் கழக கரப்பந்தாட்ட இறுதியாட்டம் ஜனவரி 16ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிசெ.29

பல்கலைக்கழக மக்கள் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணியும், ஆவரங்கால் இந்து வாலிபர் விளையாட்டுக் கழக அணியும், பெண்கள் பிரிவில் சங்கானை விளையாட்டுக் கழகமும், கே.கே.எஸ். ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளன. இறுதியாட்டம் ஜனவரி 16ஆம் திகதி இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர் வல்வக்குமரன் தெரிவித்துள்ளார். (50-23)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஜொலிஸ்ரார் வி.க.வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.


நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.சி.சி.சி. 'ஏ' அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கே.சி.சி.சி.விளையாட்டுக் கழக அணியை 73:62 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (50-23)

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் மத்தி அணி வெற்றி வாகை!

யாழ்ப்பாணம், டிசெ 29

யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சனிக்கிழமை றக்கா வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.



இதில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கே.கே.எஸ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் ஆவரங்கால் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியின் நடுவர்களாக கே. நாகேந்திரம், எஸ்.அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினர். (04-23)

## மணிவாசகர் சபையினர் நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

காரைநகர் மணிவாசகர் சபையினர், மணிவாசகர் விழாவை முன்னிட்டுப் பேச்சுப் போட்டி, மனனப்போட்டி, பண்ணிசைப் போட்டி என்பனவற்றைக் காரைநகர் பாடசாலை மாணவர்களிடையே நடத்தினர்.

இந்தப் போட்டியில் பிரிவு ரீதியாக முதல் ஐந்து இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு நாளை புதன்கிழமை ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்றுவரும் மணிவாசகர் விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பிரிவு ரீதியாக முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு-

### பேச்சுப் போட்டி

**பிரிவு -1**

1ஆம் இடம்-சி.சிவலோகன்-யாழ்ற்றன் கல்லூரி, 2ஆம் இடம்-அ.பிரணவரூபன்-சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், 3ஆம் இடம்- சி.ஐஸ்வரியா-யாழ்ற்றன் கல்லூரி, 4ஆம் இடம்- ச.கஜமாலன்- சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், 5ஆம் இடம்-சி.காருண்யன்-யாழ்ற்றன் கல்லூரி.

**பிரிவு-2**

1ஆம் இடம்- க.கீர்த்திகா- காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், 2ஆம் இடம்- சி.சிவரஞ்சன்-யாழ்ற்றன் கல்லூரி, 3ஆம் இடம்- சு.கஜந்தன்-காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், 4ஆம் இடம்- ஜெ.சர்ணியா-காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், 5ஆம் இடம்-சு.தர்மினி-காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்.

**பிரிவு-3**

1ஆம் இடம்- த.ஆரணி-யாழ்ற்றன் கல்லூரி, 2ஆம் இடம்- சு.மனோகரி-யாழ்ற்றன் கல்லூரி, 3ஆம் இடம்- மோ.பகீரதி- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 4ஆம் இடம்- பா.டிசாந்- யாழ்ற்றன் கல்லூரி, 5ஆம் இடம்-அ.தேவகஜன்- யாழ்ற்றன் கல்லூரி.

**பிரிவு-4**

1ஆம் இடம்-க.கௌரீதன்-யாழ்ற்றன் கல்லூரி.

**பிரிவு-5**

1ஆம் இடம்- அ.ரேவதி- யாழ்ற்றன் கல்லூரி, 2ஆம் இடம்- சி.சுகன்யா- யாழ்ற்றன் கல்லூரி, 3ஆம் இடம்-நா.யதீஸ்வரி-வியாவில் சைவவித்தியாலயம், 4ஆம் இடம்-ம.மாதுளன்-யாழ்ற்றன் கல்லூரி.

**பிரிவு - 6**

1ஆம் இடம்- வ.கஜனி-யாழ்ற்றன் கல்லூரி.

### பண்ணிசைப் போட்டி

**பிரிவு-1**

1ஆம் இடம்-ஆ.அமிர்தா- க[illegible]நிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 2ஆம் இ[illegible]ம் வ.லவிந்தா-சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், 3ஆம் இடம்-க.தர்சிகா- வியாவில் சைவ வித்தியாலயம், 4ஆம் இடம்-தே.கோகுலரமணன்-சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், [illegible] வலந்தலை [illegible], 5ஆம் இடம்- உ.சங்கீதா- காரை மெய்கண்டான் வித்தியாலயம்.

**பிரிவு-2**

1ஆம் இடம்- ஆ.அருந்தா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 2ஆம் இடம்- அ.சோஜினி-யாழ்ற்றன் கல்லூரி, 3ஆம் இடம்- ச.பிரதீபா-காரைநகர் மெய்கண் டான் வித்தியாலயம், 4ஆம் இடம்- கி.துர்க் காயினி- சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், 5ஆம் இடம்-வி.அனோசன்-யாழ்ற் றன் கல்லூரி.

**பிரிவு-3**

1ஆம் இடம்-மோ.பகீரதி-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 2ஆம் இடம்-கு. அமுதா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 3ஆம் இடம்-க.சோபனா-கலாநிதி ஆ.தியா கராசா ம.ம.வி, 3ஆம் இடம்- ப.காயத் திரி-யாழ்ற்றன் கல்லூரி, 4ஆம் இடம்-ந.கல் யாணி-யாழ்ற்றன் கல்லூரி, 5ஆம் இடம்- ம.சிவகௌரி-யாழ்ற்றன் கல்லூரி.

**பிரிவு-4**

1ஆம் இடம்-மு.தர்ஜிகா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 2ஆம் இடம்-தே. மேகலை-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 3ஆம் இடம்- க.நிருஷா- வியாவில் சைவ வித்தியாலயம்.

**பிரிவு-5**

1ஆம் இடம்-சி.சுகன்யா-யாழ்ற்றன் கல்லூரி.

**பிரிவு-6**

1ஆம் இடம்-க.கோகிலா-யாழ்ற்றன் கல்லூரி, 2ஆம் இடம்- ச.கிருஷ்ண வேணி-யாழ்ற்றன் கல்லூரி, 3ஆம் இடம்- வ.கஜனி-யாழ்ற்றன் கல்லூரி,

### மனனப் போட்டி

**பிரிவு-1**

1ஆம் இடம் - ச.கஜமாலன்- சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலம், 2ஆம் இடம் - அ.பிரணவரூபன்- சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், 3ஆம் இடம் -ஏ.கோபிநாத்- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 4ஆம் இடம் - ச.புயலிசை- யாழ்ற் றன்கல்லூரி, 4ஆம் இடம் சி.ஐஸ் வரியா- யாழ்ற்றன் கல்லூரி, 5ஆம் இடம் 3 அ.ரவீந்திரன்-சுந்தரமூர்த்தி நாயனார் வித் தியாலயம்.

**பிரிவு-2**

1ஆம் இடம் - ஆ.வேதப்பிரியா- காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், 2ஆம் இடம் - சோ.நிரோஜினி- காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், 3ஆம் இடம் - லோ.குருபரன்- யாழ்ற்றன் கல்லூரி, 4ஆம் இடம் -க. அபினோசா- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, 5ஆம் இடம் - ஜெ.சரணியா- காரைநகர் மெய்கண் டான் வித்தியாலயம்.

**பிரிவு-3**

1ஆம் இடம் - த.ஆரணி-யாழ்ற்றன் கல்லூரி, 2ஆம் இடம் - ம.சிவகௌரி- யாழ்ற்றன் கல்லூரி, 3ஆம் இடம் - ம.நவநிலா- யாழ்ற்றன்கல்லூரி, 4ஆம் இடம் தே.கிருஷாந்தினி- வியாவில் சைவ வித்தியாலயம்.

**பிரிவு-4**

1ஆம் இடம் -சி.சர்வணன்- யாழ்ற்றன் கல்லூரி.

**பிரிவு-5**

1ஆம் இடம் -நா.யதீஸ்வரி- வியாவில் சைவ வித்தியாலயம், 2ஆம் இடம் - க.சுவேதிகா- யாழ்ற்றன் கல்லூரி, 2ஆம் இடம் -கி. கிரிஷா- யாழ்ற்றன் கல்லூரி, 3 ஆம் இடம் - சி. நிரோஜன்-யாழ்ற்றன் கல்லூரி. ( 250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.09.1986

★ அரசைக் கவிழ்க்கச் சதி செய்யப்படுவதாகவும், எந்த எதிர்ப்பு வந்தாலும் இனப்பிரச்சினையைத் தாம் தீர்த்து வைக்கப் போவதாகவும் ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

★ தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ச் சந்தேக நபர்கள் அனைவரதும் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படுமென அமைச்சர்லலித் அத்துலத்முதலி உறுதியளிப்பு.

18.09.1986

★ ஆனையிறவு இராணுவ முகாம்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் காவலரண்கள் சேதம்; சிப்பாய்கள் உயிரிழப்பு.

★ படுவான்கரை பகுதி அகதிகளுக்கு நிவாரணப் பொருள்களை அனுப்ப மட்டக்களப்பு அரச அதிபர் மேற்கொண்ட முயற்சிக்கு ஆயுதப் படையினர் தடை விதிப்பு.

★ சர்வதேச மன்னிப்புச் சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ள, இலங்கையில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் பட்டியலில் உள்ள 272 பேரில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் தமிழர்களே.

19.09.1986

★ மட்டக்களப்பு நகரில் படையினர் வெறியாட்டம். 15 அப்பாவித் தமிழர்கள் பலி.

★ இலங்கையில் சூழ்நிலை சரியில்லை எனக் காரணம்காட்டி கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாடொன்றுக்கு வரவிருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் வருகை ரத்து.

★ திருகோணமலை, தம்பலகாமத்தில் மற்றொரு மின்கோபுரம் குண்டு வைத்துத் தகர்ப்பு.

20.09.1986

★ மட்டக்களப்பு நகரில் கைது செய்யப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்களை படையினர் சுட்டுக் கொன்றிருக்கலாம் என மக்கள் மத்தியில் அச்சம்.

★ திருகோணமலை ஆஸ்பத்திரியில் கடமையாற்ற முன்வரும் வைத்திய அதிகாரிகளுக்கு விசேட அலவன்ஸ் வழங்க அரசு முடிவு.

21.09.1986

★ வெலிக்கடை சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற் கொண்டிருக்கும் தமிழ்க் கைதி இளைஞர்கள் எட்டுப் பேர் மயங்கி விழ்ந்தனர்.

★ இராணுவத்தீர்வு ஒன்றுக்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்காகவே அரசு, அரசியல் பேச்சு வார்த்தை எனக் காலத்தை இழுத்துச் செல்கிறது என கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப்பீடம் விமர்சிப்பு.

★ இலங்கைத் தமிழர் பிரச்சினையை இலங்கை அரசு நீடித்துக் கொள்ள இடமளிக்காது, இந்தியா உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக மின்துறை அமைச்சர் பன்ருட்டி இராமச்சந்திரன் தெரிவிப்பு.

22.09.1986

★ பூஸா, வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் தமிழ்க்கைதிகள் நடத்திவரும் நீதி கோரும்போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்ப்பகுதிகளில் நீதிமன்றப் பகிஷ்கரிப்பு நடத்துமாறு ஆறு அமைப்புக்கள் அழைப்பு.

★ நாங்களும் தாக்கமாட்டோம்; புலிகளையும் தாக்க வேண்டாம் எனக்கூறுமாறு வல்வெட்டித்துறைப்பகுதி மீனவர்களிடம் கடற்படையினர் கூறினார்களாம்.

23.09.1986

★ மட்டக்களப்பு மாவட்டம்-வாகனேரியில் அப்பாவித் தமிழர்கள் 16 பேர் படையினரால் சுட்டுக்கொலை.

★ தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு.

★ இலங்கை அரசின் தபால் தலைகள் ஒட்டப்பட்ட கடிதங்கள் யாழ்.குடாநாட்டிற்குள் பரிவர்த்தனையிலிருந்து தடைசெய்யப்படுவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் அறிவிப்பு.

24.09.1986

★ இனப்பிரச்சினை தொடர்பான மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் த.வி. கூட்டணி பங்கு பற்றாவிட்டால், நாம் மற்றவர்களிடம் பேசுவோம் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு.

★ கனடாவிலுள்ள இலங்கைத்துதர் பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க மீது மனித உரிமைமீறல் குற்றச்சாட்டைச் சுமத்திய தமிழ் இளைஞனை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு கனடா அரசிடம் இலங்கை அரசு கோரிக்கை.

★ அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக ஈழவர் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் எதிர்ப்பு ஊர்வலம்.

25.09.1986

★ திம்பு பேச்சுக்களின் போது முன்வைக்கப்பட்ட நாலு அம்சக் கோரிக்கைக்குக் குறைந்த எதையும் நாம் ஏற்கமாட்டோம் என ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதி தெரிவிப்பு.

★ போராளிக் குழுக்களின் சம்மதமின்றி த.வி. கூட்டணி இலங்கை அரசுடன் இனப்பிரச்சினை தொடர்பான எவ்வித ஒப்பந்தமும் மேற்கொள்ளாது என இந்திய வெளியுறவு அமைச்சர் தமிழ் போராளிகள் குழுக்களிடம் உறுதியளிப்பு.

26.09.1986

★ சர்வோதய இயக்கத்தின் முக்கிய பொறுப்பான பதவிவகிக்கும் தமிழ் அதிகாரி ஒருவரிடம் தாம் மேற்கொண்ட விசாரணைகளில் சர்வோதய இயக்கம் தமிழ்ப் போராளிகளை அரசுக்குக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் செயற்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஈரோஸ் அமைப்பு தெரிவிப்பு.

★ மாகாண சபை நிறுவுவதற்கு எதிராக தென்னிலங்கையில் தீவிரமடையும் கிளர்ச்சிகளை அடக்க கடும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு முடிவு.

27.09.1986

★ பூஸா, வெலிக்கடை சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ் இளைஞர்களில் 27 பேரின் உடல்நிலை மோசமடைந்துள்ளது.

★ ஐக்கிய இலங்கைக்குள் தமிழ்மொழி மாநிலம் பெற்றுத்தருவதில் தாம் உறுதியாக இருப்பதாக இந்திய அரசு தமிழ் அமைப்புக்களிடம் தெரிவிப்பு

28.09.1986

★ ஈழம் தபால் முத்திரையை ஒட்டிக் கொழும்பிலிருந்து அச்சுவேலிக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்று உரிய முறையில் விலாசதாரரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

★ தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரை உடனடியாக பதவி விலகக்கோரி அ.தி.மு.கட்சிக்குள் உட்கட்சிப் போர் வலுத்துள்ளது.

★ இனப்பிரச்சினை தொடர்பான இலங்கை அரசின் யோசனைகள் குறித்து விளக்கம் அளிப்பதற்காக புதுடில்லி வருமாறு இந்திய அரசு விடுத்த அழைப்பையடுத்து சென்னையிலிருந்து தமிழ் விடுதலைப் போராளி அமைப்புக்களின் தலைவர்கள் புதுடில்லிக்குப் பயணம்.

29.09.1986

★ காரைநகரில் கடற்படை முகாமிற்கான மின்சார விநியோகம் போராளிகளால் துண்டிப்பு. இது படையினருக்கு நெருக்கடி கொடுக்கும் வகையிலான நடவடிக்கை என ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் அறிவிப்பு.

★ மேற்கு ஜேர்மன் பொறியியலாளரொருவர் விமானக் குண்டுவீச்சில் கொல்லப் பட்டதையடுத்து திருகோணமலையில் பணிபுரியும் மேற்கு ஜேர்மன் அதிகாரிகளை திருப்பி அழைப்பது குறித்து ஜேர்மன் தூதரகம் ஆலோசனை.

★ பூஸா, வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற் கொண்டுவரும் தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் உண்ணாவிரதம் ஐந்தாவது நாளாக நீடிப்பு.

30.09.1986

★ வடபகுதியில் மட்டும் இ.போ.ச பஸ் கட்டணத்தை அதிகரித்திருப்பதை எதிர்த்து வட பகுதி பயணிகள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக முன்னறிவிப்பு.

★ மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் அதிபரின் மகன் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை.

★ மாகாண சபையை எதிர்த்து நீதிமன்றம் செல்வோம்; அதில் தோல்வி கண்டால் மக்கள் கிளர்ச்சி வெடிக்கும் என அத்தனகல நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் ஜெயக்கொடி தெரிவிப்பு.

# வன்னிக்கு மின்சாரம் விநியோகம்

கொழும்பு, டிசெ .29

வன்னிக்கு பல வருடங்களாக மின்சாரம் இல்லாமல் வாழ்ந்த மக்களுக்கு இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. யுத்த காலத்தின்போது செயலிழந்த நகர மின்சார விநியோகம் சீர்செய்யப்பட்டு வருகிறது - என்று வடக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் சந்திர பெர்ணாண்டோ தெரிவித்தார் .

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுபவை வருமாறு:-

பல வருடகாலமாக வன்னிப் பகுதிலுள்ள பல கிரமங்களில் மின்சாரமே இல்லாது மக்கள் வாழ்ந்தனர் இவர்கள் இப்பொழுது மின்சாரத்தைப் பெற்றுள்ளனர். பொதுவாக முல்லைத்தீவு பிரதேச கிராமங்கள், கிளிநொச்சி பிரதேச கிராமங்கள் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. கிராமிய மின்சார யுகம் என்ற தொனியில் வழங்கப்படும் இந்த மின்சாரம் விநியோகம் மூலமாக பல சிறு கிராமங்கள் அபிவிருத்தியடைந்துள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இப்பொழுது வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்திற்கும், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கும் கிளிநொச்சி நகரத்துக்கும் உயர் அழுத்த மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மன்னார் பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கும் தாழ்அழுத்த மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளதுடன் சகல வீகளுக்கு மின்சாரம் வழங்கப் பட்டுள்ளது.

இதைவிட மன்னார், மாந்தை மேற்கு காக்குத்தான் குளம் கிராமங்களுக்கும் ஏற்கனவே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை கிராமிய மின்சார யுகம் மூலம் கரைச்சி செயலாளர் பிரிவுக்கும், பூநகரி செயலாளர் பிரிவுக்கும் மின்சாரம் வழ்ங்க நடவடிக்கைகள் நடைபெறுகின்றன- என்றார்.

இது அவ்வாறிருக்க, கிளிநொச்சி பகுதியில் தற்போது இயல்புவாழ்க்கை திரும்பியிருப்பதாக பொதுமக்கள் சிலர் கருத்து தெரிவித்தனர். கிளிநொச்சியில் பணியாற்றும் அரச ஊழியர்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்திற்கும், கிளிநொச்சிக்குமிடையில் தினமும் மூன்று பஸ் சேவைகள் இடம் பெற்று வருகின்றன. அதேநேரம் கிளிநொச்சியிலிருந்து தனியார் பஸ் உரிமையாளர்கள், யாழ்ப்பாணத்திற்கு மக்களைக் கூவி அழைத்து பஸ்களில் ஏற்றும் அளவுக்கு நிலைமை வழமைக்கு திரும்பியிருக்கிறது என அங்குள்ள பொது மக்கள் தெரிவித்தனர். ஏ-9 வீதியின் போக்குவரத்தும் சுமுகமாக இடம் பெறுகிறது என அவர்கள் தெரிவித்தனர். (சி)

# ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையைப் பெறுவதற்கு பேச்சு நடத்தப்படுகிறது - அமைச்சர் ரோஹித

கொழும்பு, டிசெ. 29

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்தும் நாட்டுக்கு பெற்றுக் கொள்வதற்கான பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவிக் கின்றது.

இது தொடர்பாக ஐரோப்பிய சங்கத்தின் அங்கத்துவ நாடுகள் பலவற்றுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என அமைச்சர் ரோஹித்த போகெல்லாகம குறிப்பிட்டார்.

கடந்த சில தினங்களில் வெளிவிவகார அமைச்சர்களுடன் தொலைபேசி உரையாடல்கள் மூலம் இவ்விடயங்கள் குறித்து பேசப்பட்டது என அமைச்சர் கூறினார்.

இது தவிர தூதரகங்கள் ஊடாகவும் ஐரோப்பிய சங்கத்தின் அங்கத்துவ நாடுகளை தெளிவுபடுத்துவதாக அமைச்சர் தெரிவித்தார்.

பெல்ஜியத்தின் பிரஸெல்ஸில் அமைந்துள்ள ஐரோப்பிய சங்கத்தின் தலைமையக அதிகாரிகளுடன் இது குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இப் பேச்சுகளின்போது ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை நீடிப்பது குறித்து சாதகத் தன்மை நிலவியதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (சி)

# ஆழிப்பேரலை பாதித்த 1048 குடும்பங்கள் இன்னமும் நிரந்தர வீடுகளின்றித் தவிப்பு

கொழும்பு, டிசெ. 29

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 1048 குடும்பங்கள் இன்னமும் நிரந்தர வீடுகளின்றி அல்லலுறுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கல்முனை மற்றும் சம்மாந்துறைப் பகுதிகளில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இருப்பிடங்களை இழந்தவர்கள் இன்னமும் தற்காலிக இடங்களிலேயே தங்கியுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகிறது.

கல்முனை மற்றும் சம்மாந்துறை பகுதிகளே ஆழிப்பேரலையால் அதிகம் பாதிக் கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஆழிப்பேரலை அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் ஒதுக்கப்பட்ட 47 கோடி 20 லட்சம் அமெரிக்க டொலர் பணத்திற்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து தெரியவில்லை என ட்ரான் பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு சுட்டிக் காட்டியுள் ளது.

ஆழிப்பேரலை நிவாரண நிதி உதவி கள் தொடர்பான கணக்காய்வுப் பரிசீலனை மிகவும் அவசியமானதெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சி)

# தமிழ் நாட்டில் தங்கியுள்ள ஈழஅகதிகள் தாயகம் திரும்புவதில் ஆர்வம்

சென்னை,டிசெ.29

தமிழ் நாட்டில் தங்கியுள்ள ஈழ அகதி கள் பலர் சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதாக இலங்கை அகதிகளுக்கான மறுவாழ்வுத்துறை ஆணையாளர் கலைவாணன் தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றம் நடவடிக்கைகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தமிழ் நாட்டில் தங்கியுள்ள ஈழ அகதிகளும் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் கடந்த சில வாரங்களில் பத்துக் குடும்பங்கள் திருகோணமலைக்குத் திரும்பியுள்ளன.

அதேவேளை மேலும் பெரும் எண்ணிக்கையானோர் தமிழகத்தில் இருந்து சொந்த இடங்களுக்குத் திரும்ப விண்ணப்பித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி நடைபெறவுள்ள அரச அதிபர் தேர்தலுக்குப் பின்னர் பெருமளவானோர் தமிழகத்தில் இருந்து சொந்த இடங்களுக்குத் திரும்ப பலர் ஆர்வத்துடன் இருக்கின்றனர்.

தமிழ் நாட்டு முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் மீளத்திரும்புவதில் சிக்கலான நடைமுறைகள் பின்பற்றப்படுவதால் பலரும் கடல்வழியாகத் தாயகம் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

இந்திய அரசின் அனுமதியின்றிப் படகுகள் மூலம் திரும்பிய ஆறு அகதிகள் கடந்த 27ஆம் திகதி நெடுந்தீவுக்கு அப்பால் உள்ள சிறிய தீவு ஒன்றில் கைவிடப் பட்ட நிலையில் இலங்கைக் கடற்படையி னரால் மீட்கப்பட்டனர்.

இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த இரு சிறுவர்கள் உள்ளிட்ட ஆறு பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டு மன்னார்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பெருமளவுபணத்தைக் கொடுத்தே இவர்கள் கடல் வழியாக சொந்த இடம் திரும்ப முயன்றதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

தமிழ் நாட்டில் இருந்து மீளத்திரும்பும் அகதிகளுக்கான நடைமுறைகள் இறுக்கமாகவும் நீண்ட கால இழுபறி கொண்டதாகவும் இருப்பதாலேயே அகதிகள் பலரும் கடல் வழியாக சொந்த இடங்களுக்குத் திரும்ப முயற்சிப்பதாகவும் தெரியவருகிறது. (சி)

# சமுர்த்தி அதிகார சபை நடத்திய போட்டியில் இணுவில் சமுர்த்தி வங்கி யாழ்.மாவட்டத்தில் முதலிடம்

வலி.வடக்கு,டிசெ.29

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட சமுர்த்தி வங்கிகளுக்கு இடையேயான போட்டியில் உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இணுவில் சமுர்த்தி வங்கி யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

சிறந்த சேமிப்பு, கடன்வழங்குதல் கடனை மீளப் பெறல், நிர்வாகச் செயற்பாடு என பல விடயங்களையும் கொண்டு இப்போட்டி இடம்பெற்றது.

அண்மையில் கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற சமுர்த்தி வங்கிகளுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வில் இணுவில் சமுர்த்தி வங்கிக்கான சிறந்த வங்கி என்ற பரிசையும், சான்றிதழையும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

வங்கியின் முகாமையாளராக திருமதி ஆனந்த கௌரி கடமையாற்றுகின்றார்.

(50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 வருடங்களைப் பூர்த்திசெய்தார் சனத்

## கிரிக்கெட் சபைக்குத் தெரியுமா?

புதுடில்லி, டிசெ. 28

''எனது இருபது வருட பூர்த்தி இலங்கைக்கிரிக்கெட் சபைக்குத் தெரியுமா என்பது கூட எனக்குத் தெரியாது. இதை நினைக்கும்போது மிகவரும் வருத்தமாக இருக்கிறது'' - என்று இலங்கை அணியின் அதிரடிமன்னன் ஜெயசூர்யா கூறியுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் ஜெயசூர்யா, 1989ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம திகதி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டின் மூலம் சர்வதேசக் கிரிக்கெட்டுக்கு அறிமுகமானார்.

தொடக்கத்தில் நடுவரிசையில் ஆடிவந்த அவர், 1994ஆம் ஆண்டு ஆரம்ப வீரராகக் களமிறங்கி, எதிரணியின் பந்துவீச்சாளர்களைத் துவம்சம் செய்தார்.

1996ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றமைக்கு ஜெயசூர்யாவின் பங்களிப்பும் முக்கியமானது. சமீப காலமாகச் சற்றுத் தடுமாறி வந்தாலும் 40 வயதிலும் அவரது கிரிக்கெட் ஆர்வம் சிறிதும் குறையவில்லை.

இதுவரை 110 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 14 சதங்கள் உட்பட 6,973 ஓட்டங்களும், 443 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 28 சதங்கள் உட்பட 13,397 ஓட்டங்களையும் குவித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் 322 விக்கெட்டுகளையும் கைப்பற்றி இருக்கிறார்.

சர்வதேச கிரிக்கெட்டில் நுழைந்து 20 ஆண்டுகளை நேற்றுமுன்தினம் அவர் பூர்த்திசெய்தார்.

இந்த நிலையில் தனது 20 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கை பற்றி ஜெயசூர்யா மனம் திறந்த கூறியவை வருமாறு:-

''டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து சமீபத்தில் ஓய்வு பெற்றுவிட்டேன். ஒருநாள் போட்டிகளில் கொஞ்சம் நீண்ட காலமாக விளையாடி வருகிறேன். நான் எப்போதும் கிரிக்கெட்டை மகிழ்ச்சியுடன் ரசித்து விளையாடுகிறேன். இன்னும் அதே உத்வேகத்துடன் இருக்கிறேன். அதற்காகக் கடினமாக உழைக்கிறேன். இன்னும் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.



''சர்வதேசக் கிரிக்கெட்டில் நான் நுழைந்து இன்றுடன் (நேற்றுமுன்தினம்) 20 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இதுபற்றி இலங்கை கிரிக்கெட் சபைக்குத் தெரியுமா? என்பது எனக்குத் தெரியவில்லை, இதை நினைக்கும்போது வருத்தமாக உள்ளது.

''இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் எவ்வளவு கஷ்டப்பட்டு நுழைந்தேன் என்பது எனக்குத் தெரியும். நான் ஏழைக் குடும்பப் பின்னணியில் இருந்து வந்த ஒரு சாதாரண நபர். கிரிக்கெட்டுக்குள் வரும்போது என்னிடம் எதுவு கிடையாது. வாழ்க்கை எவ்வளவு கஷ்டம் என்பது எனக்குத் தெரியும். அதனால் கிரிக்கெட்டில் நீண்ட நாட்கள் ஆட வேண்டும் என்றால் மிகவும் கடினமாக உழைக்க வேண்டும் என்பதைப் புரிந்து வைத்திருந்தேன்.

''பாடசாலையில் கிரிக்கெட் ஆடிக்கொண்டிருந்தபோது இலங்கைக் கிரிக்கெட் அணிக்காக விளையாடுவேன் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. அதேபோல் மாத்தறை (ஜெயசூர்யாவின் சொந்த ஊர்) போன்ற சிறிய கிராமங்களிலிருந்து எந்தக் கிரிக்கெட் வீரரும் சர்வதேசக் கிரிக்கெட்டுக்கு வந்தனர் என்பதை நான் கேள்விப்பட்டதில்லை. ஏழைக் குடும்பம் என்பதால் நான் கிரிக்கெட் ஆடும் போது எனது தாயார் திட்டுவார். எனது தந்தை நகராட்சியில் சுகாதார பணியாளர். அவரது வருமானத்தில் மட்டுமே நாங்கள் பிழைப்பு நடத்தினோம். அதனால் வாழ்க்கையை ஓட்டுவதே கஷ்டமாக இருந்தது.

''இந்தச் சூழலில் எனது பாடசாலையின் அதிபர் காளாப்பதி என்னை அதிகமாக ஊக்கப்படுத்தினார். அவனது போக்கில் விட்டுவிடும்படி எனது பெற்றோரையும் சமாதானப்படுத்தினார். அதைத் தொடர்ந்து 11 வயதுக்குட்பட்டோருக்கான அணியில் விளையாடினேன். அதன் பிறகு அதிர்ஷ்டவசமாக 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிக்குரிய இலங்கை அணியில் தெரிவு செய்யப்பட்டேன்.

''அப்போது முதல்தர கிரிக்கெட்டில் விளையாடுவதற்காக கொழும்பு வந்துவிட்டு மீண்டும் எனது ஊருக்குத் திரும்புவதற்கு 4 மணி நேரத்திற்குமேல் ஆகிவிடும். இரவில்தான்வீடு திரும்புவேன். இந்த அனுபவத்தின் மூலம் கஷ்டப்பட்டு ஆடுவதையும், தொடர்ந்து உடல் தகுதியுடன் இருப்பதற்கும் பழகிக் கொண்டேன். 'கஷ்டப்பட்டு உழைத்தால், நம்மால் எதையும் சாதிக்க முடியும்'என்று எனது தாயார் பிரீடா சொல்வார். அது எனக்கு ரொம்ப உதவிகரமாக இருந்தது.

''ஆஸ்திரேலியாவில் நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்காக நான் செல்லும்போது, சக மாணவர்கள் பணம் சேகரித்து எனது செலவுக்காகத் தந்து வழியனுப்பி வைத்தனர். இதனை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். இந்தப் போட்டியை முடித்துத் திரும்பிய பிறகு, பெட்டி தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் 2 ஆண்டுகள் வேலைப்பார்த்தேன்.

''1989ஆம் ஆண்டு இலங்கை 'பி' அணிக்காக பாகிஸ்தானில் சென்று விளையாடினேன். அப்போது நான் ஒரு சதம், தொடர்ந்து இரண்டு இரட்டைச் சதம் என அத் தொடரில் விளாசினேன். இந்தத் தொடரே எனக்குத் திருப்பு முனையாக அமைந்தது. இலங்கை அணியின் தெரிவுக்குழு என்னைக் கவனிக்க வைத்த தொடர் இதுவாகும்.

''இதன் பிறகு 1989-90ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்திற்கு முதன் முதலாக தெரிவுசெய்யப்பட்டேன்.

''எனது வாழ்க்கையில் மறக்க முடியாத இருவர் உண்டு. ஒருவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் டாக்டர். 1989ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரை தனது வீட்டின் ஒரு பகுதியில் என்னைத் தங்குவதற்கு அனுமதித்தார். அவரது மனைவியும் என் மீது மிகுந்த அன்பு செலுத்தினார். இவர்கள் எனக்கு வளர்ப்புப் பெற்றோர் மாதிரி இருந்தனர்.

''மறக்க முடியாத மற்றொரு நபர் எனது நண்பர் லலித் வானகாசிங்கே. நான் என்றாவது ஒரு நாள் இலங்கை அணிக்காக விளையாடுவேன் என்று இவர்கள் இருவரும் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர்.

''சிறிய கிராமத்திலிருந்து கொழும்பு போன்ற பெரிய நகரங்களுக்குச் செல்லும்போது வாழ்க்கை தவறான பாதைக்குச் செல்வதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால், இவர்கள் என் மீது அதிக அக்கறைகொண்டு எப்போதும் எனக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கினார்கள். கடந்த 20 ஆண்டுகளாக, நான் ஒவ்வொரு வெளிநாட்டு சுற்றுப்பயணத்திற்கு செல்வதற்கும் முன்பாக இவர்கள் என்னை வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு பாதுகாப்பாக இலங்கை கிரிக்கெட் சபை அலுவலத்திற்கு வந்து விட்டுச் செல்வார்கள். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் அவர்களுக்கு என்றும் மறக்க முடியாத இடம் உண்டு.

''நான் எனது திறமையை நிரூபிக்க வேண்டிய அவசியம் இனி இல்லை. ஆனால், இப்போது ஒரு விடயத்தை மட்டும் நிரூபிக்க விரும்புகிறேன். இலங்கை அணிக்கு என்னால் வெற்றியைத் தேடி தர முடியும் என்று அவ்வப்போது நிரூபிக்க ஆசைப்படுகிறேன். என்னால் இலங்கை அணி வெற்றி பெற்றால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். ஒவ்வொரு முறையும் எனது 110 வீத பங்களிப்பை வழங்கி வருகிறேன்.

இனிவரும் தொடர்களில் நான் விளையாட முடியாமல் போகலாம். ஆனால், நான் தொடர்ந்து கடினமாக, சிரமப்பட்டு உழைப்பேன். பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டு மீண்டும் அணியில் இடம்பிடிப்பேன். இதற்காக யாரையும் விமர்சிக்க வேண்டிய அவசியமில்லை.

- இவ்வாறு ஜெயசூர்யா கூறியுள்ளார்.

அண்மையில் சச்சின் டெண்டுல்கரின் 20 வருட பூர்த்தியை இந்தியாவில் வெகுசிறப்பாகக் கொண்டாடியிருந்தனர் - கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஜெயசூர்யாவின் இந்த சாதனைப் பயணத்தை யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. இது அனைவருக்கும் பெரும் ஏமாற்றமாக - வருந்தக்கூடிய விடயமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




சமூகசெயற்பாட்டு மையத்தினால் ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வறுமைக்கோடின்கீழ் வாழும் குடும்பங்களுக்கென நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஜே/133 பிரிவுக் கிராம சேவையாளர் நிசாந்தன் குடும்பமொன்றிற்கு இரண்டு ஆடுகளை தனது அலுவலகத்தில் வைத்து கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: நவலி செய்தியாளர்)

## கொழும்புத்துறையில் மூவருக்கு வாள்வெட்டு

கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கோஷ்டி மோதல் சம்பவத்தில் மூவர் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர்.

சனிக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொழும்புத்துறை வளன்புறத்தைச் சேர்ந்த எம். அசோகரட்ணம் (வயது - 29) எம். ஞானச்சந்திரன் (வயது - 33), ஆர்.மதன் (வயது - 27) ஆகியோர் படுகாயங்களுடன் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (78)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 . 06 . 1946

உதிர்வு 12 . 01 . 2006



அமரர் சின்னத்தம்பி நடராசா

(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்)

திதி: திரயோதசி

உங்களோடு வாழ்ந்த காலம்
எங்கள் வசந்த காலம்
எங்களை விட்டு நீங்கள் சென்று
ஆண்டுகள் மூன்றென்ன நூறு ஆனாலும்
ஆறாது எங்கள் மனது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (91871)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குகளைப் பிரிப்பதுதான் பல வேட்பாளர்களின் திட்டம்!

இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தல் 2010 ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்றவுள்ளது.

கடந்த 17ஆம் திகதி வேட்புமனுக்கள் கையேற்கப்பட்ட பின்னர் ஒருவரின் மனு நிராகரிக்கப்பட்டதை அடுத்தே 22 வேட்பாளர்கள் களத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இந்தத் தேர்தல் பல்வேறு விடயங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிட்டு வந்த ஐ.தே.க. முதல்முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் பொதுவேட்பாளர் ஒருவரை ஆதரிக்கும் நிலைக்கு வந்திருக்கிறது. அத்துடன் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு இந்தத் தேர்தல் நெருக்கமான போட்டியைக் கொண்டதாக இருக்கலாம் என்ற கருத்தும் காணப்படுகிறது.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் பலம் பொருந்தியவர்களாக இருப்பதனால்- இந்தத் தேர்தல் அதிக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தல் என்ற வகையில் இந்தத் தேர்தல் முடிவு இன்னொரு கட்டத்துக்குச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.அதாவது இலங்கையின் தேர்தல் சட்டங்களின்படி வேட்பாளர் எவரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறத்தவறினால் இரண்டாவது விருப்புரிமை வாக்குகளை எண்ண வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் பல குழப்பங்கள் காணப்படுவதால் இரண்டாவது விருப்புரிமை வாக்குகளை எண்ணும் நிலை ஏற்படுவது ஆச்சரியத்துக்குரிய ஒன்றாக இருக்கப் போவதில்லை.இது இலங்கையின் தேர்தல் முறையைப் பொறுத்தவரையில் புதியதொரு விடயமாகவே இருக்கும்.ஏனெனில் இதுவரையில் இரண்டாவது விருப்புரிமை வாக்குகளை எண்ணும் நிலை ஒருபோதும் ஏற்பட்டதில்லை. அத்துடன் இதுவரையில் நடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் அதிகபட்சமாக 13 வேட்பாளர்களே போட்டியிட்டுள்ளனர். 1999இலும், 2005இலும் மட்டுமே 13வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர். குறைந்தபட்சமாக மூன்று வேட்பாளர்கள் போட்டியிட்டது 1988இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதாகும். ஆனால் அடுத்த வருடம் நடக்கப் போகும் தேர்தலில் 22வேட்பாளகள் களமிறங்கியிருப்பது முக்கியமான விடயம்.


பிரதான வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷ அல்லது சரத் பொன்சேகா - இவர்களில் எவராவது ஒருவரே இந்தத் தேர்தலில் வெற்றி பெறப் போகிறார். இது இந்தத் தேர்தலில் போட்டியிடும் ஏனைய 20 வேட்பாளர்களுக்கும் நன்றாகவே தெரியும். ஆனாலும் அவர்கள் போட்டியிடுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமானது வாக்குகளைப் பிரிப்பது. அடுத்தது எந்த அணிக்கும் தாம் சார்ந்த அணியின் வாக்குகள் கிடைத்து விடக் கூடாது என்ற நோக்கம்.

பொதுவாகப் பார்க்கும்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வாக்குகள் சரத் பொன்சேகாவுக்கு கிடைத்து விடக் கூடாதெனக் கருதுவோர் சார்பிலும்

சரத் பொன்சேகாவை ஆதரிக்க விரும்பாத ஐ.தே.கவினர், ஜே.வி.பியினரின் வாக்குகள் மஹிந்தவுக்கு கிடைத்து விடாத வகையிலும் இரண்டு தரப்பையும் ஆதரிக்க விரும்பாதவர்கள் தமது வாக்குகளை யாருக்குப் போடலாம் என்று எடை போட்டுப் பார்த்து விடக் கூடாதெனக் கருதும் வகையிலும் - இந்தப் போட்டியில் அதிகளவானோர் குதித்துள்ளனர்.

அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதும் பிரதான இரு வேட்பாளர்களைத் தவிர ஏனையோர் கட்டுப்பணத்தை இழக்காமல் காப்பாற்றிக் கொள்வார்களா? அல்லது ஆறு இலக்க வாக்குகளையாவது பெறுவார்களா? என்பது சந்தேகம்தான்.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் பெரிதும் முக்கியத்துவத்துடன் பார்க்கப்படுகிறது. காரணம் 1988ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிக்கக் கூடிய நிலையொன்று இப்போதுதான் தோன்றியிருக்கிறது. போரில் கிடைத்த வெற்றியை மூலத னமாக்கிக் கொண்டு பிரதான வேட்பாளர்கள் போட்டியிடும் நிலை



யில் - இந்தப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தீர்ப்பு எவ்வாறு அமையப் போகிறது என்ற கேள்வியும் இருக்கிறது. குறிப்பாக வடக்கில் மட்டும் பத்து இலட்சம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானோர் தமிழர்கள். அதுபோன்றே கிழக்கிலும் 2007ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி 40 வீதமானோர் தமிழர்கள் என்பதால் அங்கு பதிவு செய்யப்பட்டுள்ள சுமார் பத்து இலட்சம் வாக்காளர்களில் குறைந்தது 4 இலட்சம் பேர் தமிழர்களாகவே இருக்கின்றனர். இந்த வகையில் வடக்கிலும் கிழக்கிலுமாக குறைந்தது 13 இலட்சம் தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். இதைவிட கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் வாழும் தமிழ் வாக்காளர்களும் இருக்கின்றனர். எனவே தமிழ் வாக்காளர்களின் முழுமையான ஆதரவை எந்த வேட்பாளர் பெறுகிறாரோ அவர் நிச்சயம் வெற்றி பெறுவார் என்ற நிலையே காணப்படுகிறது. ஆனால் பிரதான வேட்பாளர்கள் தொடர்பாகத் தமிழ் மக்களிடம் சாதகமான கருத்து இல்லை.

தமிழ்மக்களின் வெறுப்பையும்- அதிருப்தியையும் இவர்கள் நிறையவே சம்பாதித்து வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் மக்கள் எத்தகைய முடிவை எடுக்கப் போகிறார்கள் என்ற கேள்வி இருக்கவே செய்கிறது.

இந்தநிலையில் தமிழர் தரப்பில் இருந்து சிவாஜிலிங்கம் சுயேச்சையாகப் போட்டியிட எடுத்துள்ள முடிவு இரு வேட்பாளர்களின் மீதும் வெறுப்புக் கொண்ட தமிழ் மக்களின் வாக்குகளை கவரும் நோக்கிலானதாக இருக்கலாம்.

அதுபோலவே பிரதான வேட்பாளர்கள் மீது வெறுப்புற்ற முஸ்லிம்களின் வாக்குகளைப் பிரிக்கவும் மூன்று வேட்பாளர்கள் களத்தில் இருக்கிறார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இலியாஸ் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். உயர்கல்வித்துறை பிரதி அமைச்சராக இருந்த மயோன் முஸ்தபாவும் சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளார். இவர் ஐ.தே.கவில் இருந்து ஆளும் கட்சிக்குத் தாவியவர். ஐ.தே.க. ஆதரவு முஸ்லிம் வாக்குகளை இவர் உடைத்து விடுவார். இவரைவிட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் இஸ்மாயில் என்பவர் போட்டியிடுகிறார்.

மொத்தம் மூன்று முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில் முஸ்லிம் வாக்குகள் கணிசமானளவுக்குப் பிரியலாம் என்ற நிலையே காணப்படுகிறது. ஆனால் பிரதான முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் இரு பிரதான வேட்பாளர்களுடனும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை விக்கிரமபாகு கருணாரத்னவும் சிறுபான்மையின மக்களின் வாக்குளைப் பிரிக்கக் கூடிய ஒருவராகவே இருக்கிறார். இவ்வாறு சிறுபான்மையினரின வாக்குகளைப் பிரிப்பதற்கு வேட்பாளர்கள் பலர் களத்தில் இருக்கின்ற நிலையில் - சிங்கள வாக்காளர்களின் வாக்குகளைப் பிரிப்பதற்கும் அதிகளவிலானோர் களமிறங்கியுள்ளனர். இதனால் வாக்குகள் பிரிந்து செல்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

முதற்சுற்றில் மட்டுமே இந்த உதிரி வேட்பாளர்களால் பிரதான வேட்பாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்த முடியும். இரண்டாவது சுற்று எண்ணப்படும்போது உதிரி வேட்பாளர்களுக்கு விழுந்த வாக்குகளின் இரண்டாவது விருப்பத்தெரிவு முக்கியத்துவம் பெறுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கப் போவதாக முக்கியமான கட்சிகள் கூறிக் கொண்டிருக்கும் நிலையில் இது அந்தப் பதவிக்கான கடைசித் தேர்தலாகக் கூட அமையலாம்.

இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடி 40 இலட்சத்து 88 ஆயிரத்து 500 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 19 இலட்சத்து 55 ஆயிரத்து 312 பேரிடம் தேசிய அடையாள அட்டை கிடையாது. இது யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் கணிப்பு. ஆனால் உரிய அடையாள ஆவணமின்றித் தேர்லில் வாக்களிக்க முடியாது என்ற கட்டுப்பாடு இறுக்கமாகப் பேணப்படவுள்ளதால் பெருமளவு மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாது போகலாம்.

குறிப்பாக வன்னித் தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த 42 வீத வாக்காளர்களிடம் தேசிய அடையாள அட்டை கிடையாது. யாழ்ப்பாணத்தில் எவ்வளவு பேரிடம் இல்லை என்பது பற்றிய தரவுகளே தேர்தல் திணைக்களத்திடம் இல்லை. அதுபோலவே கிழக்கில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் பேரிடம் உரிய அடையாள அட்டை கிடையாது. எனினும் விசேட அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இது எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது தெரியாது. குறிப்பாக இந்தத் தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது போகாலாம். அல்லது வாக்களிப்பில் இருந்து ஒதுங்கிக் கொள்ளலாம் என்ற நிலையே காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் 20 ஆயிரம் பேருக்கு [illegible]மல் இருக்கின்ற போதும் வாக்களிப்பத[illegible]த ஆயிரத்துக்கும் குறைவானோரே விண்ணப்பித்துள்ளனர். இது இந்தத் தேர்தலில் தமிழர்கள் அதிக நாட்டம் காட்டவில்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஆனால் இந்தத் தேர்தலில் தமிழ்மக்களின் தெரிவு, முடிவு எப்படி இருக்கப் போகிறது என்று சர்வதேசம் உற்றுப் பார்[illegible] கொண்டிருக்கிறது. எனவே இந்தத் தேர்தல் இலங்கையின் வரலாற்றில் பல முக்கிய முடிவுகளுக்குக் காரணமாக [illegible]லாம் என்ற கருத்தையும் மறுப்பதிற்கில்லை. ★

நன்றி: 'இன்போ தமிழ்' இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி பணியாளர் தேவை

அச்சுத்துறையில் 10 வருடம் அனுபவமுள்ள
குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கு
Photoshop, Corel Draw
இல் முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.
30.12.2009 (புதன்கிழமை) முற்பகல் 10 மணிமுதல்
நேரில் வரவும்.
39/2, ஆடியபாதம் வீதி,
(நல்லூர் ப.நோ.கூ.சங்க கோப் சிற்றிக்கு அருகில்)
திருநெல்வேலி. தொ.பே.இல:0212228266
(91921)


# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 . 10 . 1964



உதிர்வு 11 . 01 . 2006

## அமரர் பசுபதி பழனி

திதி: பூர்வபக்க திரயோதசி (29.12.2009)

கண்ணீரில் கரைந்தது நான்கு ஆண்டுகள்
எம்முன்னே நீங்கள் இல்லை உறவாட அப்பா!
குடும்பக் கோயிலின் கோபுரத்தீபமே!
சிரித்து மழலை பேசி
சிரிப்புடனே எங்கு சென்றீர்கள் அப்பா
ஓம் சாந்தி!

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மாமி.
(91924)

# மரண அறிவித்தல்கள்

## விஜயரத்தினம் நவரத்தினம்

(விரிவுரையாளர், சிங்கப்பூர் பல்கலைக்கழகம், உதைபந்தாட்டத் தலைவர் (Captain) கொக்குவில் இந்துக்கல்லூரி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சிங்கப்பூர் ஈப்போ மலாயாவை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் நவரத்தினம் 25.12.2009 அன்று சிங்கப்பூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் விஜயரத்தினத்தின் (ஈப்போ மலாயா புகையிரத ஸ்டேசன் மாஸ்ரர்) புதல்வரும் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் (நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி), இராமலிங்கம் (முகாமையாளர், ஆனையிறவு உப்பளம்) மற்றும் ஜீவரத்தினம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் கனடா), வி.எஸ்.இராமநாதர் (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்), விஜயம் (கனடா), காலஞ்சென்ற அன்னலெட்சுமி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.12.2009 சிங்கப்பூரில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.608, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 3665 (91925)
தகவல்:-வி.எஸ்.இராமநாதர் (சகோதரன்) J.P குடும்பத்தினர்.

## தர்மலிங்கம் கோபாலகிருஷ்ணன் (கோபால் மாமா)



புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மாமா என அழைக்கப்படும் தர்மலிங்கம் கோபாலகிருஷ்ணன் நேற்று (28.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - அமிர்தவல்லி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - அமிர்தம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மணிமேகலையின் அன்புக் கணவரும் லோகசுந்தரி (சுந்தரி), பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும் நடராசாவின் மைத்துனரும் காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் வசந்தமலர், வசந்தகலா, ஜீவகுமார், ரதீஸ்குமார், ஜெயானந்தகுமார், சிவதர்சினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அம்மன் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (91929)
தகவல்: சு.பரஞ்சோதி (சின்னையா இரும்புத் தொழிலகம்)

## சுப்பிரமணியம் நகுலேந்திரன்



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் விராங்கொடை, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நகுலேந்திரன் 27.12.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- அன்னலட்சுமி தம்பதியரின் மகனும், நேசம்மாவின் அன்புக் கணவரும் ஜெயவதனி, ஜெயவனிதா, ஜெயரூபன் காலம் சென்ற ஜெயசுதாஸ், மற்றும் சஜீதரன், சௌமியா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வநந்தன், கருணைசிவம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சுதுமலை மத்தி, மானிப்பாய் (91927)
தகவல்: குடும்பத்தினர்.


## தவறிவிட்டது

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய் என்னும் முகவரியுடைய சதாசிவம் செல்வறஞ்சன் என்பவரின் தே.அ. அட்டை (890714102V) மானிப்பாயைச் சுற்றியுள்ள இடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.No: 0776141361 (91921)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 30.12.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
தொடர்பு:
றாஜீவ் கால்நடைத்தீவன
விற்பனை நிலையம்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
(91800)


# விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.29

மோட்டார் சைக்கிளும் லான்ட் மாஸ்ரரும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் படுகாயமடைந்தார்.

கடந்த 26ஆம் திகதி இரவு 8 மணியளவில் மருதனார்மடம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் உரும்பிராயைச் சேர்ந்த ஜே.றெஜினோல்ட் (வயது 20) என்பவரே காயமடைந்தார்.

இவர் யாழ்.ஆஸ்பத்தியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-78)

# பாளையில் பாம்பு; பெண்ணைத் தீண்டியது

யாழ்ப்பாணம், டிசெ.29

தென்னம்பாளையில் இருந்த பாம்பு குடும்பப் பெண் ஒருவரின் கையில் தீண்டியது.

கடந்த 26ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஊர்காவற்றுறை, நாரந்தனை மத்தியில் இவ்வாறு பாம்புக் கடிக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த விஞ்சன் வனற்ரா (வயது - 40) என்ற பெண் ஊர்காவற்றுறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-78)

# பௌர்ணமி தின நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவாநிலையத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பௌர்ணமி தினமன்று காலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெறும். பௌர்ணமிதின நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிரசாந்திக் கொடியேற்றம், வேதபாராயணம், இலட்ச அர்ச்சனை, ஜோதி தியானம், சிறப்புச் சொற்பொழிவு, பஜனை என்பன இடம்பெற்று மதியம் 12 மணிக்கு நாராயண சேவையுடன் நிறைவு பெறும்.

அதேவேளை-

புதுவருட தினமன்று அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெற்று, காலை 6 மணி முதல் 7 மணி வரை விசேட பஜனை இடம்பெறும். (ஒ-9)

# வைத்திய நிறுவனங்களின் தலைவர்களுக்கான கூட்டம்

குருநகர், டிசெ.29

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களின் தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 2010 ஜனவரி 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு சகல வைத்திய நிறுவனத்தலைவர்களையும் தவறாது பங்கு பற்றுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார். (04-51)


இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி.
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

## பீம் வாசக சிரப் (Vasaka Syrup)
இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பாமர்ஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
Beamhela osulanka (PVT) LTD
18/263 Kethsiry Place
High Level Road, Kottawa
Pannipa Panniptiiya
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(ஏ/562080)



## සුවසෙත Suwasetha சுவசெத லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 344
சீட்டிழுப்பு திகதி: 27.12.2009

வெற்றி எழுத்து: O வெற்றி இலக்கங்கள்: 08 13 17 60 போனஸ் இலக்கம் 59

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 10,707,537.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | - |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 94 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 150 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 4208 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2845 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 53363 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,518,380.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,993,671.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புப்பணியின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.


# மரண அறிவித்தல்

## திருமதி மகாதேவன் செல்லம்மா



சேனர்வளவு, சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த மகாதேவன் செல்லம்மா 27.12.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் தொல்புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மகாதேவனின் அன்பு மனைவியும் சந்திராதேவியின் பாசமிகு தாயும் அருணாசலம் (ஓய்வு பெற்ற தொழிற்திணைக்கள உத்தியோகத்தர், Bond கல்விநிலைய நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மாமியும், ஜனா கௌதமன் (2011, com, யா/ சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை மு.ப 10. மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேனர்வளவு,
சுழிபுரம் மத்தி, சுழிபுரம். (91930)
தகவல்: சி.அருணாசலம் (மருமகன்)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்




அமரர்

## இரங்கநாதசாமி இரத்தினகோபால்

கடந்த 09.12.2009 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

21, நாயன்மார் வீதி, நல்லூர். (91926)
தகவல்: குடும்பத்தினர் (மகன்-மயூரிகா நகைத் தொழிலகம், இருபாலை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் உயிர்வாழ- நியாயம் கிடைக்க வேண்டுமெனில் சரத்துக்கு வாக்களிக்குக

## ஹட்டனில் மனோ எம்.பி. அறைகூவல்



கொழும்பு, டிசெ. 29

"இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் உயிர் வாழ வேண்டுமென்றால், நியாயம் கிடைக்க வேண்டும் என்றால் தமிழர்கள் அனைவரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கே வாக்களிக்க வேண்டும். மாறாக தமிழர் அழிந்தே போவதென்றால் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கலாம்."

- இவ்வாறு மனோ கணேசன் எம்.பி. நேற்று முன்தினம் ஹட்டனில் நடந்த சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

இந்நாட்டின் வரலாற்றில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில்தான் தமிழர்கள் அதிகம் கொல்லப்பட்டுள்ளனர். அதிகம் தொல்லைகளை அனுபவிக்கின்றனர். வடக்கு - கிழக்கு தமிழர்கள் மாத்திரமின்றி நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள ஒட்டுமொத்த தமிழர்களும் மஹிந்தவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று தமிழர்கள் அனைவரையும் மஹிந்த அடிமைகளாகவே நடத்துகின்றார். மலையகத் தமிழர்களை அடிமைப்படுத்துவதற்காக அமைச்சர்கள் ஆறுமுகம் தொண்டமானும், சந்திரசேகரனும் மஹிந்தவுடன் கைகோர்த்துள்ளனர்.

நுவரேலியாவில் வறுமை அதிகமாகவுள்ளது என்றும் இதை ஒழிக்க நடவடிக்கை எடுப்பார் என்றும் மஹிந்த கூறினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மஹிந்த தமிழர்களைத் திட்டமிட்டு புறக்கணிக்கின்றார். அவரது ஆட்சியில் முழு நாடுமே சுரண்டப்படுகிறது. ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த நாட்டு மக்கள் அனைவரும் இப்போது தயாரா கிவிட்டனர்.

தமிழர்கள் உயிருடன் வாழ வேண்டும் என்றால் நியாயம் வேண்டும் என்றால் சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்க வேண்டும். அல்லது தன் தலையில்தானே மண்ணை அள்ளிப் போடுவதாக இருந்தால் தாராளமாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கலாம்.

மலையகத் தமிழர்களை மஹிந்தவிடம் அடகு வைக்கும் ஆறுமுகம் தொண்டமான் போன்ற மலையகத் தலைவர்களை மலையகத் தமிழர்கள் இத்தேர்தலில் உதறித் தள்ளவேண்டும். நல்ல பாடம் புகட்ட வேண்டும். - என்றார். (சி)




## தேர்தல் விளம்பரங்களை அகற்றுவதில் உதாசீனம்

### பொலிஸ் போக்குக் குறித்து அதிருப்தி

கொழும்பு, டிச. 29

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தேர்தல் விளம்பர சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றுமாறு விடுத்த உத்தரவைப் பெரும்பாலான பொலிஸ் நிலையங்கள் பின்பற்றாதமையை 'டிரான்பரன்ஸி இன்டநஷனல்' அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அமைப்பின் பொதுச்சொத்துகளைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் சார்பில் தேர்தல் ஆணையாளருக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்திலேயே இது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக நிங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம்.

சுவரொட்டிகள், பதாகைகள், ('கட் அவுட்'கள்) உட்பட அனைத்துத் தேர்தல் விளம்பரங்களையும் அகற்றுமாறு நிங்கள் உத்தரவிட்டுள்ள போதிலும், நேற்று முன்தினம் வரை பொலிஸார் இதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இவ்வாறான விதிமுறை மீறல்களுக்கு எதிராக என்ன நடவடிக்கையை எடுக்கவுள்ளீர்கள் என்பதை அறிய விரும்புகிறோம். - என்று உள்ளது. (சி)

## அரசின் தேர்தல் தந்திரோபாயத்தில் ஒன்றே 'மக்கள் விடுதலை இராணுவம்' அமைப்பு

### ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 29

'மக்கள் விடுதலை இராணுவம்' என்ற அமைப்பின் உருவாக்கம் அரசின் தேர்தல் தந்திரோபயங்களில் ஒன்றாகும் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்திருப்பவை என வெளியான தகவல்கள் வருமாறு -

அவ்வாறான ஓர் அமைப்பு இயங்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ளும் நோக்கில் அரசு, மக்கள் விடுதலை இராணுவம் குறித்து பிரசாரம் செய்து வருகிறது.

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தமிழ் முஸ்லிம் மக்கள் அதரவளிப்பதைத் தடுக்கும் நோக்கில் அரசு இந்த ஆயுதக் குழுவை பயன்படுத்த உள்ளது.

இந்த அமைப்பிற்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களில் உண்மையில்லை.

கிழக்கில் அரச ஆயுதக் குழுக்களால் தேர்தல்களுக்கு இடையூறு ஏற்படக் கூடும். சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல்களை தேர்தல் ஆணையாளர் நடத்த வேண்டும். (சி)

## பிள்ளையானின் தேர்தல் அலுவலகம் வாழைச்சேனையில் திறந்து வைப்பு

வாழைச்சேனை, டிச. 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகக் கிழக்கு மாகாணத்தில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்காக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அதன் முதலாவது பிரசார அலுவலகத்தை வாழைச்சேனையில் உள்ள புதுக் குடியிருப்புப் பகுதியில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கல்குடாத் தொகுதிக்கான இணைப்பாளராகத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். முதலமைச்சரின் நெறிப்படுத்தலில் இந்த அலுவலகம் கடந்த 26ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. கலைவாணி கலாமன்ற மைதானத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முதலாவது உத்தியோகபூர்வ பிரசாரக் கூட்டமும் இடம்பெற்றுள்ளது.

முதலமைச்சர் சந்திரகாந்தன் அவருடைய கட்சி ஏன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இத் தேர்தலில் ஆதரிக்கின்றது என்பதை விளங்கப்படுத்தி அங்கு உரையாற்றினார். (சி)

## தீகவாபிக்கு அருகில் முஸ்லிம்களைக் குடியேற்றும் திராணி ஜனாதிபதி மஹிந்தவுக்கு உண்டா?

### சுயேச்சை வேட்பாளர் இல்லியாஸ் கேள்வி

கொழும்பு, டிச. 28

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தீகவாபிப் பிரதேசத்துக்கு அருகில் முஸ்லிம்களுக்கென்று அமைக்கப்பட்டிருக்கும் வீட்டுத் திட்டத்தை முஸ்லிம்களிடம் கையளிக்கும் துணிவும், திராணியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உண்டா? என்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். ஐ.எம்.இல்லியாஸ் வினவியுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு சவூதி அரேபிய அரசின் நிதி உதவியுடன் தென்னிலங்கையில் 500 வீடுகளும், தமிழர் பிரதேசங்களில் 500 வீடுகளும், தீகவாபிக்கு அருகிலுள்ள நுரைச்சோலைக் கிராமத்தில் முஸ்லிம் மக்களுக்கு 500 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீடமைப்புத் திட்டங்கள் மூன்றும் நிறைவடைந்து விட்டன.

முஸ்லிம்கள் தவிர்ந்தவர்கள் அவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், முஸ்லிம் மக்கள் அவர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் குடியேற முடியாமல் உள்ளது. பேரினவாத சக்திகள் இதற்குத் தடையாக உள்ளன என்று முஸ்லிம்கள் பரவலாகக் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தீகவாபிக்கு அருகில் (சுமார் 5 மீற்றர் தொலைவில்) இம் முஸ்லிம் பிரதேசம் அமைந்துள்ளமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

முஸ்லிம் மக்களை இப்பிரதேசத்தில் குடியமர்த்த முடியாது என்று தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய வழக்கொன்றையும் தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையிலேயே இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்தில் முஸ்லிம்களை உடனடியாகக் குடியேற்றுகின்ற திராணி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உண்டா? என்று இல்லியாஸ் வினவியுள்ளார்.

பெரும்பான்மை, சிறுபான்மை என்று இந்நாட்டில் இன பேதம் இல்லையென்றால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம்களை இந்த நுரைச்சோலைக் கிராமத்தில் உடனடியாகக் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் ஜனாதிபதிக்கு சவால் விடுத்துள்ளார். (சி)

## தேர்தல் விதிமுறைச் சட்டங்களை மீறி செயற்படுகின்றார்களாம் அதிகாரிகள்

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 29

அரச அதிகாரிகள், இராஜதந்திரிகள் உள்ளிட்டோர் தேர்தல் சட்டங்களை மீறி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையகத்தில் முறைப்பாடு செய்துள்ளன.

அரச அதிகாரிகள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸா நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிற்கு எழுத்து மூலம் அறிவித் துள்ளார்.

பொதுத்துறையைச் சேர்ந்தவர்கள் பகிரங்கமான முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில் பிரசாரப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறிப்பாக ஊடகத்துறையைச் சார்ந்த அரச அதிகாரிகள் அதிகளவு தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுகின்றர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)







ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக்கிளை நேற்றுத் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்ட போது எடுத்த படங்கள் இவை. கட்சியின் அலுவலகத்தை பொதுச் செயலாளர் றஞ்சித் [illegible] திறந்து வைப்பதையும் [illegible] மாவட்ட அமைப்பாளர் உகெம நிற்பதையும் முதல் படத்திலும்- சப்ரகமுவ மாகாண கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜி.எம்.கருணாபால உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் திறந்து வைக்கப்பட்ட அலுவலகத்தின் முன்பாக கட்சியின் முக்கியஸ்தர்கள் நிற்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 125 பாடசாலைகளின் ஆசிரியர்களை கடமைக்குத் திரும்ப அழைப்பு

அச்சுவேலி, டிசெ.29

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 125 பாடசாலைகள் ஜனவரி 04ஆம் திகதியிலிருந்து முழுமையாகச் செயற்படவுள்ளன. எனவே இந்தப் பாடசாலைகளில் கடமையாற்றிய பின்னர் யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டு ஜனவரி 4ஆம் திகதி தமது நிரந்தர நியமனத்துக் குரிய பாடசாலைகளில் கடமையை பொறுப்பேற்குமாறு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் இராசையா அறிவித்துள்ளார்.

பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்களை இரத்துச் செய்து நிரந்தர பாடசாலைகளின் கடமையைப் பொறுப்பேற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மடுக்கல்வி வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும், நெடுங்கேணிக் கல்விக் கோட்டங்களில் 17 பாடசாலைகளும், ஓமந்தைக் கல்விக் கோட்டத்தில் 04 பாடசாலைகளும், துணுக்காய் கல்வி வலயத்தில் துணுக்காய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 20 பாடசாலைகளும், மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 14 பாடசாலைகளும், கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள பூநகரிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 23 பாடசாலைகளும், கரைச்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகளும் உட்பட 125 பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்கள் முடிவுறுத்தப்பட்டு நிரந்தர பாடசாலைகளில் கடமையேற்க பணிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**மடுவலயம்**

அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், ஆழிநகர் மகா வித்தியாலயம், பெரியமடு மகாவித்தியாலயம், ஆண்டாள்குளம் றோ.க.த.க.பாடசாலை, இலுப்பைக் கடவை அ.த.க.பாடசாலை, கருக்கண்டல் றோ.க.த.க. பாடசாலை, பரப்பக் கண்டல் றோ.க.த.க.பாடசாலை, வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலை, புனித ஜோசப் மகா வித்தியாலயம், அடம்பன் றோ.க.த.க.பாடசாலை, ஆத்திமோட்டை அ.த.க.பாடசாலை, தேவன்பிட்டி றோ.க.த.க.பாடசாலை, கள்ளியடி அ.த.க.பாடசாலை, கோவில் குளம் அ.த.க.பாடசாலை, பரப்புக் கடந்தான் அ.த.க.பாடசாலை, பாப்பாமோட்டை றோ.க.த.க.பாடசாலை, பாலைகுழி றோ.க.த.க.பாடசாலை, பாலையடி புதுக்குளம் றோ.க.த.க.பாடசாலை, மருதி கன்னாப்பிட்டி அ.த.க.பாடசாலை, வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலை, மருதோண்டுவான் வெள்ளாங்குளம் மகா வித்தியாலயம், வேளாங்குளம் அரசினர் மகா வித்தியாலம், மினுக்கன் அரசினர் மகா வித்தியாலயம், கூ.றே.அ.த.க.பாடசாலை, மூன்றாம்பிட்டி அ.த.க.பாடசாலை, காக்கையர் குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், பெரிய குறிஞ்சாய் குளம் அ.த.க.பாடசாலை, இரணை இலுப்பைக்குளம் அ.த.க.பாடசாலை, சின்ன வலையன்கட்டு அ.த.க.பாடசாலை, விறாட்டிக்குளம் அ.த.க.பாடசாலை, சின்னப் பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம், பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம், தட்சணா மருதமடு அ.த.க.பாடசாலை, நாவற் குளம் றோ.க.த.க.பாடசாலை, கட்டையடம்பன் றோ.க. த.க.பாடசாலை, திருக்கேதீஸ்வரம் இந்துப் போட் அ.த.க.பாடசாலை, பாலம்பிட்டி அ.த.க.பாடசாலை, கிரிப்பான் அ.த.க.பாடசாலை, முள்ளிக்குளம் அ.த.க.பாடசாலை, முள்ளிக்குளம் சிங்கள மகா வித்தியாலயம்.

**வவுனியா வடக்கு கல்வி வலயம் ஓமந்தைக் கோட்டம்**

தவசிக்குளம் அ.த.க.பாடசாலை, கிடாய்ச்சூரி அ.த.க.பாடசாலை, கல்மடு அ.த.க.பாடசாலை, நொச்சிமோட்டை அ.த.க.பாடசாலை

**வவுனியா வடக்கு கல்விக் கோட்டம்**

கனகராயன் குளம் மகா வித்தியாலயம், புளிச்சாக்குளம் இந்துக் கல்லூரி, சின்னப்பன் பாரதி வித்தியாலயம், ஸ்ரீ ராம கிருஷ்ண மகா வித்தியாலயம், புளிச்சாக்குளம் பண்டித மணி வித்தியாலயம், மன்னன்குளம் அ.த.க.பாடசாலை, பழையவாடி அ.த.க. பாடசாலை, பெரியகுளம் அ.த.க.பாடசாலை, விஞ்ஞானகுளம் நவரட்ணவித்தியாலயம், குறிசுட்டகுளம் அ.த.க.பாடசாலை, கரப்புக்குத்தி அ.த.க. பாடசாலை, புதுவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, புதுவிளாங்குளம் பண்டார வன்னியன் வித்தியாலயம், புதூர் அ.த.க. பாடசாலை, இராமனூர் தனிநாயகம் அடிகள் வித்தியாலயம், பெரியடம்பன் ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

**துணுக்காய் கல்வி வலயம் துணுக்காய்க் கோட்டம்**

ஆலங்குளம் முருகானந்த வித்தியாலயம், அமைதிபுரம் தமிழ் வித்தியாலயம், அம்பலப்பெருமாள்குளம் அ.த.க பாடசாலை, அணிச்சம்குளம் தமிழ் மகா வித்தியாலயம், ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயம், ஐயங்குளம் அ.த.க பாடசாலை, கல்விளாங்குளம் அ.த.க.பாடசாலை, கோட்டைகட்டிய அ.த.க.பாடசாலை, மல்லாவி மத்திய கல்லூரி, முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை, பழையமுறிகண்டி அ.த.க.பாடசாலை, பணிக்கன் குளம் அ.த.க.பாடசாலை, புளிமச்சி நாதம் குளம் அ.த.க.பாடசாலை, புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை, தெணியாள்குளம் அ.த.க.பாடசாலை, துணுக்காய் அ.த.க. பாடசாலை, உயிலங்குளம் அ.த.க.பாடசாலை, வவுனிக்குளம் அலகு 4 (நான்கு) அ.த.க.பாடசாலை, யோகபுரம் மகா வித்தியாலயம்

**துணுக்காய் வலயம் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டம்**

அம்பாள் தமிழ் வித்தியாலயம், கொல்லி விளாங்குளம் அ.த.க.பாடசாலை, கூழ்த்திம்மூலை தமிழ் வித்தியாலயம், மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை, நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை, பாலைப்பாணி தமிழ் வித்தியாலயம், பழிநகர் மகா வித்தியாலயம், பூவரசங்குளம் அ.த.க. பாடசாலை, பனங்காமம் மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை, பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், சிரட்டைக்குளம் அ.த.க.பாடசாலை, வன்னி விளாங்குளம் அ.த. க.பாடசாலை, வவுனிக்குளம் மத்திய துருசு அ.த.க.பாடசாலை, விநாயகபுரம் அ.த. க.பாடசாலை.

**கிளிநொச்சி கல்வி வலயம் பூநகரிக் கோட்டம்**

இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை, முழங்காவில் மகா வித்தியாலயம், நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை, குமுழமுனை அ.த.க.பாடசாலை, கிராஞ்சி அ.த.க. பாடசாலை, ஜெயபுரம் மகா வித்தியாலயம்

ஜனவரி 4ஆம் திகதி மீளத் திறக்கபபடவுள்ள

**கிளிநொச்சி வலயப் பாடசாலைகள்**

வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை, வேராவில் இந்து மகா வித்தியாலயம், பூநகரி மகா வித்தியாலயம், பூநகரி நலலூர் மகா வித்தியாலயம், பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம், கரியாலை நாக படுவான் 3ஆம் இலக்க பாடசாலை, கரியாலை நாகபடுவான் 2ஆம் இலக்க பாடசாலை, மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை, பிரமன்கிராய் அ.த.க.பாடசாலை, அண்ணாவில் அ.த.க.பாடசாலை, முக்கொம்பன் அ.த.க.பாடசாலை, சாமிப்புலம் அ.த.க.பாடசாலை, கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம், ஞானிமடம் அ.த.க.பாடசாலை, செம்பன்குன்று அ.த. க.பாடசாலை, பல்லவராயன் கட்டு அ.த.க.பாடசாலை, கௌதாரிமுனை அ.த.க. பாட சாலை.

**கரைச்சிக் கல்விப் கோட்டம்**

கரைச்சி இந்துக் கல்லூரி, கரைச்சி இந்து ஆரம் பப் பாடசாலை, பாத்திமா றோ.க.த.க. பாடசாலை, கனகபுரம் மகா வித்தியாலயம், புதுமுறிப்பு அ.த.க.பாடசாலை. (50-11)


## "சிவசாயீஸ்வரம் பஜனை நிலைய ஆரம்பவிழா அழைப்பு

இடம்: ஊரிக்காடு, வல்வெட்டித்துறை
காலம்: 31.12.2009 வியாழக்கிழமை காலை 9.30 - 11 மணி

தங்கள் எல்லோரையும் சிவசாயீஸ்வர ஆரம்பவிழாவிலும் பஜனையிலும் கலந்து பங்கு பற்றி பகவான் ஸ்ரீ சத்தியசாயியின் நல்லாசிகளையும் அருளையும பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்
1.மங்கள இசை 2.கொடியேற்றல் வைபவம்
3.சிவசாயீஸ்வர மண்டபம் திறப்பு வைபவம்
4.திரைநீக்கம் 5.ஆசியுரை
6.விளக்கேற்றல் 7.பகவான் பஜனை

ஆசியுரை : திரு.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (J.P) [பிரதம குருக்கள் - வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்]

தலைமையுரை: பேச்சுரைகள்:

பிரதம விருந்தினர் : திரு.க.கணேஷ் [அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்]
சிறப்பு விருந்தினர்கள்: திரு.இ.வசந்தசேனன் [யாழ்.நீதிமன்ற நீதிபதி] [வட பிராந்திய சத்திய சேவா நிலையங்களின், இணைப்புக்குழுத் தலைவர்]
திரு.ஆ.ஜெகநாதன் [தலைவர், பருத்தித்துறை சத்திய சேவா நிலையம்]
திரு.இ.சிவசங்கர் [வைத்திய கலாநிதி வட பிராந்திய சத்திய சேவா நிலையங்களின் இணைப்புக்குழு]
திரு.இ.இராசநாதன் [பருத்தித்துறை சத்திய சேவா நிலையம்]

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
சிவசாயீஸ்வர நிலைய நிர்வாகி வி.யோகானந்தவேல்
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. (91937)



## மரண அறிவித்தல்

### முத்து முருகானந்தன் (முருகண்டி)



திருநெல்வேலி வளாக ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் நீண்டகாலம் இத்தாலியில் வசித்தவருமான முத்து முருகானந்தன் நேற்று (28.12.2009) திங்கட்கிழமை திருநெல்வேலியில் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - கண்ணம்மா தம்பதியரின் அருமை மகனும் இன்பத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ... கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் அமுதா (...), சசிக்குமார் (இத்தாலி), ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னம்மா, மற்றும் நாகம்மா, கனகம்மா, சரஸ்வதி, மகேஸ்வரி, காலஞ்சென்ற சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தேவராசா மற்றும் மன்மதராசா, சிவராசா (ஜேர்மனி), பொன்ராசா (சுவிஸ்), தர்மராணி, யோகராணி, வசந்தா (ஜேர்மனி), ஜமுனா (ஜேர்மனி), மீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அலெக்சா (சுவிஸ்), அஸ்வீன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.12.2009) செவ்வாய்க் கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக ஒழுங்கை, திருநெல்வேலி. (91939) தகவல்: இன்பம் (மனைவி).


# நாவாந்துறைப் பகுதி வடிகால்கள் துப்புரவு செய்யப்படவில்லை

## இதனால் வெள்ளம் தேங்கியுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ.29

நாவாந்துறைப் பகுதியில் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமையினால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கியுள்ளது.

வடிகால்களில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் நுளம்புகளின் பெருக்கம் அப்பகுதியில் அதிகரித்துக் காணப்படுவதுடன் தொற்று நோய்களும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மிகவும் நெருக்கமாக வாழும் இந்தக் கரையோரப் பிரதேசத்திலுள்ள வடிகால்களைத் துப்புரவுசெய்து வெள்ளம் வழிந்தோடுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-224)

## பெண்களுக்கான கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.29

'வீட்டு வன்முறையும் பெண்களும்' என்ற தலைப்பில் யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையம், சாவகச்சேரி மகளிர் தையல் பயிற்சி நிலைய மாணவர்களுக்கான கருத்தரங்கினை இன்று செவ்வாய்க்கிழமை மேற்படி தையல் பயிற்சி நிலையத்தில் நடத்தவுள்ளது.

இக் கருத்தரங்கில் வீட்டு வன்முறைச் சட்டம் தொடர்பாகவும் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பாகவும் நடைமுறையிலுள்ள சட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

இதில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கமலலோஜினி பிரணவன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (50-14)

## ஓய்வூதியம் பெறுவோரின் விவரம் திரட்டல்

நவாலி, டி.செ.29

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஓய்வூதியம் பெற்று வருபவர்களின் விவரம் பிரதேச செயலகத்தினால் திரட்டப்படுகின்றது. இதுசம்பந்தமான படிவமொன்று சகல ஓய்வூதியர்களுக்கும் இம் மாத (டிசெம்பர்) வவுச்சருடன் அனுப்பி வைக்கப்படவுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இப்படிவத்தை பூரணப்படுத்தி தமது பிரிவு கிராம சேவகரிடம் எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைத்து அதற்கான அத்தாட்சிப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-100)


## ஐந்தாம் ஆண்டு நினைவுகளின் நினைவு

மனம் மகிழ
18 ★ 07 ★ 1933



மனம் நெகிழ
24 ★ 12 ★ 2004

### அமரர் கணபதிப்பிள்ளை குணசிங்கம்

திதி: திரயோதசி

அன்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து ஐந்தாண்டு
கடந்தாலும் உங்கள் அழியாத நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் அணையாத
தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

44/2, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். (91934)

நீங்காத நினைவுடன் பிள்ளைகள்.

(91934)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் வாழ்வு நிலையை மீட்பதற்கு உலகத் தமிழர் ஒன்றுபட வேண்டும்

## தஞ்சாவூரில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம்

தஞ்சாவூர், டிசெ. 29

ஈழத் தமிழர்களைக் காக்க உலக நாடுகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஐ.நா.சபை வெளியிட்ட பிரகடனத்தின் அடிப்படையில் தமிழீழ மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கவேண்டும்.

ஈழத் தமிழரின் வாழ்வுரிமையை மீட்க உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். இதன்மூலமே ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்த முடியும் என்பதையும் உணர வேண்டும்.

- இவ்வாறு தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டின் நிறைவு நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவற்றின் முழு விவரம் வருமாறு -

ஈழத் தமிழர் மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள் தடையின்றி நிகழ்கின்றன. தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு, அடிப்படை உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. இந்தக் கொடுமைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிராக ஈழத் தமிழர்கள் 30 ஆண்டுகள் அறவழியிலும், 30 ஆண்டுகள் ஆயுதம் தாங்கியும் போராடினர். இந்தப் போராட்டத்தில் 2 லட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10 லட்சம் பேர் சொந்த மண்ணில் வாழ வழியில்லாமல், அனைத்தையும் இழந்து உலக நாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ளார்கள்.

உள்நாட்டில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு, சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 3 லட்சம் பேர் வதை முகாம்களில் அல்லற்படுகிறார்கள். இளைஞர்கள், விடுதலைப் புலிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு சித்திரவதை, படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இளம் பெண்கள், சிறுமிகள் சிங்கள இராணுவத்தின் பாலியல் கொடுமைகளுக்கு இரையாக்கப்படுகிறார்கள்.

தமிழர் பகுதிகளிலுள்ள ஊர்கள், குடியிருப்புகள், கோயில்கள் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு இன அழிப்பில் தொடர்ந்து ஈடு பட்டு வரும் இலங்கை அரசின் நடவடிக்கை மிகக் கடுமையான போர்க் குற்றமாகும்.

இன அழிப்புப் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்ற கொடுங் குற்றங்களை, வரைமுறையற்ற அளவில் ஈழத் தமிழினத்தை இலங்கைத் தீவிலிருந்து துடைத்தொழிக்கும் திட்டத்தோடு இலங்கை அரசு செயற்பட்டுள்ளது என்பதை உலக சமுதாயத்துக்கு சுட்டிக்காட்டுகிறோம்.

இனப் படுகொலை என்ற பெருங்குற்றத்துக்குள் அடங்கக்கூடிய செயற்பாடுகள் அனைத்தையும் சிங்கள அரசு செய்து முடித்துள்ளது. கடந்த மே 16 முதல் 18 வரையிலான நாள்களில் மட்டும் 50 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டு, வன்னி மண் பிணக்காடாக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் ஊனமுற்றனர். அவர்களுக்கு உணவு, நீர், மருந்து கிடைக்கவிடாமல் தடைசெய்து, பட்டினி போட்டு மருத்துவ உதவி இல்லாமல் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தமிழினத்தின் குழந்தை பிறப்புக்குதடை விதித்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. வதை முகாம்களில் உள்ள பெண்களுக்கு கட்டாயச் கருச்சிதைவு செய்யப்படுகிறது.

குழந்தைகளைப் பெற்றோர்களிடமிருந்து பிரித்து, வெவ்வேறு முகாம்களில் அடைத்து மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறார்கள். இவை அனைத்தும் சர்வதேசக் குற்றவியல் நீதிக் குழுவினால் விசாரிக்கப் பட வேண்டும்.

ஐ.நா. தீர்மானங்களின் அடிப்படையில், இலங்கையில் இனப் படுகொலை நிகழ்வதைத் தடுத்து நிறுத்த, உலக நாடுகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஐ.நா. பேரவை வெளியிட்ட பிரகடனத்தின் அடிப்படையில் தமிழீழ மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும்.

இனவெறிப் படுகொலையிலிருந்து தப்பிய தமிழர்களும், புலம்பெயர்ந்த தமிழர்களும், இணைந்து ஐ.நா. அமைப்பினையும், உலக நாடுகளையும் வற்புறுத்திச் செயற்பட வைக்க வேண்டும்.

இதில் தமிழகத்துக்குப் பெரும் பங்கும், வரலாற்றுக் கடமையும் உண்டு என்பதை யாரும் மறக்கக் கூடாது. ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையை மீட்க உலகத் தமிழர் ஒன்றுபட வேண்டும்.

இதன்மூலமே ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்த முடியும் என்பதையும் உணர வேண்டும்.

உலகெங்கும் உள்ள ஜனநாயக சக்திகள், சமத்துவச் சிந்தனையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

உலகத் தமிழர்கள் அனைவரும் அவர்கள் வாழும் நாடுகளில் உள்ள மக்களையும், அரசுகளையும் வலியுறுத்தி, ஈழத்தமிழர் சிக்கலைத் தீர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன், புதிய பார்வை ஆசிரியர் ம. நடராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு, தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்புத் தலைவர் பசுபதி பாண்டியன் மற்றும் தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் உலக நாடுகளிலிருந்து தமிழறிஞர்கள் பங்கேற்றனர்.

# தெலுங்கானாப் போராட்டத்தால் 250 கோடி ரூபா சொத்துகள் நாசம்!

## ஆந்திர மாநில அரசு தகவல்

ஐதராபாத், டிசெ. 29

தெலுங்கானா தனி மாநிலப் போராட்டம் காரணமாக தெலுங்கானா மற்றும் கடலோர ஆந்திரா, ராயலசீமா பகுதிகளில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் ரூபா 250 கோடி மதிப்பிலான சொத்துகள் நாசமாகி உள்ளன.

தெலுங்கானா தனி மாநிலம் கேட்டு ஆந்திராவில் தீவிர போராட்டம் நடைபெற்று வருகிறது. கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி முதல் தெலுங்கானா மற்றும் கடலோர ஆந்திரா, ராயலசீமா பகுதிகளில் மாறி மாறி வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. முதலில் 29 ஆம் திகதி முதல் தெலுங்கானா தனி மாநில அறிவிப்பு வெளியான டிசெம்பர் 9 ஆம் திகதிவரை தெலுங்கானாப் பகுதிகளில் கலவரம் வெடித்தது.

பின்னர், தனி மாநில அறிவிப்பு வெளியானமை முதல் (டிசெம்பர் 10) அந்த அறிவிப்பு நிறுத்தி வைத்ததுவரை (டிசெம்பர் 23) கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமாவில் வன்முறை அரங்கேறியது. அதன் பிறகு, தெலுங்கானா அறிவிப்பு நிறுத்தி வைத்ததால் கடந்த 23 ஆம் திகதி முதல் தெலுங்கானாவில் மீண்டும் கலவரம் அரங்கேறி இருக்கிறது.

இரண்டு பகுதிகளிலும் மாறி மாறி நடந்து வரும் கலவரங்களால் இதுவரை மொத்தம் 250 கோடி ரூபா மதிப்பிலான சொத்துகள் முற்றிலும் நாசமாகியுள்ளன என்று ஆந்திர மாநில அரசு மதிப்பிட்டுள்ளது. இதுதவிர, தொடர்ந்து முழு அடைப்பு நடப்பதால் ஆந்திராவில் வர்த்தகம் முற்றிலும் முடங்கி விட்டது. அதனால், பல நூறு கோடி இழப்பு ஏற்பட்டு இருக்கிறது.

மேலும், பல நாள்களாக பஸ்கள் சரியாக இயக்கப்படாததால் ஆந்திர மாநில அரசு போக்குவரத்து கழகத்துக்கு கோடிக்கணக்கான ரூபா வருமான இழப்பு ஏற்பட்டது.

கடந்த 23 ஆம் திகதிவரை நாசமடைந்த ரூபா 250 கோடி சொத்துகளில் 80 சதவீதம், தெலுங்கானா பகுதிகளில் இருந்தவை ஆகும். தெலுங்கானாவில் மட்டும் அரசுக்கு சொந்தமான 52 சொத்துகளும் தனியாருக்கு சொந்தமான 28 சொத்துகளும் முற்றிலுமாக எரிக்கப்பட்டன. மேலும் 62 பொதுச் சொத்துகளும் 114 தனியார் சொத்துகளும் சேதமடைந்துள்ளன.

ஐக்கிய ஆந்திராவை வலியுறுத்தி ராயலசீமா மற்றும் கடலோர ஆந்திரா பகுதிகளில் நடந்த போராட்டத்தில் 37 பொதுச் சொத்துகளும் 11 தனியார் சொத்துகளும் எரிக்கப்பட்டன. 46 பொதுச் சொத்துகளும் 47 தனியார் சொத்துகளும் சேதப்படுத்தப்பட்டன.

அரசுக்குச் சொந்தமான 35 பஸ்கள் எரிக்கப்பட்டன. மேலும், 214 அரசு பஸ்களும் 50 தனியார் பஸ்களும் சேதமாகி உள்ளன.

## இந்தியச் செய்திகள்

# தெலுங்கானாவுக்கு ஆதரவாக் நக்ஸலைட்டுகளும் களத்தில்!

தெலுங்கானா கட்சிகளுக்கு ஆதரவாக நக்ஸலைட்டுகளும் களமிறங்க முன்வந்துள்ளனர். தனி மாநிலக் கோரிக்கையை வென்றெடுக்க காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக எல்லோரும் ஒன்றிணைந்து யுத்தம் நடத்தலாம் - என்று அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தடைசெய்யப்பட்ட மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தனி தெலுங்கானா என்பது இப்பகுதியில் உள்ள 4 கோடி மக்களின் மறுக்க முடியாத உரிமை. இந்த உரிமையை வழங்க மறுக்கும் பாசிச காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்தும், அவர்கள் நமக்கிழைத்த துரோகத்தை எதிர்த்தும் முழுவீச்சில் போராடுவோம்.

தனித் தெலுங்கானாவை வென்றெடுக்க மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அரசுக்கு எதிரான யுத்த பேராட்டத்தை நடத்துவோம்.

காங்கிரஸ், பி.ஜ.க. தெலுங்கு தேசம், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எல்லோருமே வாக்குக்காக மட்டுமே தெலுங்கானா ஆதரவாளர்கள்போல நடிப்பபார்கள். அவர்களை நம்பாதீர்கள் - என்றுள்ளது.

# நத்தார் பண்டிகைக்கு கேரளாவில் ரூபா 44 கோடிக்கு மது விற்பனை

கேரளாவில் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு ரூபா 44 கோடி 50 லட்சத்துக்கு மதுபானம் விற்கப்பட்டுள்ளது.

இந்தியத் தயாரிப்பு, வெளிநாட்டு மது பானங்களை கேரள மதுபான விற்பனைக் கழகம் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்து வருகிறது. இதற்காக மாநிலம் முழுவதும் 337 சில்லறை கடைகளை நிறுவியுள்ளது.

இந்தக் கடைகளில் கிறிஸ்மஸ் விற்பனை கடந்த 24, 25 ஆம் திகதிகளில் களைகட்டியது. மொத்தம் ரூபா 44 கோடி 50 லட்சம் விற்பனை நடந்துள்ளது. இது அரசு மதுபான சில்லறை விற்பனை கடைகளில் நடந்தது மட்டுமே.

24 ஆம் திகதி 22 கோடி ரூபா 15 லட்சத்துக்கும், கிறிஸ்மஸ் தினத்தன்று ரூபா 22 கோடி 35 லட்சத்துக்கும் மதுபானம் விற்பனையாகியுள்ளது. இதில் 60 சதவீதம் மதுபானமும், 30 சதவீதம் பீரும் விற்பனை ஆகியுள்ளன. கேரளாவில் மது விற்பனை இதே வேகத்தில் சென்றால் மார்ச் மாதம் இறுதிக்குள் ரூபா 5300 கோடியாக உயரும் என தகவல் தெரிவிக்கின்றன. 2005 - 2006 நிதி ஆண்டில் 2635 கோடி ரூபா விற்பனை ஆகியிருந்தது.

# தெலுங்கானா சிக்கலில் ஒருமித்த கருத்து: அதுவரை மத்திய அரசு முடிவெடுக்காது!

## மேற்குவங்க முதல்வர் தெரிவிப்பு

புதுடில்லி, டிசெ. 29

ஒருமித்த கருத்து ஏற்படும்வரை தனித் தெலுங்கானா பிரச்சினையில் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது - என்று மேற்குவங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா கூறினார்.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில், மேலும் சில மாநிலங்களிலும் புதிய மாநில கோரிக்கை எழுந்துள்ளது. மேற்கு வங்க மாநிலத்தைப் பிரித்து கூர்க்காலேண்ட் மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்திருக்கிறது.

இந்த நிலையில், மேற்கு வங்காள மாநில முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

பின்னர் அளித்த பேட்டியில் அவர் கூறியவை வருமாறு -

தனித் தெலுங்கானாப் பிரச்சினையைத் தொடர்ந்து மேற்கு வங்கத்தில் கூர்க்காலேண்ட் தனி மாநில கோரிக்கை எழுந்துள்ளது. மாநிலங்களை பிரித்து புதிய மாநிலங்கள் அமைப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கிறது. இப்போதுள்ள சூழ்நிலையில் மாநிலங்களை பிரிப்பது விரும்பத்தக்கது அல்ல.

ஆந்திராவில் நிலவும் பதற்ற நிலையை தணிக்க மத்திய அரசு என்ன செய்ய விரும்புகிறது என்பதை பிரதமரிடம் அறிந்து கொள்ள விரும்பினேன். தனித் தெலுங்கானா மாநிலப் பிரச்சினை குறித்து மாநில அளவிலும், தேசிய அளவிலும் அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்த மத்திய அரசு தீவிர முயற்சி செய்து வருவது, பிரதமரிடம் பேசியதில் இருந்து தெரிய வந்தது. இதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கி விட்டது.

ஒருமித்த கருத்து ஏற்படும்வரை தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கும் பிரச்சினையில் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று கருதுகிறேன். தெலுங்கானா பிரச்சினையில் ஆந்திராவில் உள்ள கட்சிகளிடையே கருத்து வேறுபாடு நிலவுவதால், தனி மாநிலம் அமைப்பது தொடர்பாக அந்த மாநில சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுவது மிகவும் சிரமம் - என்றார்.

# கிருஷ்ணகிரியில் பயங்கர விபத்து மரத்தில் பஸ் மோதி நால்வர் பலி!

## 30 பயணிகள் காயம்



கிருஷ்ணகிரி, டிசெ. 29

மரத்தில் பஸ் மோதிய பயங்கர விபத்தில் பஸ் நடத்துநர் மற்றும் 3 பெண்கள் உடல் நசிந்து பலியானார்கள். காயமடைந்த 30 பயணிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பெங்களூரில் இருந்து கடந்த சனியன்று இரவில் அரசு பஸ் ஒன்று திருவண்ணாமலைக்கு புறப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தைச் சேர்ந்த பஸ் சாரதி லோகேஸ்வரன் (வயது - 44) பஸ்ஸை ஓட்டி சென்றார். நடத்துநர் லட்சுமணன் (வயது - 50), அஞ்செட்டி நாட்றாம்பாளையத்தை சேர்ந்தவர். இந்த பஸ்ஸில் 50 இற்கும் அதிகமான பயணிகள் இருந்தனர்.

கிருஷ்ணகிரியை அடுத்த ஜெகதேவி நோக்கி, தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் அரசு பஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது இடது பக்க வீதியோரத்தில் உள்ள புளிய மரத்தில் திடீரென பஸ் பயங்கரமாக மோதியது. இதில் பஸ்ஸின் முன்பகுதி சின்னாபின்னமாக நொறுங்கி உருக்குலைந்தது.

இதில், பஸ்ஸின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த நடத்துநர் லட்சுமணன் உட்பட 4 பேர் அதே இடத்தில் உடல் நசிந்து பலியானார்கள். 8 பெண்கள் உட்பட 30 பேர் காயம் அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மீளக்குடியேறிய மக்களுக்கான 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த குடும்பத்தினர்களுக்கு இந்தக் கொடுப்பனவை சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வழங்குவதையும், கொடுப்பனவை பெறுவதற்காக வருகை தந்த மக்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நந்தன்)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபாபதி ரனேஸ்

(ஊ 111, வ/தம்பனைச்சோலை நேதீஸ்வரா வித்தியாலயம், மல்ரிவிசன் உரிமையாளர்)



இலகடி, அல்வாய் கிழக்கை பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி ரனேஸ் 20.12.2009 அன்று காலமானார்.

அன்னார் கனகசபாபதி- ராஜேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், சுரேந்திரன், சுகிதன் ஆகியோரின் சகோதரனும், அரியாலை திருமகள் வீதியைச் சேர்ந்த யோகராசா - புஸ்பராணி தம்பதியினரின் அன்பு மருமகனும், சசிகலாவின் (ஆசிரியை, வ/திருஞானசம்பந்தர் வித்தியாலயம்) பாசமிகு கணவரும், ஆதித்தன், அபிராமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிதரன், புஸ்பகலா, ஜசந்தன், சிவலோசனி ஆகியோரின் மைத்துனரும், பத்மதாசனின் சகலனும், திவ்வியன், அட்சயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா மகா இறம்பைக்குளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் 21.12.2009 அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.138, திருமகள் வீதி,
அரியாலை.

தகவல்:
(91936) யோகராசா குடும்பத்தினர்.

## செல்லையா பாலசுப்பிரமணியம்



யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியம் நேற்று (28.12.2009) திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தவஞானவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் மகேஸ்வரி, சந்திரலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலகௌரி (ஆசிரியை, ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம்), பாலகிருஷ்ணன் (லண்டன்), பாமினி, பாலமுரளி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவன் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்), நளாயினி(லண்டன்), ஜெயகணேசன் (உதவி முகாமையாளர், சமுர்த்தி வங்கி, யாழ்.பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிமலினி, அரங்கன், அனுசை, நிவேதா, நிதுஜா, அபினாஷ், ஹம்சத்வனி, ஹம்சானந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் குமாரசாமி (பவளேந்திரம் - கனடா), சிவஞானவதி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக் காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை.
(சைவ மகாஜனா வித்தியாசாலைக்கு அருகாமை)

தகவல்:
(91985) குடும்பத்தினர்.

## திருமதி இராசமணி தங்கராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியை, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், நல்லூர் முத்திரைச் சந்தியையும், கல்வியங்காட்டையும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசமணி தங்கராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்கள் 26.12.2009 அன்று கல்வியங்காட்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கராஜாவின் (திருவள்ளுவர் அச்சக ஆரம்ப ஸ்தாபகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியத்தின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மாவின் அன்பு மருமகளும், ஸ்ரீ ரஞ்சினி லோகநாதனின் (பிரான்ஸ்) அன்புத் தாயும் கனகரத்தினம் லோகநாதனின் (பிரான்ஸ்) மாமியாரும் பாலமுரளி (பிரான்ஸ்), சிந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவமணி இராஜரட்ணம், மகேஸ்வரி நாகேந்திரா, நேசமணி குமாரசாமி, ஞானமணி பூபாலராஜா, பூமணி மகேந்திரன், தவமணி நமசிவாயம், ஜெயமணி ரட்ணகோபால் ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2009) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு 145,புதுச்செம்மணி வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(91950)

இல. 145,புதுச்செம்மணி வீதி.

தகவல் :
எஸ். நமசிவாயம் (J.P)
T.P : 021 2223770

# தரம் குறைந்த சவர்க்காரம் நகரப்பகுதியில் விற்பனை

யாழ்ப்பாணம்.டிசெ.29

யாழ்.நகரப்பகுதியில் வாகனங்களில் கொண்டு சென்று விற்பனை செய்யப் படும் சவர்க்காரக் கட்டிகள் பாவனைக்கு ஒவ்வாதவையாக உள்ளன என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக யாழ்.நகரின் பிரதான வீதிகளில் வாகனங்களில் சென்று மிக மலிவான விலையில் விற்கப்படும் இச்சவர்க்காரக் கட்டிகள் பாவனைக்கு உகந்தனவா என சுகாதாரப் பிரிவினர் பரிசீலனை செய்யவேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சவர்க்காரக் கட்டிகள் உடனே கரையும் தன்மை உள்ளதாகவும், கைகளில் எரிவை ஏற்படுத்தும் தன்மை கொண்டனவாகவும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-16)

# நவசமசமாஜக் கட்சியின் ஆண்டு விழா நாளை

கொழும்பு.டிசெ.29

'சுதந்திர ஜனநாயகத்திற்கான இடது சாரி தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவோம்' என்னும் தலைப்பில் நவசமசமாஜ கட்சி தனது 32 ஆவது ஆண்டு விழாவை நாளை புதன் கிழமை கொண்டாடவுள்ளது.

கொழும்பு புதிய நகரசபை மண்டபத் தில் பிற்பகல் இரண்டு மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன ஆண்டு விழா உரையினை ஆற்றுவார். வ.திருநாவுக்கரசு தமிழ் மொழியில் உரையாற்றுவார். (50-14)

# அதிபர்களுக்கான கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்.வலயத்தின் 9 பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், சென்.ஜேம்ஸ் பெண்கள் வித்தியாலயம், சென்.ஜேம்ஸ் ஆண்கள் வித்தியாலயம், யாழ். இந்து மகளிர்கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், சன்மார்க்க வித்தியாலயம், புனித மரியான் வித்தியாலயம், கலட்டி ஜி.ரி.எம்.எஸ். வித்தியாலயம் ஆகிய பாடசாலை அதிபர்களை[illegible]படி கூட்டத்தில் கலந்துகொள்ளுமா[illegible]யக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (50-16)


## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் புதிதாக திறக்கப்படவுள்ள கனடியன் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்காக (Management Trainees) ஆள்கள் தேவை. பயிற்சியின் போது ரூபா 15,000 - 20,000 வரை பெறலாம் பயிற்சியின் பின்னர் 60,000/= மேல் வருமானம் பெறலாம்.(O/L, A/L) சித்தியடைந்தவர்களும் தொழிலை எதிர்பார்ப்பவர்களும் தொடர்புகொள்ளவும். பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
(91011) 0712836586


## தவறிவிட்டது

SN: 0077182, PIN: 491320 ஆகிய இலக்கங்கள் பொறிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளிற்குரிய ("L" Board) அரியாலைக்கும் தாவடிக்கும் இடையில் 04.12.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0718148155 (N.கோவர்த்தனன்)என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## திருத்தி வாசிக்கவும்

கடந்த 20.12.2009 திகதிய பத்திரிகையில் 16ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய AFTER O/L & A/L என்னும் விளம்பரத்தில் ''சர்வதேச அங்கீகாரம் பெற்றுக்கொள்ள'' என்ற வசனத்தை ''சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள'' என திருத்தி வாசிக்கவும்.

# சாவகச்சேரி பிரதேசசபை-கொடிகாமம் பொது அறிவித்தல்-2010

I.வீடமைப்பு நகர சீர்திருத்தம்: (பிரிவு.28/56)

இப்பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்டோர் தங்கள் ஆதனங்களில் கட்டடவேலைகளை ஆரம்பித்தல்/திருத்துதல்/நீட்டுதல் யாதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதும் கட்டளைச் சட்டம் 15/87 இல் பிரிவு 49இன் பிரகாரம் விண்ணப்பம் செய்து முன் அனுமதி பெறப்பட வேண்டும். இவ் அனுமதியானது ஒருவருடகாலத்திற்கு செல்லுபடியாகும். பூரணப்படுத்த முடியாத நிலையில் மேலும் காலநீடிப்பு செய்தல் வேண்டும்.

பூர்த்தியாக்கப்பட்டதும் பிரதேச சபையினால் வழங்கப்படும் அமைவுச் சான்றிதழ் பெறப்பட்டதன் பேரில் பாவனைக்கு மாற்றிக்கொள்ளலாம். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல கட்டட உரிமையாளர்கள் மீது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்ட பிரிவின் பிரகாரம் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

II.விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்:

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைப்பரப்பிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் குறிப்பாக கண்டிவீதி (ஏ-9 வீதி மிருசுவில் உப அலுவலகப் பகுதியிலிருந்து ஆரம்பித்து நகரசபைப்பகுதி தவிர்த்து செம்மணி வரையில்) அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டும்/ காட்சிப்படுத்தியுமுள்ள விளம்பரங்கள் தொடர்பாக உரிய கட்டணத்தைச் செலுத்தி அனுமதி பெறப்படல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு 31.01.2010 ஆம் திகதிக்கு முன்னதாக செம்மைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

III. ஆதனவரி அறிவித்தல்கள்: (பிரிவு 134/87)

இப்பிரதேச சபையின் உப அலுவலகங்களான மிருசுவில், கச்சாய், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய ஆறு உப அலுவலகங்களில் ஆதனவரி விதிக்கப்பட்ட கைதடி, நாவற்குழி இரு உப அலுவலகப் பிரதேசங்களில் நீண்ட காலமாக ஆதனவரி மீளாய்வு செய்யப்படாமலும், வரியிறுப்பாளர்கள் வரியினைச் செலுத்தாமையும் கவனத்திற் கொள்ளப்பட்டது. ஆதலால் குறித்த இரு உப அலுவலகத்தின் வரியிறுப்பாளர்கள் மீளாய்வு செய்யப்படும் வரையில் முன்னைய விதிக்கப்பட்ட ஆண்டுப் பெறுமதியின் 6 வீதத்தினை செலுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் புதிதாக இப்பிரதேசத்தில் ஆதனங்களை கொள்வனவு செய்தவர்கள்/ஆதன உரிமை மாற்றம் செய்தவர்கள்/அரச காணியினை அனுமதிப்பத்திரமூலம் பெற்றவர்கள் யாவரும் உரிய படிவமூலம் வேண்டிய ஆவணங்களோடு விண்ணப்பம் செய்து செம்மைப்படுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

IV. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பரப்பிலுள்ள சகல வியாபார/ தொழில் நிலையங்கள் தங்கள் உப அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று வியாபாரத்தின் பல்லினவகையின் தன்மைக்கேற்றவாறு உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. 31.03.2010 ஆந் திகதிக்கு முன்னதாக உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளாத நிறுவன உரிமையாளர்கள் மீது கட்டளைச்சட்டம் பிரிவு 150இன் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible]ல் பாதுகாப்பு உரிமம்

[illegible]பிரதேச சபையின் நிர்வாக எல்லைப் பரப்பினுள் தேசிய சூழல் பாதுகா[illegible]ட்டம் 47/80 ஆம் திருத்திய 56/88இன் படியும், விசேட வர்த்தமானி 1[illegible]/5 [illegible]ம் பிரகாரமு[illegible] "ஆ" பகுதியில் குறித்த வியாபாரம்/ தொழிலினை நட[illegible] தங்கள் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய படிவங்கள மூலம் விண்ணப்பம் செய்தும் கட்டணங்களைச் செலுத்தியும் இவ் உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. தவறுவோர் மீது குறித்த சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

VI.வாகனங்கள், மிருகங்களுக்கான உரிமம்:

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைப் பரப்பினுள் வசிப்போர் தங்கள் துவிச்சக்கர வண்டிகளுக்கும், வளர்ப்பு நாய்களுக்கும் 2010ஆம் ஆண்டிற்கான உரிமத்தை தமக்குரித்தான உப அலுவலகங்களில் வழங்கப்படும் படிவங்களில் விண்ணப்பம் செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி 31.03.2010 ஆந் திகதிக்கு முன் உரிமத்துக்கான தகட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்றுக் கொள்ளத் தவறுமிடத்து மாற்று நடவடிக்கைகள் எடுக்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.


சாவகச்சேரி பிரதேச சபை,
தலைமைப் பணிமனை,
கொடிகாமம்.
24.12.2009

(சி/563556)

வே.சிவராஜலிங்கம்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

# மரண அறிவித்தல்

## திருமதி பரஞ்சோதி அன்னம்மா



ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி அன்னம்மா நேற்று (28.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(91948)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபிள்ளைத்தனமான கருத்துகள் அவ[illegible]பட்டதைக் கண்டிக்கிறோம்

தமிழ்க்கூட்டமைபின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் லண்டனில் வைத்துக் கூறிய கருத்துகளை அறிந்ததும், உதயனின் நீண்ட நாளைய வாசகன் என்ற முறையிலே நான் மிகவும் அதிர்ந்து போனேன்.

இப்போது வாய்கூசாமல் 'உதயன்' 'சுடர்ஒளி' பத்திரிகைகள் மீதும் அதன் நிர்வாக இயக்குநர் மீதும் அபாண்டமாகப் பழி சொல்லும் சிவாஜிலிங்கம், மக்கள் துன்பப்படும் போது யாருடைய நிகழ்ச்சி நிரலின் கீழ் தலைமறைவாக ஒளிந்திருந்தார்?

முக்காடு போட்டுக் கொண்டு அவர் ஒளிந்திருந்த வேளையில், மக்களின் அவலத்தை பல்வேறு இழப்புகள், தடைகள், வலிகள் என்பவற்றைத் தாங்கியபடி துணிச்சலாக வெளிப்படுத்தியது உதயன் அல்லவா?

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிரதிநிதி செய்ய வேண்டிய வேலையை, அவர் மக்களை மறந்துவிட்டு உல்லாசமாக வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கையில் எம்மோடு நின்று, எமது பிரச்சினைகளைத் தீர்க்கப் பேராடியது 'உதயன்' 'சுடர்ஒளி' பத்திரிகைகள்தான். இதற்காக 'உதயன்-சுடர்ஒளி' ஆசிரியர் வித்தியாதரன் கூட, கடத்தப்பட்டு, காவலில் வைக்கப்பட்டு இரண்டு மாதங்கள் சித்திரவதையை அனுபவித்த பின்பே விடுவிக்கப்பட்டார்.

இதற்கு முன்னர் கூட பல தடவை கள் உதயனின் - தமிழ் மக்களின்- குரல் வளையை நசுக்குவதற்கு முயற்சிகள் நடந்துள்ளன.

கைக்குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகங்கள், பத்திரிகை எரிப்பு, மிரட்டல் கடிதங்கள், 'சீல்' வைப்பு எனப் பல்வேறு ரூபங்களில் உதயன் மீதான அழுத்தங்கள் தொடர்ந்தபோதும், உயிரிழப்புகள், உடைமை இழப்புகள் என்பவற்றைச் சந்தித்தபோதும், மக்கள் பணியைத் தொடர்ந்த உதயன் மீது இவ்வாறான அவதூறைச் சொல்வதற்கு சிவாஜிலிங்கத்திற்கு எப்படி மனம் வந்தது?

நலன்புரி நிலையத்தில் வாடிய- வாடிக் கொண்டிருக் கும் மக்களுக்கு ஏதாவது செய்ய நினைக்கமால், கட்டுப்பணத்தைச் செலுத்தியவுடனேயே சிவாஜிலிங்கம் லண்டனுக்கு எதற்காகப் போயிருக்கிறார்? ஒரு வேளை நாடு கடந்த ஜனாதிபதியாக வரப்போகின்றாரோ?

இவ்வாறு பல சந்தேகங்கள் எழுகின்றன.உண்மையில் சிவாஜிலிங்கம் வெளியிட்டுள்ள சிறுபிள்ளைத்தனமான கருத்துகளால் அவர் தனது அரசியல் எதிர்காலத்தையே இல்லாமல் செய்துவிட்டார் என்றே தமிழ்மக்களாகிய எங்களுக்குத் தோன்றுகின்றது.

-உதயன் அபிமானி-
(மு. நமசிவாயம்-
கொக்குவில்)




பத்திரிகைத் [illegible] மதித்து நீதியாகவும், நியாயமா[illegible]வும் தனது கடமைகளைச் செய்துவரும் ,உதயன், ,சுடர் ஒளி, பத்திரிகைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கூறிய கருத்து எமக்கு மிகுந்த மன வேதனையை அளிக்கிறது.

தமிழ் மக்களின் நலனை முதன்மைப் படுத்தி, அவர்களது உரிமைப் போராட்டத்துக்காக, நீண்ட காலமாக- கடந்த 25 வருடங்களாக- தமிழ் மக்களுடன் கூடவே இருந்து காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் உதயன் பத்திரிகை தொடர்பாக சிவாஜிலிங்கம் அவர்கள் கூறிய கருத்துக்கள் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

மக்களின் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சிவாஜிலிங்கம், யாரோ ஒருவரது பின்னணியின் தூண்டுதலின் விளைவாக யதார்த்தங்களை மறந்து தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து தன்னிச்சையாக ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கியிருக்கிறார்.

அதன் பெறுபேறாக அவர் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற கௌரவத்தை இழந்தவராகிறார். இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் இவருக்குத் தகுந்த பிரதிபலிப்பைக் காட்டுவார்கள் என்றே நம்புகிறோம்.

கடற்தொழிலாளர் எவருமே இவரை எந்த வடிவத்திலும் ஆதரிக்க மாட்டார்கள் என்பதனைத் துணிந்து கூறலாம். அது மட்டுமன்றி சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்பதிலிருந்து வாபஸ் பெறுவதுடன் உதயன், சுடர் ஒளி பத்திரிகைகள் மீதும் அவற்றின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மீதும் சேறு பூச முற்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கடந்த காலங்களில் எமது கடற்தொழிலாளர்கள் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருந்த வேளைகளில் எமக்காகக் குரல் கொடுத்து தீர்வினைப் பெற்றுக் கொள்ள பூரண ஒத்துழைப்பு வழங்கியது உதயன் நாளிதழே என்பதை ஒருபோதும் மறந்துவிட முடியாது.

சி. தவரட்ணம்,தலைவர்,
யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சமாசம்.

## கல் எறிந்தவர் 'அந்த' வர்க்கமே!

*காய்த்தமரம் கல்லெறி வேண்டும். கல் எறிபவர்கள் யார்?*

சின்னஞ் சிறுசுகள், கள்வர் காடையர்கள், குட்டிச் சண்டியர்கள்.

உதயன் தினசரிப் பத்திரிகைக்கும் அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் அவர்களுக்கும் மேற்கூறிய ஒரு வர்க்கத்தைச் சார்ந்தவர் ஒருவர் கல் எறிந்து வசை பாடியுள்ளார்.

*'காகம் திட்டி மாடு சாகாது'. இது தமிழ் வழக்கு.*

கல் எறிந்தவர் இவற்றைப் புரிந்து உணரும் சிந்தனை ஆற்றல் உடையவர் என நான் நம்பத் தயாராக இல்லை.

இ.சங்கர்,
இலங்கைத் தமிழரசுக் கட்சி,வாலிப முன்னணி
முன்னாள் இணைச் செயலாளர்களில் ஒருவர்.

# தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 343: இங்கிலாந்து சிறப்பான ஆரம்பம்

டர்பன், டிசெ.28

டர்பனில் நடந்துவரும் இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 343 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பதிலுக்குத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி 2ஆவது நாள் ஆட்ட நேர முடிவின்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 103 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் நாள் ஆட்டநேரமுடிவின்போது 5 விக்கெட்டுக்கு 175 ஓட்டங்கள் என்ற தனது ஓட்ட எண்ணிக்கையுடன், நேற்று முன்தினம் 2ஆவது நாளைத் தொடர்ந்து விளையாடிய தென்னாபிரிக்க அணி,

இறுதிக் கட்டத்தில் ஸ்ரெயினின் அதிரடியால் 300 ஓட்டங்களைக் கடந்தது. ஸ்ரெயின் 58 பந்துகளில் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 47 ஓட்டங்களையும், டி வில்லியர்ஸ் 50 ஓட்டங்களையும், பௌச்சர் 39 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் ஸ்வான் 4 விக்கெட்டுகளையும், அண்



டர்சன், ஸ்ருவார்ட் பிராட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 103 ஓட்டங்களை எடுத்திருந்தபோது போதிய வெளிச்ச மின்மை காரணமாக 2ஆவது நாள் ஆட்டம் முன்கூட்டியே முடித்துக் கொள்ளப்பட்டது.

அணித்தலைவர் ஸ்டிரஸ் 54 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். குக் 31 ஓட்டங்களுடனும், டிராட் 17 ஓட் டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# இந்திய கிரிக்கெட் அணிக்கு 'டெஸ்ட் சம்பியன்ஷிப்' விருது

புதுடில்லி, டிசெ. 29

டெஸ்ட் தரவரிசையில்முதல் இடத்துக்கு முன்னேறிய இந்திய அணிக்கு இந்த ஆண்டுக்கான ஐ.சி.சியின் டெஸ்ட் 'சம்பியன்ஷிப் விருது' டில்லியில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. இவ்விருதை இந்திய அணியின் தலைவர் டோனி, ஐ.சி.சியின் தலைமை நிர்வாகியான ஹாரூன் லார்கட்டிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

ஐ.சி.சி. ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட் அணிக்கு 'சம்பியன்ஷிப் விருது' வழங்கிக் கௌரவிப்பது வழமை. கடந்த 2008-09ஆம் ஆண்டுக்கான விருதை ஆஸ்திரேலிய அணி பெற்றது. இந்த ஆண்டுக்கான (2009-10) விருது சமீபத்தில் டெஸ்ட் தரவரிசையில் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறிய இந்திய அணிக்கு வழங்கப்பட்டது. இதற்கான விழா டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இவ்விருதைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இதுகுறித்து இந்திய அணியின் தலைவர் டோனி கூறியவை வருமாறு:-

''இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி., டெஸ்ட் சம்பியன்ஷிப் விருதைப் பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்விருதை இந்திய அணி மற்றும் இந்திய கிரிக்கெட் சபை சார்பாக நான் பெறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 14 மாதங்களாக இந்திய அணி கடுமையாகப் போராடி தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறியதன்மூலம், தற்போது இவ்விருது கிடைத்தது. தொடர்ந்து தரவரிசையில் முதலிடத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்காக இனிவரும் போட்டிகளில் கூடுதல் திறமையை வெளிப்படுத்துவோம்''-என்றார்.




# மன்னிப்புக் கேட்டது கிரிக்கெட் சபை

போட்டி ரத்து செய்யப்பட்டமைக்காக டில்லி கிரிக்கெட் சபை மன்னிப்புக் கேட்டுள்ளது.

இதுகுறித்து இதன் தலைவர் அருண் ஜேட்லி கூறியது:

''தவிர்க்க முடியாத காரணத்தால் போட்டி ரத்தானமைக்கு அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். ரசிகர்களுக்கு அவர்களுடைய நுழைவுச்சீட்டுக்கான கட்டணங்கள் திருப்பித்தரப்படும். இதுபோன்ற [illegible] தவாறு பார்[illegible]'' - என்றார்.

# புதுடில்லி மைதானத்துக்குத் தடை?

புதுடில்லி, டிசெ. 29

டில்லியில் இந்தியா-இலங்கை அணிகள் மோதிய ஐந்தாவது ஒருநாள் போட்டி, மோசமான ஆடுகளம் காரணமாக பாதியில் ரத்து செய்யப்பட்டதையடுத்து ஐ.சி.சி. விதிமுறைப்படி டில்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் சர்வதேசப் போட்டிகளை நடத்த ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் வரை தடை விதிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. இதனால், இங்கு உலகக் கிண்ணப் போட்டி(2011) நடப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

போட்டி ரத்தானது குறித்து முழு விவரத்தை ஐ.சி.சிக்கு ஹார்ஸ்ட் அனுப்பியுள்ளார். இப்பிரச்சினை பற்றி இந்திய கிரிக்கெட் சபை 14 நாள்களுக்குள் ஐ.சி.சிக்கு விளக்கம் அளிக்க வேண்டும். ஒட்டுமொத்த விசாரணைக்கு நான்கு வார காலம் தேவைப்படும். இதற்குப் பின்னர் டில்லி மைதானத்துக்கு ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் வரை தடைவிதிப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

. இது குறித்து ஐ.சி.சி. தலைமை நிர்வாகி ஹாரூன் லார்கட் கூறியவை வருமாறு:-

''உலகக் கிண்ணப் போட்டியை நடத்த டில்லி மைதானத்துக்குத் தடை விதிக்கப்படும் என்று இப்போதே கூற முடியாது. ஆடுகளம் தொடர்பான அறிக்கையை முழுமையாக ஆய்வு செய்தபின்னர் முடிவு எடுக்கப்படும்''-என்றார்.

# ரசிகர்கள் ரகளை



ஆடுகளம் சரியில்லாமையால் போட்டி நிறுத்தப்பட்டதை அடுத்து, மைதானத்தில் ரசிகர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். தண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட கைக்குக் கிடைத்த பொருள்களை எடுத்து மைதானத்துக்குள் எறிந்த அவர்கள், அங்கிருந்த கதிரைகளை அடித்து நொறுக்கினர். இவை தவிர, அங்கு வைக்கப்பட்டு இருந்த 'கட்-அவுட்'களையும் பிரித்து எறிந்தனர்.

# கவாஸ்கர் குழப்பம்

டில்லி ஆடுகளம் படுமட்டமாக அமைக்கப்பட்டிருந்தது. சில பகுதிகளில் புல் காணப்பட்டது. சில பகுதிகள் வறண்டு போயிருந்தன. புல் மீது பட்ட பந்துகள், தாறுமாறாக 'பவுன்ஸ்' ஆனது. அதே நேரத்தில் புல் இல்லாத இடத்தில் பட்ட பந்துகள், மிகவும் தாழ்வாகச் சென்றன. இதனால் துடுப்பாட்ட வீரர்கள் சரியாகக் கணித்து விளையாட முடியவில்லை.

''இந்த ஆடுகளத்தில் புல் முடிச்சுகள் காணப்படுவதால் தொடர்ந்து விளையாடுவது ஆபத்தானது. வீரர்களின் பாதுகாப்பு முக்கியம். உடல் ரீதியாகக் காயம டைய அனுமதிக்கக் கூடாது. சரியான அள வில் வீசப்பட்ட பந்துகள் கூட தாறுமாறாக எகிறுகிறது'' - என்றார்.

# அத்தப்பத்து-ஸ்ரீநாத் வாக்குவாதம்

டில்லி ஆடுகளம் தொடர்பாக முன்னாள் வீரர்களான இந்தியாவின் ஸ்ரீநாத், இலங்கையின் அத்தப்பத்து ஆகியோர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக அத்தப்பத்து கூறியவை வருமாறு:-

''ஆடுகளம் மிகமோசமாக இருந்த நிலையில், சில ஓவர்கள் வீசப்பட்ட நிலையிலேயே போட்டியை ரத்துச் செய்திருக்க வேண்டும்,''என்றார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாகப் பேசிய ஸ்ரீநாத் கூறியவை வருமாறு-

''நல்ல ஆடுகளத்தில் கூட வீரர்கள் காயமடையலாம். சில ஆடுகளங்கள் ஆரம்பத்தில் மோசமாக இருக்கும். போகப்போக முன்னேற்றம் அடையும். இதன் அடிப்படையில் பார்த்தால், போட்டியை முன்னதாகவே ரத்துச் செய்ய வாய்ப்பு இல்லை,''என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் சதி முயற்சி முறியடிக்கப்பட்ட அமெ. விமானத்தில் மீண்டும் தீவிரவாதி?

டெட்ராய்ட், டிச. 29

நடுவானில் விமானத்தைத் தகர்க்க திட்டமிட்ட தீவிரவாதி பிடிபட்டு, அது தொடர்பான பீதி அடங்கும் முன்னர் அதே விமானத்தில் மற்றுமொரு தீவிரவாதி புகுந்துவிட்டார் என்ற தகவலால் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த 25 ஆம் திகதி நெதர்லாந்திலிருந்து அமெரிக்கா சென்ற நோர்த் வெஸ்ட் ஏர்லைன்ஸ் விமானத்தில் நைஜீரிய தீவிரவாதி ஒமர் பாரூக் அப்துல் முத்தலிப் வெடிமருந்து மூலம் விமானத்தை தகர்க்க முயற்சி செய்தார். அவரை பொலிஸார் கைதுசெய்து இப்போது இரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை மீண்டும் அதே விமானத்தில் தீவிரவாதியொருவர் நுழைந்துவிட்டார் என்ற தகவலால் பரபரப்பு ஏற்பட்டது. நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமிலிருந்து அமெரிக்காவிலுள்ள டெட்ராய்ட் நகருக்கு அதே நோர்த் வெஸ்ட் ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட்டது. அதில் 257 பயணிகளும், 12 விமான ஊழியர்களும் இருந்தனர். நள்ளிரவு 12 மணி அளவில் விமானம் அமெரிக்க வானில் பறந்து கொண்டிருந்தது.

அப்போது ஒரு பயணி விமான கழிவறைக்கு சென்றார். அரை மணிநேரம் ஆகியும் அவர் இருக்கைக்கு திரும்பவில்லை. இதனால் சந்தேகமடைந்த விமான ஊழியர்கள் கழிவறை கதவை தட்டி வெளியே வருமாறு அழைத்தனர். ஆனால், அவர் வெளியே வரவில்லை.

எனவே, அவர் தீவிரவாதியாக இருப்பாரோ, ஏதோ சதி வேலை செய்யும் நோக்கத்துடன் கழிவறைக்குள் புகுந்து இருக்கிறாரோ என ஊழியர்கள் கருதினார்கள். உடனடியாக டெட்ராய்ட் விமானநிலைய கட்டுப்பாட்டு அறைக்கு அவர்கள் தகவல் கொடுத்தனர். அங்கு பொலிஸார் உஷார் படுத்தப்பட்டனர்.

விமானத்தை தனியான ஓர் இடத்தில் தரை இறக்கும்படி கட்டளையிடப்பட்டது. அதன்படி விமானத்தை தரை இறக்கினார்கள். அங்கு தயாராக இருந்த பொலிஸார் விமானத்தைச் சுற்றி வளைத்தனர். உடனடியாக அனைத்துப் பயணிகளும் வெளியேற்றப்பட்டனர். அதுவரை கழிவறைக்குள் இருந்த பயணியையும் பொலிஸார் வெளியே கொண்டு வந்தனர்.

அவரிடம் விசாரணை நடத்தியபோது அவரும் நைஜீரியாவைச் சேர்ந்தவர் என்று தெரியவந்தது. வியாபார விடயமாகவே தாம் அமெரிக்கா வந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

''நான் தீவிரவாத செயல்களில் ஈடுபட முயற்சிக்கவில்லை. எனக்கு விமானத்தில் திடீரென வயிறு கோளாறு ஏற்பட்டது. இதனால்தான் விமான கழிவறையில் நீண்ட நேரம் இருந்தேன்'' என்றும் அவர் கூறினார்.

இருந்தாலும், அவர் மீது சந்தேகம் அடைந்த பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தினர். பின்னர், அவரின் உடைமைகள் உள்ளிட்டவற்றை பொலிஸார் சோதனையிட்டனர். அதன் பினன்னர் அச்சப்படுவதற்கு எதுவும் இல்லை எனக் கூறினர்.

அந்த விமானத்தில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் தரையிறங்கும் வரை கலவர முகத்துடனேயே காணப்பட்டனர். சந்தேகப்பட்ட நபர் தீவிரவாதி அல்ல எனத் தெரிந்த பின்னர்தான் அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினர்.

அந்த நைஜீரிய பயணி தன்னை தீவிரவாதி என சந்தேகித்ததால் மிகவும் மன வருத்தத்துக்கு ஆளானார் என்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

# அமெ. மீது தாக்குதல் நடத்திய நபர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தத் திட்டம்

## ரொபர்ட் கிப்ஸ் பேட்டியில் தகவல்

வாஷிங்ரன், டிசெ. 29

''அமெரிக்காவின் இரட்டை கோபுரம் மீதான தாக்குதலை நடத்திய குற்றவாளிகள், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லையில் தற்போதும் பதுங்கியிருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்கா மீது மேலும் பல தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளார்கள்'' என வெள்ளை மாளிகை பேச்சாளர் ரொபர்ட் கிப்ஸ் தாம் தொலைக்காட்சி நிறுவனமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''ஈராக்கிலிருந்துவரும் எங்களின் கவனம் தற்போது பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய இவ்விரு நாடுகளின் பக்கமே திரும்பியுள்ளது.பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லையிலுள்ள மலைக் குகைகள், வீடுகள் ஆகியவற்றில் அமர்ந்துதான் அமெரிக்காவின் இரட்டை கோபுரம் மீதான தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தற்போதும் அங்கிருந்துதான் மேலும் பல தாக்குதல் திட்டங்கள் தீட்டப்படுகின்றன'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அல்-குவைதாவினரும், தலிபான்களும் மேற்கொள்ளும் தாக்குதல்களை சமாளிக்க புதிய நிலைப்பாட்டை கடைப்பிடிக்க ஒபாமா அரசு ஆரம்பித்துள்ளது. இதற்காக பல்வேறு நாடுகளுடன் அமெரிக்கா கைகோர்த்துள்ளது'' என்றும் ரொபர்ட் கிப்ஸ் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

# அமெ., ஐரோப்பிய நாடுகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

வாஷிங்ரன், டிசெ.29

அமெரிக்க விமானத்தை நடு வானில் தகர்க்க தீவிரவாதியொருவர் மேற்கொண்ட முயற்சியை அடுத்து, அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தையொட்டி அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், பிரிட்டன், ஜெர்மன், பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், நெதர்லாந்து ஆகியவை உள்ளிட்ட நாடுகளின் விமான நிலையங்களில் அதிகபட்ச பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் கடும் சோதனைக்கு பின்னரே விமானத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

அமெரிக்காவின் முக்கிய இடங்களைத் தகர்க்க பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளமையால், அமெரிக்கா நோக்கிவரும் அனைத்து விமானங்களிலும் கூடுதல் பரிசோதனை நடத்துமாறு ஜனாதிபதி ஒபாமா, பாதுகாப்பு அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது ஹவாய் தீவில் குடும்பத்துடன் விடுமுறையை கழித்துவரும் ஒபாமா, நாட்டு நடப்புகளையும் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறார் என வெள்ளை மாளிகை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ரிச்சர்ட் ரீட் என்பவர் பாதணிக் குண்டு மூலம் டிரான்ஸ் அட்லாண்டிக் விமானத்தை தகர்க்க முயன்றபோது பிடிப்பட்டார். ரிச்சர்ட் ரீட் தனது பாதணியொன்றில் 'பெடின்' எனப்படும் சக்திவாய்ந்த வெடிமருந்தை மறைத்து வைத்திருந்தார்.

இதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திதான் முதாலப்பும், கடந்த சனிக்கிழமை விமானத்தை தகர்க்க திட்டமிட்டுள்ளார்.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறையில் அமெரிக்க விமானங்களில் நிறையகூட்டம் இருக்கும் என்பதால் அதிக அளவில் சேதத்தை ஏற்படுத்த, பயங்கரவாதிகள் இந்தக் காலக்கட்டத்தை தேர்ந்தெடுத்துள்ளனர் எனப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

# அமெ. விமானத்தைத் தகர்க்க முயன்ற நைஜீரிய இளைஞர் மீது வழக்குப்பதிவு

வாஷிங்ரன், டிச. 29

அமெரிக்க விமானத்தை நவீன வெடிபொருள் மூலம் தகர்க்க முயன்ற நைஜீரிய தீவிரவாதி ஒமர் பாரூக் அப்துல் முத்தலிப் மீது அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 20 ஆண்டுகால சிறைத் தண்டனையும் இலங்கை நாணயப்படி சுமார் 3 கோடியே 75 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படலாம்.

நைஜீரியாவைச் சேர்ந்த ஒமர் பாரூக் அப்துல் முத்தலிப், டெட்ராய்ட் செல்லும் அமெரிக்க விமானத்தில் பயணம் செய்தார். அந்த விமானம் டெட்ராய்ட் நகரில் தரை இறங்க முயன்றபோது, அதை தகர்க்கப்பதற்காக தான் மறைத்து எடுத்துவந்த வெடிபொருள்களைப் பயன்படுத்தி வெடிக்கச் செய்ய முயற்சித்தார்.

இந்த முயற்சியில் தோல்வி அடைந்தார். அதோடு, வெடிக்கச் செய்ய முயன்றபோது அவருக்குத் தீக்காயம் ஏற்பட்டது. அவரை விமானத்தில் பயணம் செய்த சக பயணிகள் அடித்து உதைத்து மடக்கினர். விமானம் தரை இறங்கியதும் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை கைதுசெய்த பொலிஸார் வைத்தியசாலையில் காயத்துக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தனர். அவர் மீது திங்கட்கிழமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. டெட்ராய்ட் நகரில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வைத்தியசாலைக்கு நீதிபதி சென்றார்.

வைத்தியசாலை கூட்ட அறையில் 10 அடி நீளம் உள்ள மேசை முன்னர் ஒரு கோடியில் நீதிபதி அமர்ந்திருந்தார். மறுகோடியில் ஒமர் பாரூக் அப்துல் முத்தலிப் அமர வைக்கப்பட்டார். அவரது ஒரு கை விலங்கிடப்பட்டு அவர் இருந்த நாற்காலியுடன் இணைக்கப்பட்டிருந்தது. அவர் இடது கையிலும், வலது கை மணிக்கட்டிலும் கட்டுப் போடப்பட்டிருந்தது.

அப்துல் முத்தலிப் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நீதிபதி முன்பு சட்டத்தரணி படித்தார். அப்துல் முத்தலிப் திட்டமிட்டு விமானத்தை தகர்க்க முயன்றார். வெடிபொருட்களை விமானத்தில் எடுத்து வந்தார் எனக் குற்றஞ்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்த வழக்கு டெட்ராயிட்டிலுள்ள மிச்கிகன் கிழக்கு மாவட்ட மக்களுக்கான மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது.

நீதிபதி போல் போர்மன் கேட்ட கேள்விகளுக்கு முத்தலிப் ஆங்கிலத்தில் பதில் அளித்தார். அவருக்கு வயது 23 என்ற போதிலும் அவர் பார்ப்பதற்கு 16 அல்லது 17 வயது இளைஞர் போல இருந்தார். அவர் தனது சார்பில் வாதாட சட்டத்தரணி ஒருவரை அமர்த்திக் கொள்ள தன்னிடம் பணம் இல்லை என்றும் அதனால் நீதிமன்றமே தன் சார்பில் வாதாடுவதற்கு சட்டத்தரணி ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து இந்த வழக்கு அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 20 ஆண்டு சிறைத்தண்டனையும் இலங்கை நாணயப்படி சுமார் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸார் நடத்திய விசாரணையில் அவர் தான் வெடிமருந்துகளையும், ஊசியையும் உள்ளாடையில் வைத்து தைத்திருந்தார் என்றும் விமானத்தில் ஏறிய பின்னர் அந்த தையலை பிரித்து அவற்றை வெளியே எடுத்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# துருக்கிப் பிரதிப் பிரதமரை கொல்ல சதி; 8 பேர் கைது

அங்காரா, டிச. 29

துருக்கியின் பிரதிப் பிரதமரை படுகொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின்பேரில் 8 இராணுவப் படைச்சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

துருக்கியின் பிரதிப் பிரதமர் புலுன்ட் அர்னிக்கை படுகொலை செய்வதற்கு குறித்த எட்டு இராணுவச் சிப்பாய்களும் சதித் திட்டம் தீட்டினர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் தலைநகர் அங்காராவிலுள்ள இராணுவத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். எவ்வாறெனினும், இந்தக் கொலை முயற்சிக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை எனத் துருக்கிய இராணுவம் அறிவித்துள்ளது.

அரசைக் கவிழ்க்க சதித் திட்டம் தீட்டிய குற்றத்திற்காக இந்த ஆண்டின் ஆரம்பப் பகுதியில் துருக்கியின் முன்னாள் இராணுவ மேஜர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் உள்ளிட்ட பலருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒசாமா பின்லேடனின் புதல்வி சவூதித் தூதரகத்தில் தஞ்சம்

தெஹ்ரான், டிச. 29

''அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனின் புதல்வி எமான் பின்லேடன் ஈரானின் தலைநகரான தெஹ்ரானிலுள்ள சவூதி தூதரகத்திலேயே தஞ்சமடைந்துள்ளார்'' என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மனௌச்சர் மொட்டாக்கி தெரிவித்துள்ளார்.

''எமான் பின்லேடன் இங்குதான் தங்கியுள்ளார் என்பதை சவூதி அரேபிய இராஜதந்திரிகளும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்கள். அவர் எவ்வாறு அத்தூதரகத்துக்குள் சென்றார் என்பது புரியாத புதிராக உள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''பின்லேடனின் புதல்வி எமான் பின்லேடன் முறையான பயண ஆவணங்களைப் பெற்றுக்கொண்டால், ஈரானை விட்டு வெளியேற முடியும். இதில் எத்தகைய சிக்கலும் கிடையாது'' என்றும் மொட்டாக்கி விளக்கியுள்ளார்.

அமெரிக்க இரட்டைக் கோபுரம் 2001 ஆம் வருட செப்ரெம்பர் 11 ஆம் திகதி அல்-குவைதா தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது. அச்சமயம் பின்லேடன் ஆப்கானில் தங்கி[illegible]ந்தார். அமெரிக்காவின் கோரிக்கைக்கி[illegible] அவரை அப்போதைய தலிபான் ஆட்[illegible]னர் அதனிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டனர்.

இதையடுத்து, அமெரிக்கா ஆப்கான் மீது படையெடுத்து தலிபான் ஆட்சியைக் கவிழ்த்தது. அச்சமயம் அங்கிருந்த பின்லேடனின் மனைவியரில் ஒருவரும், பிள்ளைகளும் [illegible] விட்டனர். [illegible]

# பெனாஸிரின் படுகொலைக்கு அனுமதி அளித்தவர் முஷாரப்!

## பாகிஸ்தான் தூதுவர் பேட்டியில் தகவல்

லாகூர், டிச. 29

''பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ படுகொலை செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பே ஆவார்'' என பிரிட்டனுக்கான பாகிஸ்தான் தூதர் வாஜித் ஷாம் சுல் ஹாசன், தொலைக்காட்சியொன்றுக்குத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் கொலை செய்யப்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி முஷாரப்தான் காரணகர்த்தா. அவர் அனுமதி கொடுத்ததால்தான் பெனாஸிரை தீவிரவாதிகளால் கொல்ல முடிந்தது'' என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''முஷாரப் அனுமதி இல்லாமல், பெனாஸிரைக் கொல்லும் திட்டத்தை தெக்ரிக் - இ - தலிபான் தலைவர் மசூத்தால் செயல்படுத்தி இருக்கமுடியாது. பெனாஸிர் உயிருடன் இருந்தால், தமக்கு இரட்டிப்புப் பாதிப்பு ஏற்படும் என்பது முஷாரப்புக்குத் தெரியும். பெனாஸிர் கொலைக்கு முஷாரப் அனுமதி கொடுத்ததற்கு இதுவே காரணமாக இருக்கலாம்'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''பலுச்சிஸ்தான் முன்னாள் ஆளுநர் அக்பர் பக்தி கொலைக்காகவும், தலைமை நீதிபதியை நீக்கியதற்காகவும் முஷாரப் மீது சட்டப்படி பெனாஸிர் நடவடிக்கை எடுத்திருப்பார். இதையெல்லாம் உத்தேசித்தே பெனாஸிரை ஒழித்துக்கட்டுவதற்கு அவர் அனுமதி அளித்திருக்கக்கூடும்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரின் உறவினர்களிடம் மோசடி; இராணுவ மேஜராக நடித்து 8 லட்சம் ரூபா பறிப்பு!

## யாழ்.நகரில் நேற்று நடைபெற்றது

யாழ்ப்பாணம், டிசெ. 29

காணாமல் போனவர்களின் உறவினர்களிடம், தாம் ஒரு இராணுவ அதிகாரி எனக் கூறி ஒருவர் 8 லட்சம் ரூபாவை மோசடி செய்த சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

காணாமல் போனவர்களின் வீட்டுக்கு தொலைபேசியினூடாகத் தொடர்பை ஏற்படுத்திய, மேஜர் சீலன் எனப்படும் ஒருவர் காணாமல் போனவர்களை விடுவிப்பதற்கு தாம் நடவடிக்கை எடுத்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

பின்னர், குறித்தத் தொகை பணத்துடன் 512ஆவது இராணுவப் படைமுகாமுக்கு முன்னால் வரும்படியும் அங்கு வைத்து காணாமல் போனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்ற தொலைபேசி அழைப்புக்கள் ஐந்துக்கும் மேற்பட்ட காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு வந்தது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அவரின் தொலைப்பேசிப் பணிப்புரைக்கு அமைய இராணுவத் தளத்துக்கு சென்றபோது, அவர்களிடம் இருந்த பணத்தை சேகரித்த ஒருவர், காணாமல் போனவர்களை விரைவில் அந்த இடத்துக்கு அழைத்து வருவதாகத் தெரிவித்து விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுள்ளார்.

குறித்த நபர் சுமார் 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தை இவ்வாறு அபகரித்துச் சென்றுள்ளார் எனப் பாதிப்படைந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நேற்றைய 'கொவிசெத' சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் 735 ஆம் இலக்க "கொவிசெத" சீட்டிழுப்பு நேற்று நடைபெற்றது. அதன் வெற்றி எழுத்து 'G' ஆகும். 06,20,55,66 என்பன வெற்றி இலக்கங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டன.

நேற்றைய சீட்டிழுப்பின் சூப்பர் பரிசு வெல்லப்படவில்லை . நான்கு இலக்கங்களும் சரியாக அச்சிடப்பட்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு இருபது லட்சம் ரூபா பரிசாக கிடைக்கும்.

ஆங்கில எழுத்துடன் 3 சரியான இலக்கங்கள் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும்13 பேருக்கு தலா இருபதாயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

மூன்று சரியான இலக்கங்கள் அச்சிடப்பட்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 297 பேருக்கு தலா இரண்டாயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

ஆங்கில எழுத்துடன் இரண்டு சரியான இலக்கங்கள் அச்சிடப்பட்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 634 பேருக்கு தலா ஆயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

இரண்டு சரியான இலக்கங்கள் அச்சிடப்பட்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15,006 பேருக்கு தலா 50 ரூபா பரிசாகக் கிடைக்கும்.

ஆங்கில எழுத்துடன் சரியான ஓர் இலக்கம் அச்சிடப்பட்ட சீட்டுக்களை வாங்கிய 8,422 பேருக்கு தலா 40 ரூபா பரிசாகக் கிடைக்கும்.

சரியான ஓர் இலக்கம் அச்சிடப்பட்ட சீட்டுக்களை வாங்கிய 2,13,541 பேருக்கு தலா 20 ரூபா வீதம் பரிசு கிடைக்கும்.

ஆங்கில எழுத்து மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 33,772 பேருக்கு தலா 20 ரூபா பரிசாகக் கிடைக்கும். (அ)

# 'யாழ்தேவி' ரயில் ஏப்ரலில் ஓமந்தை வரை நீடிக்கப்படும்

## ரயில்வே பொதுமுகாமையாளர் தகவல்

கொழும்பு, டிசெ. 29

'யாழ்தேவி' ரயில் சேவை எதிர்வரும் ஏப்ரல் முதல் ஓமந்தைவரை நீடிக்கப்படும் என ரயில்வே பொதுமுகாமையாளர் பி.பி. விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரையான 10 கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதைகள் மீளமைக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுவதோடு ஓமந்தை ரயில் நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் -

சுமார் 2 தசாப்தங்களின் பின்னர் யாழ்தேவி ரயில் சேவை ஓமந்தைவரை பயணிக்க உள்ளது என்றும் பொதுமுகாமையாளர் பி.பி.விஜேசேகர கூறினார்.

400 மில்லியன் ரூபா செலவில் ரயில் பாதை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. ஓமந்தை ரயில் நிலையத்தை மீளமைக்கும் பணிகளை பிரதியமைச்சர் லயனல் பிரேமசிறி பொறுப்பேற்று முன்னெடுத்து வருகிறார்.

மோதல் காரணமாக கொழும்பில் இருந்து வவுனியாவரையே ரயில் சேவைகள் இடம்பெற்றன. புலிகள் பிடியில் இருந்த வட பகுதி முழுமையாக மீட்கப்பட்டதையடுத்து வவுனியாவில் இருந்து தாண்டிக்குளம்வரை ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

30 வருடகாலம் நீடித்த மோதல்களின் போது வவுனியாவுக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான ரயில் பாதைகள், ரயில் நிலையங்கள் என்பன புலிகளினால் நாசமாக்கப்பட்டதாகவும் ரயில் தண்டவாளங்கள் 'பங்கர்' அமைப்பதற்காக புலிகளினால் எடுத்துச்செல்லப்பட்டதாகவும் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

யாழ்தேவி ரயில் சேவையை யாழ்ப்பாணம்வரை மீண்டும் ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளதோடு இதற்கான ஏற்பாடுகளை ரயில்வே திணைக்களம் துரிதமாக முன்னெடுத்து வருகிறது. (ஒ)

## யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு இந்தியாவின் செயற்கைக் கால்கள்

கொழும்பு, டிசெ. 29

யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு கால்களை இழந்தவர்களுக்கு இந்தியா செயற்கைக் கால்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

# கனடாவில் எட்டுப் பேர் விடுவிப்பு; இலங்கைக்கு அழைத்து வர ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 29

கனேடிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 8 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனேடிய அரசு அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு இதுபற்றி அறிவித்துள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கிறது.

இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகிறது.

படகு மூலம் கனடாவுக்குள் நுழைய முற்பட்ட இலங்கையைச் சேர்ந்த 76 பேர், அந்நாட்டின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் .இவர்கள் தொடர்பாக கனேடிய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (சி)

# அமில தேரரை விடுவிக்கக் கோரி பிக்குகள் சிலர் சத்தியாக்கிரகம்

கொழும்பு, டிசெ. 29

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவினது சகாவும், தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையத்தின் தலைவருமான வண. தம்பர அமில தேரரை விடுதலை செய்யுமாறு கோரி பௌத்த மத குருமார் சிலர் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவார் எனக் கூறி நிதி மோசடி செய்தார் என்ற குற்றச் சாட்டின் கீழ் தலங்கமப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வண. தம்பர அமில தேரர் கைது செய்யப்பட்டிருந்தார்.

விசாரணையைத் தொடர்ந்து தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தேரரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த பிக்குகள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தேரரின் கைது ஓர் அரசியல் பழிவாங்கல் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையத்தின் செயலாளரும் ஜே.வி.பியின் எம்.பியுமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேரர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்றும் இந்நாட்டு மக்களைப் பிழையாக வழிநடத்த அரசு இதன்மூலம் முயற்சி செய்கின்றது என்றும் விஜித ஹேரத் மேலும் கூறினார்.

# கிழக்கில் கடும் மழை தொடரும் அபாயம்; மக்களின் இயல்பு வாழ்வு பெரும் பாதிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 28

கிழக்கின் தற்போது கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக வெள்ளத்தில் சிக்கிப் பெருந்தொகையாக மக்கள் இடம்பெயர வேண்டி ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக இரண்டாவது தடவையாக இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் அவலம் நீடித்துக் கொண்டே செல்கின்றது.

இம்மாவட்டங்களின் பல பிரதேசங்களிலும் பலத்த வெள்ளம் ஏற்பட்டு நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டிருப்போர் தொடர்பில் பிரதேச செயலகங்கள் கணக்கெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. நிவாரணப் பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நலகிரிக் குளத்தின் வான் கதவு திறந்து விடப்பட்டுள்ளது. இருந்த போதும் முகத்துவாரம் வெட்டப்பட்டிருப்பதால் ஆற்று நீர் முகத்துவாரம் ஊடாக கல்லாறு வாவிகளுக்குச் சென்று கடலில் சங்கமித்துள்ளது.

கிராமங்களிலும், வீதிகளிலும் ஒழுங்கு முறையான வடிகான் வசதிகள் பொதுவாக இல்லை. இதனால் வெள்ளநீர் தாழ் நிலங்களில் தேங்கிக்கிடக்கின்றது.

இந்நிலையில், பல வீதிகளின் போக்குவரத்துக்கள் சீரழிந்துள்ளன. போரதீவுப் பற்று, மண்முனை, தென் எருவில்பற்று, பட்டிப்பாளை, காத்தான்குடி, மண்முனைப்பற்று, ஏறாவூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. களுவாஞ்சிக்குடி, பழம்தோட்டம், எருவில், மகிளூர், மருதமுனை, வெல்லாவெளி, அம்பலாந்துறை, வேத்துச்சேனை, ஆனைகட்டியவெளி, ராணமடு, சின்னவத்தை, பலாச்சோலை, இருதயபுரம், மஞ்சந்தொடுவாய், காத்தான்குடி, ஆரையம்பதி, புதுர், கல்லடி போன்ற கிராமங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வேத்துச்சேனை, காக்காச்சிவட்டை ஆகிய கிராமங்களில் வெள்ள அனர்த்தத்தைத் தொடர்ந்து ஐவர் விஷப் பாம்புகளின் கடிக்கு இலக்காகியுள்ளனர்.

வெள்ளத்தின் காரணமாக களுவாஞ்சிக்குடியில் சைக்கிளை பழுது பார்க்கும் கடை ஒன்று சரிந்து விழுந்துள்ளது. அதேபோல வேத்துச்சேனைக் கிராமத்தில் நான்கு வீடுகள் சரிந்து விழுந்துள்ளன.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் காலை 11.30 மணிவரையான காலப்பகுதிக்குள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகக்கூடுதலான மழை வீழ்ச்சியாக 18.7 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது என்று பதிவாகி உள்ளது.

கடந்த டிசெம்பர் முதலாம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரையான காலப் பகுதிக்குள் 794.8 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது என்று வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

புதிய காத்தான்குடி, வெல்லாவெளி, கிரான், நாவற்குடா, இருதயபுரம், கல்லடி, வவுணதீவு உட்படப் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.

நூற்றுக் கணக்கான மக்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். பல வீதிகள் மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியதால் போக்குவரத்துச் சேவைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பேய் மழையால் நாவிதன்வெளி, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, ஏறாவூர், ஆலையடி வேம்பு, அக்கரைப்பற்று, காரைதீவு, நிந்தவூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட இடங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து இடங்களுமே வெள் ளக்காடாக மாறி விட்டன. இதனால் நாவிதன் வெளிப் பிரதேசம் வெள்ளத்தால் முழுமையாக சூழப்பட்டு தீவுப் பகுதிபோல் ஆகிவிட்டது.

இங்கு அடைமழையாலும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தாலும் 5 ஆயிரத்து 16 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன. 16 வீடுகள் வரை வெள்ளத்தால் முற்றாகச் சேதமடைந்துள்ளன. சுமார் 25 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டு விட்டன. அவற்றுள் சவளக்கடைப் பகுதியில் கமநல சேவைக் கேந்திர நிலையத்தின் கீழ் இயங்கும் ஆயிரத்திற் கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களும் அடங்கும்.

கிட்டங்கி தாம்போதியில் நீர் பரவி வருவதால் மண்டூர் - கல்முனை போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. கிட்டெங்கி தாம்போதி வெள்ளத்தால் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. கல்முனை வீதிஅபிவிருத்தி அதிகார சபை அதனைச் செப்பனிடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 500 குடும் பங்கள் வரைப் பாதிக்கப்பட்டுள்ளன. 150 குடும்பங்கள்வரை இடம் பெயர்ந்துள்ளன.

சாய்ந்த மருதுப் பிரதேச செயலகப் பிரிவில் 7 ஆயிரத்து 300 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளதுடன் 600 குடும்பங்கள் வரை இடம் பெயர்ந்துள்ளன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் 6 ஆயிரம் குடும்பங்கள் வரைப் பாதிக்கப்பட்டு 500 குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்துள்ளன.

அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 20[illegible] குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டு 4[illegible] குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தின் பல பாகங்களில் அடுத்து வரும் ஓரிரு நாட்களுக்குத் தொடர்ச்சியாகப் பலத்த மழை பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

குறிப்பாக வடகிழக்குப் பருவப் பெயர்ச்சி காரணமாக மாலை நேரங்களில் கடும் மழை பெய்யும் என்றும் அது எச்சரித்துள்ளது.

கிழக்குக் கடற்பகுதி வழமைக்கு மாறாக கொந்தளிப்பாகக் காணப்படுகின்றது என்றும் வானிலை அவதான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மல்லாவிப் பிரதேசத்தில் இளம் தம்பதிகள் சுட்டுக்கொலை

மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட வன்னி, மல்லாவிப் பகுதியில் இளம் குடும்பஸ்தர்களான கணவன், மனைவி இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் சம்பவம் இந்தவார முற்பகுதியில் இடம்பெற்றது எனவும் தெரியவருகிறது.

மீள்குடியமர்த்தப்பட்ட பகுதியிலுள்ள இராணுவமுகாமிற்கு அண்மையில் வசித்த இவர்களைப் படைத்தரப்பினர் இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றனர் எனவும், பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன், அநாதரவான இவர்களின் குழந்தைகள் மீண்டும் வவுனியா இடைத்தங்கல் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் இணையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடமாடுகின்றனர் எனவும் அவர்களுக்கு இப்பகுதிகளில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் உணவு வகைகளை வழங்கி வருகின்றனர் எனவும் படையதிகாரிகள் குற்றம்சாட்டி வருகின்றனர் என அங்கு சென்று திரும்பிய அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் குறித்த இளம் குடும்பத்தினர் விடுதலைப் புலிகளுக்கு உணவை வழங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிக்கிறார் எனவும் குறித்த அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

வன்னியில் பல பகுதிகளில் முழுமையாக மக்கள் குடியமர்த்தப்படாத நிலையில் இந்தப் படுகொலையை யார் செய்திருக்கலாம் என உறுதிப்படுத்த முடியாத சூழலில் இந்தச் சம்பவம் அங்கு குடியிருக் கும் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற் படுத்தியுள்ளது எனவும் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் சடலங்கள் அங்கிருந்து அகற்றப்பட்ட நிலையில் அநாதரவான அவர்களது குழந்தைகள் அயலவர்களால் மீட்கப்பட்டு படையினரூடாக வவுனியா இடைத்தங்கல் முகாமில் சேர்க்கப்பட்டனர் எனவும் இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சீன ஆயுதக் கப்பலை திருப்பியனுப்பியமைக்கு தாமே பொறுப்பு என்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, டிசெ. 29

சீன ஆயுதக் கப்பலை திருப்பி அனுப்பியமை தொடர்பான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்றுக் கொள்கிறார் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் யுத்தம் முடிவடைந்த நிலையில் சீனாவினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆயுதக் கப்பலைத் தாமே திருப்பியனுப்பினார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் பெருந்தொகையான ஆயுதங்கள் தேவையில்லாமல் களஞ்சியப்படுத்துவதில் அர்த்தமில்லை என்ற காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த ஆயுதக் கப்பலை ஏற்றுக் கொண்டிருந்தால் சுமார் 3 கோடி 20 லட்சம் அமெரிக்க டொலர்களைச் செலுத்த வேண்டியேற்பட்டிருக்கும் எனவும் அவர் கூறினார்.

பாதுகாப்புச் செயலாளரின் பொறுப்பற்ற செயல்களினால் சீனாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டது என எதிர்கட்சிகளின் பிரதான ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா சுமத்திய குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தக் கப்பலைத் திருப்பியனுப்புவதற்கு முன்னர் சீனாவிற்கான இலங்கைத் தூதுவரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தாம் நிலமைகளை விளக்கினார் எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார். (அ-சி)

### தேர்தல் பிரசாரத்துக்கு அரச சொத்து துஷ்பிரயோகம்

# மஹிந்தர் தரப்புக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, டிசெ. 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச சொத்துகளைத் தவறாகப் பயன்படுத்தித் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவித்து, அதற்கு எதிராக உத்தரவிடக் கோரி, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர்.

'எங்கள் தேசிய முன்னணி' என்ற கட்சியின் சார்பில் இந்தத் தேர்தலில் போட்டியிடும் கே.ஜி.ரவீந்திர லால் பெரேரா என்பவரே இந்த மனுவை நேற்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றார்.

நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, திறைசேரிச் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பு விதிகள் உட்படத் தேர்தல் தொடர்பான 21 விதிகளை இவர்கள் மீறியுள்ளனர் என்ற இந்த மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (சி)

## காணாமற்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைப் பயமுறுத்தி தங்கள் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிடுமாறு தொலைபேசி மூலம் ஒரு கும்பல் அச்சுறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

காணாமற்போனவர்கள் இராணுவத்தினரிடம் உள்ளனர் என்றும் அவர்களை விடுவித்துத்தர லட்சக்கணக்கில் அந்தக் கும்பல் பணம் பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

விஷமத்தனமான இந்த பொய்ப்பிரசாரத்தை நம்பவேண்டாம் என மக்களிடம் கோருகிறோம். இந்தக் கும்பல் இராணுவத்துக்கு அபகீர்த்தி விளைவிக்கின்றது.

இவ்வாறு கப்பம் பெறும் கும்பல் உங்கள் பிரதேசத்தில் செயற்பட்டால் அல்லது நடமாடினால் அருகில் உள்ள இராணுவ முகாமில் அல்லது பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்துங்கள். இரகசியம் பேணப்படும் - என்றுள்ளது.

## இனிமேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த காலக்கட்டங்களில் இலங்கை யில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டி ருந்தது. இதன் காரணமாக அவர் முன் வைத்த பாதுகாப்புப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு அவருக்கு விசா அனு மதிவழங்கப்பட்டது.

எனினும் தற்போது அவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகின்ற நிலையிலேயே அவர் இந்தியாவுக்குள் வருவதற்குதடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சிறப்பு அறிக்கை ஒன்று அனைத்து விமான நிலையங்களுக்கும் இந்திய மத்திய அரசினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறப் படுகிறது. (அ-சி)

## தேர்தல் முடிந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இளைஞர்களை யும் சிறுவர்களை யும் வலுக்கட்டாயமாக அவர் களின் அமைப்பில் சேர்த்தனர். அப் போது பெற்றோர்கள் மௌனமாக நின்றனர். இப் போது அந்தப் பெற்றோர்கள் அவர் களின் பிள்ளைகளின் கல்வியைப் பற்றிப் பேசுகின்றனர். இதற்குக் காரணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான்.

இதன் காரணத்தால் வடக்கு - கிழக்கு மக்கள் ஜனாதிபதிக்கு நன்றிக்கடனைச் செலுத்துவதற்காக இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களில் சுமார் இரண்டு லட்சம் பேர் மீள் குடியமர்த்தப்பட்டு விட்டனர். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் எஞ்சியுள்ள ஒருலட்சம் பேரும் மீள்குடியமர்த்தப்படுவர். ஜனாதிபதித் தேர்தல் முடிந்து நான்கு நாள்களில் வடக்கில் உள்ள அகதி முகாம்கள் அனைத்தும்மூடப்படும்.

மஹிந்த ராஜபக்ஷவின் நான்கு வருட ஆட்சிதான் இந்த நாட்டின் நல்லாட்சி.

இனிமேலும் அவர் தான் இந்நாட்டை ஆளப்போகின்றார். அவரை எதிர்த்துப் போட்டியிடும் சரத் பொன்சேகாவால் வெற்றிபெற முடியாது.

பொன்சேகா வெற்றிபெற்று ஆறு மாதங்களுக்குள் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழிப்பார் என்பது நடக்கப்போகிற கதையல்ல. அவர் வென்றால் ஆறு நிமிடங்களில் இந்நாட்டில் இராணுவ ஆட்சி வந்துவிடும். - என்றார். (அ-சி)

## விசாரணைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்ட சுமார் 11 ஆயிரத்து 500 பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்கள் தவிர இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து நிவாரணக் கிராமங்களுக்கு வந்து சேர்ந்தவர்களுள் பலர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். அவர்களில் சந்தேகத்திற்கிட மானவர்கள் தொடர்ந்தும் விசாரிக்கப்படும் நிலையில் 700 பேர் இவ்வாரம் விடுதலையாகின்றனர்.

இவர்களை மீளக்குடியமர்த்துவதற்காக அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.(அ-ஒ)


CHEMISTRY
2012 - A / L
ஆரம்பம் 30-12-2009
தமிழ்மொழி மூலம் 3.30 p.m. ,
English Medium 5.30 p.m.
DAY CLASS - 2010 A / L
பிரிவு II ஆரம்பம் 03-01-2010
4.30 p.m.
83/19, Arasady Road, Jaffna
KALA

THESCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS - 2012 A / L
ஆரம்பம் - 30-12-2009
புதன் - 4.30-5.30 p.m.
By :- வழமையான ஆசிரியர்.

A/L 2012 கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
அனுமதிகள் இன்று முதல்...
NEC Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
ஆரம்பம் ஜனவரி 02 சனிக்கிழமை காலை 8.00 மணி

THE SCIENCE CORNER Clock Tower Lane, Jaffna

| CHEMISTRY 2012 | இரசாயனவியல் - 2012 |
|---|---|
| (English Medium) | (தமிழ்மொழி மூலம்) |
| Commence on - 29.12.2009 | ஆரம்பம் - 29.12.2009 |
| BATCH - I Tue, Thu 4.30 - 5.30 p.m. | பிரிவு - I Tue, Thu 3.30 - 4.30 p.m. |
| BATCH - II Sat, Sun 7.00 - 8.00 a.m. | பிரிவு - II Sat, Sun 3.30 - 4.30 p.m. |

By: Rajah

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ். றோட், இணுவில்.
← (இருஇடத்தில்) →
ஆரம்பமாகின்றது
A / L - 2012
கலை, வர்த்தகப்பிரிவு
ஜனவரி 2 இல்
Note :- எமது மற்ற நிறுவனமான
BARATHY
சித்தன்கேணியில்
அங்கும் இதே நாளில் ஆரம்பமாகிறது.
உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளவும்.


## மரண அறிவித்தல்

### சாரதாமணிதேவி அருளானந்தம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சாரதாமணிதேவி அருளானந்தம் நேற்று (28.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம் (சிங்கபூர் பென்சனியர்) - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருளானந்தத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற விஜயசிங்கம் மற்றும் இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தேவதாசின் மைத்துனியும், தயாளினியின் (ஆசிரியர், யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி.) பெரியம்மாவும் சிறிசண்முகாவின் (சர்வோதயம்) மாமியும் சிறிகணனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2009) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
இளவாலை வடக்கு,இளவாலை. சி.சிறிசண்முகா (மருமகன்)


டெங்கு காய்ச்சல் பற்றி விழிப்பாக இருப்போம்.



டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டால்,
உடனடியாகவே உரிய வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்வதுடன்
நோய் குணமடையும் வரை,
நன்கு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
பாடசாலை, வேலைத்தலங்களுக்குச் செல்வதைத் தவிருங்க
போதுமானளவு நீராகாரங்கள் உட்கொள்ளுங்கள்.
காய்ச்சல் இருந்தால் பரசிற்றமோல் வகை மருந்துகளைப் பாவியுங்கள். அஸ்பிரின் வகை மருந்துகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
❖ சிகிச்சையைப் பெறுவதுடன் நோயறிகுறிகள் தொடர்பில் அவதானமாயிருங்கள்.

தகவல் : சுகாதாரத்திணைக்களம் யாழ்ப்பாணம்.
TRRO LIMITED
அனுசரணை: TRRO
UNHCR The UN Refugee Agency
நிதியுதவி UNHCR


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org